419

# திருப்புகலூர்த் தலவரலாறு

169

419
3-57

G. கலியாணம், M.A., D. Econ.

திருப்புகலூர் அக்கினீசுவரர் தேவஸ்தான
வெளியீடு.

Q23:38.21.93T6
N62.3
110004

உ

சிவமயம்

# திருப்புகலூர்த் தலவரலாறு

எழுதியவர் :

G. கலியாணம் பிள்ளை M A., Dip. Econ.,

ஆசிரியர் 'திருக்கோயில்'

அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத்துறை

சென்னை.

வெளியிட்டவர் :

M. D. தியாகராஜ பிள்ளை M.L.A.

R. இராதாகிருஷ்ண நாயுடு

தருமகர்த்தர்கள்

N. சீனிவாசன் B.A., B.L.,

பொருளாளர்.

ஸ்ரீ அக்கினீசுவரர் தேவஸ்தானம்

திருப்புகலூர்

முதற் பதிப்பு, 1942
இரண்டாம் பதிப்பு, 1948
மூன்றாம் பதிப்பு, 1959

**விலை ரூபாய் ஒன்று.**

இடையறாப் பேரன்பு மழைவாரு மிணைவிழியும்
உழவா ரத்தின்
படையறாத் திருக்கரமுஞ் சிவபெருமான் திருவடிக்கே
பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன்
ஞானப் பாடல்
தொடையறாச் செவ்வாயுஞ் சிவவேடப் பொலிவழகுந்
துதித்து வாழ்வாம்

110004

பாரி அச்சகம், 127, பிராட்வே, சென்னை-1.



முருகநாயனர்



திருநாவுக்கரசு சுவாமிகள்

# முன்னுரை

தமிழகம் திருக்கோயில்கள் நிறைந்த நன்னாடு. பல திருத்தலங்களிலுள்ள திருக்கோயில்களுக்கும் சென்று நம் சமயாச்சாரியர்கள் சம்பந்தர், அப்பர் சுந்தரர் மூவரும் தேவாரப் பதிகங்களைப் பக்தி பரவசத்துடன் பாடியுள்ளனர். அவர்கள் பாடிய பதிகங்கள் பல்லாயிரக்கணக் கானவையெனினும் நம்பியாண்டார்நம்பி யருளால் நமக்குக் கிடைத்திருப்பவை சிலவே. அவ்வாறு தேவாரப் பாடல்கள் பெற்ற தலங்கள் **274** என்பர். திருக்கோயில் சுவரில் பதிகமொன்றைக் கொண்டுள்ள திருவிடவாயில் என்ற திருப்பதியையும், 'ஒன்றுகொலாம்' என்று தொடங்கும் பதிகம் பெற்ற திங்களூர் என்ற திருப்பதியையும் சேர்த்து **276** என்றும் கணக்கிடுவதுண்டு. அவற்றுள் மூவர் பாடல்களும் பெற்ற திருத்தலங்களுள் அப்பர் சுவாமிகள் அரனடி சேர்ந்த தனிச்சிறப்புடையது திருப்புகலூர்.

'செய்தவத்தார் மிகுதேரர்கள் சாக்கியர் செப்பிற்பொருளல்லாக்
கைதவத்தர் மொழியைத்தவிர்வார்கள் கடவுள்ளிடம் போலும்
கொய்து பத்தர் மலரும்புனலுங்கொடுதூ வித்துதி செய்து
மெய்தவத்தின் முயல்வாருயர் வானகமெய்தும் புகலூரே.'

என்பது காழியுண் ஞானசம்பந்தப் பெருமான் தமிழ் மாலை.

திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்டு 'சிவனெனும் ஓசையல்ல தறையோவுலகிற் றிருநின்ற செம்மை யுளதே' என்று பாடிய திருநாவுக்கரசு சுவாமிகள்,

'பொருவரையாய் உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே'

என்று சிவபெருமான் திருவடி நீழலை எய்திய திருத் தலம் திருப்புகலூர். இது முருகநாயனார் அவதாரத் தலம். இங்குள்ள திருக்கோயிலுள் வர்த்தமானீச்சரம் என்ற தலமும் உள்ளது. இத்தலத்தில் முருகநாயனார் புலரும் பொழுதின்முன்னெழுந்து புனித நீரில் மூழ்கி அலகில் மலர்கள் வெவ்வேறு திருப்பூங் கூடைகளி லமைத்து தனியிடத்திருந்து கோவைகளும் இண்டைச் சருக்கும் தாமமுடன் இணைக்கும் வாச மாலைகளும் நுண்டாதிறைக்கும் தொடையல்களும் சமைத்து அன்பி னொடுஞ் சாத்தி வாய்ந்த அர்ச்சனைகள் செய்து ஆளு டைய பிள்ளையார்க்கு நண்பருமாம் பெருமையுடையரா யினார்.

தொண்டர் தண்கயமூழ்கித்துணையலுஞ் சாந்தமும் புகையும்
கொண்டுகொண்டடிபரவிக் குறிப்பறி முருகன் செய்கோலம்
கண்டுகண்டுகண்குளிரக் களிபரந்தொளிமல்கு கள்ளார்
வண்டுபண்செயும் புகலூர் வர்த்த மானீச்சரத்தாரே

என்று பாராட்டப்பெற்ற திருமுருக நாயனார் இத்தலத் தில் சம்பந்தர், அப்பர், சிறுத்தொண்டர், நீலநக்கர் முத லிய பல சிவனடியார்களை வரவேற்று உபசரித்து மகிழ்ந்த மடமும், அப்பர் பெருமான் பெயரால் அமைந்த மடமும் தோன்ற ஆலய நிர்வாகக் குழுவினர் விரைவில் ஆவன செய்வார்கள்.

சுந்தரமூர்த்திசுவாமிகளும் இத்தலத்துக்கு வந்து, 'தம்மையே புகழ்ந்து இச்சைபேசினும்' என்று துவங்கும் திருப்பதிகம் பாடிப் பரவிச் செங்

கல்லைப் பொன் கல்லாக்கிக் கொண்டதோடு புகலூர்ப் பெருமானைப் பாடும் புலவர்க்கு, 'இம்மையே தரும் சோறும் கூறையும்', அவர் இடர் கெடலுமாம் அம்மையே சிவலோகமும் ஆளலாம், யாதுமையுறவில்லையே என்று போற்றியுள்ளார்.

மூவராலும் பாடப்பெற்ற சிறப்பு வாய்ந்த தலம் திருப்புகலூர். மூர்த்திகள் இருவர் பாடல் பெற்றவர். கருத்தார்க்குழலி சமேத அக்கினீவசுரர், மனோன்மணி சமேத வர்த்தமானீச்சரர், பூதேசுவரர், பவிஷயேசுவரர், சிந்தாமணீஸ்வரர் ஆலயங்களும் பல லிங்கங்களும் பிரகாரத்தில் உள்ளன. தல விருக்ஷம் புன்னை. ஆலயத்தைச் சுற்றி அக்கினிதீர்த்தம் அழகாக அமைந்துள்ளது.

பக்தியும் செல்வமும் நிறைந்த தாசியொருத்தியின் உதவியால் அக்கினி தீர்த்தக் கரையில் உள்ள ஞானவிநாயகருடைய திருக்கோயில் முன்பு நெற்குன்றவாணர் என்ற புலவர் அந்தாதி நூலொன்றியற்றியுள்ளார்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த தலத்தைப் பற்றிய புராணம் எளிய இனிய தமிழ் நடையில் திரு. G. கலியாணம் பிள்ளையவர்களால் **1942**-ம் ஆண்டு எழுதப் பெற்றது. **1948**-ம் ஆண்டு இரண்டாவது பதிப்பு வெளியிடப் பெற்றது. இப்போதுள்ள ஆலய நிர்வாகக்குழுவினர் நன்முயற்சியால் பல அரிய திருப்பணிகள் செய்யப் பெற்றுச் சிறந்த முறையில் கும்பாபிஷேகம் நடைபெறும் இந்நன்னாளில் பல புதிய பகுதிகளுடன் இந்நூல் மூன்றாம் பதிப்பாக வெளிவருவது சாலப்பொருத்தமே. திரு. G. கலியாணம் பிள்ளையவர்கள் இப்போது அறநிலையப் பாதுகாப்புத்துறை அலுவலகத்தில் " திருக்கோயில் " என்ற

*மாதப் பத்திரிகையில் ஆசிரியராகப் பணிசெய்து வருகிறார். அவருடைய முதல் பதிப்பையே அடிப்படையாகக் கொண்டு சில திருத்தங்களுடனும் சிறப்பியல்புகளுடனும் அவரால் இந்த நூல் இப்போது எழுதப்பெற்றுள்ளது. அவருக்கும், ஆலய நிர்வாகக் குழுவினருக்கும் சைவ உலகம் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.*

சாமிதாதை சரணுகுமென்று தலைசாய்மினே
பூமியெல்லாம் புகழ் செல்வ மல்கும் புகலூரையே.'

*—சம்பந்தர்.*

தொண்டராகித் தொழுதுமதிப்பவர்
புண்டரீகத்துளார் புகலூரரே. *—அப்பர்.*

**அ. உத்தண்டராமன்,**
*ஆணையாளர்,*
*அறநிலையப் பாதுகாப்புத்துறை, சென்னை.*
24—6—1959.

# பொருளடக்கம்


1. திருத்தல இருப்பிடம்
2. திருக்கோயில் அமைப்பு
3. தலப் பெயர்கள்
4. மூர்த்திகள்
5. தீர்த்தம்—தலவிருட்சம்
6. தலப் பெருமை
7. திருவிழாக்கள்
8. புராண வரலாறு
9. நெற்குன்றவாணர்—சிந்தாமணீ
10. பதியைப் பற்றிய நூல்கள்
11. கல்வெட்டுக்கள்
12. சிற்ப ஓவியங்கள்
13. திருப்பணிகள்
14. ஆலய நிர்வாகம்

திரு இராமனதீச்சரம்

திருப்புகலூர்த் தேவாரம்


திருப்புகலூரந்தாதி

திருஇராமனதீச்சரத்தேவாரம்

கல்வெட்டறிக்கை



கலியாணசுந்தரர்



அக்கினிபகவான்

உ

சிவமயம்

# திருப்புகலூர்த் தலவரலாறு

## 1. திருத்தல இருப்பிடம்

தாது சூழும் குழல்மலையாள்
  தளிர்க்கை சூழும் திருமேனி
மீது சூழும் புனற்கற்றை
  வேணி நம்பர் விரும்புபதி
சோதி சூழும் மணிமௌலிச்
  சோழர் பொன்னித் திருநாட்டுப்
போது சூழும் தடஞ்சோலைப்
  பொய்கை சூழும் பூம்புகலூர்.

—சேக்கிழார் பெரியபுராணம்.

உலகத்திலுள்ள அனைத்துயிர்களும் உய்யும் வண்ணம் இறைவன் கொண்டருளிய திருக்கோலங்கள் பல. ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாத பெருமானுக்கு ஆயிரம் திருநாமங்கள் சூட்டி திருவுருவங்கள் அமைத்துக் கோயில்களில் எழுந்தருளப் பண்ணி வழிபடுகிறோம். எண்ணிறந்த திருக்கோயில்கள் நிறைந்தது தெய்வச் செந் தமிழ் நாடு. "வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்

தலைய கடற்காவிரி புனல்பரந்து பொன் கொழிக்கும்'' பொற்புடையது பொன்னி நாடென்னும் சோழநாடு. இவ் வள நாட்டில் பல பாடல் பெற்ற சிவத்தலங்கள் திகழ் கின்றன. அவைகளுள் ஒன்று **திருப்புகலூர்** என்னும் திருவூர். இத்தலம் தஞ்சாவூர் மாவட்டத்தின் நன்னிலம் கோட்டத்தில் உள்ளது. தென் இருப்புப்பாதையில் மாய வரம் சந்திப்பிலிருந்து மாயவரம்—காரைக்குடி கிளைவழி பிரிகிறது. அக்கிளை வழியில் மாயவரமிருந்து பதினைந்து கல் தொலைவில் நன்னிலம் என்ற புகைவண்டி நிலையம் இருக்கிறது. திருப்புகலூர் செல்வதற்கு மோட்டார் வண்டிகள், குதிரை வண்டிகள், மாட்டு வண்டிகள் கிடைக்கும். நன்னிலத்திலிருந்து கிழக்கே நாகூருச் செல் லும் கற்சாலை ஒன்றுண்டு. அது முடிகொண்டான் என்ற ஆற்றின் வடகரையின் மேலேயே அழகாக அமைந்திருக் கிறது. அச்சாலையில் மூன்றரை கல் தொலைவு சென்று வடக்கே செல்லும் கிளைச் சாலையில் கால் கல் தூரம் சென் ருல் திருப்புகலூரை அடையலாம். அக்கிளைச் சாலைப் பிரியுமிடத்தில் யாத்ரீகர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு **திருப்புகலூர் அக்கினீசுவரர் கோயில்—அப்பர் முத்தி பெற்ற தலம்** என்று பொறிக்கப்பெற்றிருக்கும் ஒரு பெருவாயில் எழுப்பப்பட்டிருக்கிறது.

## 2. திருக்கோயில் அமைப்பு

திருக்கோயில் ஊரின் நடுவே கிழக்கு நோக்கி அமைந் திருக்கிறது. தொண்ணூறுஅடி உயரமுள்ள அற்புத சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த ஐந்து நிலைக்கோபுர மொன்று கோயிலின் வாயிலை அழகு செய்கின்றது; அண்

மையில் பல வண்ணங்கள் தீட்டப்பெற்று மிக்க வனப்புடன் வானுற நிமிர்ந்து கம்பீரத் தோற்றமளிக்கின்றது. கோயிலின பரப்பு 73,125 சதுர அடி; கீழ்மேல் மதில் நீளம் 325 அடி; தென்வடல் மதில் நீளம் 225 அடி. கோயிலில் இரண்டு பிரகாரங்கள் உள்ளன. மதிலுக்கு வெளியில் நாற்புறமும் நந்தவனம் இருக்கின்றது. அதற்கு **அப்பர் நந்தவனம்** என்று பெயர். கோயிலையும் நந்தவனத்தையும் சுற்றி நான்கு புறங்களிலும் நீர் நிறைந்த அகழ் சூழ்ந்திருக்கிறது. அவ்வகழின் அகலம் சுமார் 130 அடி இருக்கும். கோயிலுக்குத் தென்கிழக்கு மூலையில் அகழின் ஒரு பாகம் தூர்க்கப்பட்டுக் கோயிலுக்குச் செல்வதற்கு வழியாக உள்ளது. முற்காலத்தில் கோயில் முழுமையும் அகழ் சூழ்ந்திருந்ததென்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. அக்காலத்தே மக்கள் படகில் ஏறி அகழியைக் கடந்து கோயிலுக்குட்சென்று இறைவனை வழிபட்டிருக்க வேண்டும். பிற்காலத்தே கோயிலுக்கு எளிதில் நேரே செல்லும் பொருட்டு அகழின் ஒரு பகுதி தூர்க்கப்பட்டு வழியேற்படுத்தப்பட்டிருக்கிறது. அகழ் சூழ்ந்த கோயில்கள் நம் நாட்டில் ஒரு சிலவே யுள்ளன. ஆதலின், இக்கோயிலை அகழ் சூழ்ந்திருப்பது ஒரு தனிச் சிறப்பைத் தருகிறது; கோயிலுக்கு அழகிய தோற்றத்தையும் அளிக்கிறது. இந்த அகழுக்குப் பாய்கால், வடிகால்களும் உள்ளன. பாய்கால் ஏனங்குடி என்னும் ஊருக்கருகில் முடிகொண்டான் ஆற்றிலிருந்து ஒன்றரை கல் தொலைவு வந்து மேற்குப்புற அகழில் சேருகிறது. வடிகால் அகழின் வடகிழக்கு மூலையில் தொடங்கி நேர் வடக்காக ஒரு கல் தொலைவு சென்று திருமலைராஜன் ஆற்றில் சேருகிறது.

## 3. தலப் பெயர்கள்

இப்போது இத்தலத்தின் வழங்கும் பெயர் **திருப்புகலூர்** என்பது. இப்பெயரே தேவாரம், பெரிய புராணம், இவ்வூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் முதலியவைகளில் காணப்படுகிறது. பிறவிக்கஞ்சிய உயிர்கள் வந்து புகலடைய (சரணடைய)த் தக்க ஊர் என்ற பொருளில் **புகலூர்** என்ற பெயர் வந்தது. "தன்னைச் சரணென்று தாளடைந்தேன்" என்ற அப்பர் திருவாக்கும், "சாமிதாதை சரணு மென்று தலை சாய்மினோ" என்ற சம்பந்தர் அருள் வாக்கும் இதற்கு ஆதரவு தருவன. இங்கெழுந்தருளிய இறைவனைத் தீக்கடவுள் வழிபட்டமையால் **அக்கினீசம்** என்ற பெயரும் உண்டு. மூலத்தானத்திலுள்ள சிவலிங்கத் திருமேனி சிறிது சாய்ந்திருப்பதால் **கோணேசம்** எனவும் பெயர் பெறும். புன்னைமரம் தலவிருட்சமானபடியால் **புன்னாகவனம்** என்றும் சொல்லுவர். **சரண்யபுரம், சரண்யபுரி, இரக்தாரண்யம்** என்ற வடமொழிப் பெயர்களும் இத்தலத்திற்குள்ளன. திருப்புகலூர்க் கோயிலுக்குள்ளே **வர்த்தமானீச்சரம்** என்ற தனிச் சந்நிதியும் இருக்கிறது. அது பாடல் பெற்ற ஒருதலமாகக் கணக்கிடப்பட்டு, சம்பந்தர் திருப்பதிகம் ஒன்றும் அதற்குத் தனியே இருக்கிறது.

## 4. மூர்த்திகள்

திருப்புகலூருக்குள் நுழையும்போது தென்புறத்தகழின் தென்கரையில் விநாயகர் கோயில் முதலில் தென்படும். அங்குள்ள மூர்த்திக்கு **ஞானவிநாயகர்** என்று திரு

நாமம். நெற்குன்றவாணர் என்பவர் இயற்றிய திருப புகலூர் அந்தாதிக்குக் **காப்புச் செய்யுள்** இவ்விநாயகர் திரு முன்புதான் பாடினர் என்பது வரலாறு. இந்த கண பதியை வணங்கிய பின் வடக்கே சென்று மேற்கே திரும் பினல் இறைவன் சந்நிதியிருக்கிறது.

கிழக்கே நோக்கியுள்ள இராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் கொடிமரம், பலிபீடம், நந்தி இவை கள் உள்ளன. இவைகளையும் தாண்டி இரண்டாவது திரு வாயில் வழியே சென்றால் **திருப்புகலூர் நாதர்** சந்நிதி இருக் கிறது. இறைவனின திருநாமங்கள் அக்கினீசுரவர், அக் கினிபுரீசுவரர், சரண்யபுரீசர், புன்னகநாதர், பிரத்தி யட்ச வரதர், கோணப்பிரான் என்பன. புகலூர் தேவர், திருப்புகலூர் மகாதேவர், கோணற்பெருமாள் என்ற பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. “தொல்லை நீர்ப்புகலூர்க் கோணப்பிரானைக் குறுகக் குறுகா கொடுவினையே” என்று திருநாவுக்கரசர் தேவாரத் தில் குறிக்கிறார். இறைவன் திருமேனி சிறிது சாய்ந்திருப் பதால் இப்பெயர் ஏற்பட்டது.

அக்கினீசுவரர் சந்நிதிக்கு வடபால் **வர்த்தமானீசுவரர்** திருக்கோயில் அமைந்துள்ளது. சந்நிதி கிழக்கு பார்த்தது. அதைப் பாடல் பெற்ற பதியாகத் தனியே கணக்கிடப்பட் டிருக்கிறது. சம்பந்தருடைய பதிகம் ஒன்றும் இதற்குண்டு. வர்த்தாமானீசுவரர் சந்நிதியின் வலது புறத்தில் **முருக நாயனர்** திருவுருவம் இருக்கிறது. இடது பக்கம் தேவி தெற்கு முகமாக எழுந்தருளியுள்ளாள். இவ்விறைவிக்கு **மனேன்மணி, வர்த்தாமனீசுவரி** என்ற திருப்பெயர்கள் உண்டு. இந்த சந்நிதி மண்டபத்துக்குள்ளேயே கணபதி, முருகன், சண்டேசுவரர் இவர்கள் திருவுருவங்களும் உள்

ளன. திருவாரூர்—திருவாரூர் அரநெறி, திருமீயச்சூர்—திருமீயச்சூர்—இளங்கோயில் என்று இரண்டு பாடல் பெற்ற பதிகள் ஒரே கோயிலுக்குள் அமைந்திருப்பது போல் திருப்புகலூர்க் கோயிலுக்குள் திருப்புகலூர், திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் என்ற இரண்டு பாடல் பெற்ற சிவத்தலங்கள் இருக்கின்றன. இதுவும் இத்தலத்திற்குத் தனிச் சிறப்பைத் தருகிறது.

அக்கினீசுவரர் கர்ப்பக்கிரகத்துக்கு முன் மண்டபத்துக்குத் தெற்கே **சந்திரசேகரர்** சந்நிதி இருக்கிறது. கிழக்கு நோக்கியது. இந்த சந்நிதிக்கு நேர் எதிரில்தான் அக்கினி பகவான் மேற்கு பார்க்க இருக்கிறார். இத்தலத்தில் சந்திர சேகரர் சந்நிதி மிகவும் சிறப்புடையது.

உட்பிரகாரத்தை வலம் வரும்போது முதலில் காணப் படுபவர் **அக்கினிபகவான்**. அவர் இத்தலத்தில் வழிபட்டுப் பேறுபெற்றமையால் இறைவனுக்கே அக்கினீசுவரர் என்று பெயர் ஏற்பட்டதாகத் தலபுராணம் கூறுகிறது. அக்கினிபகவான் திருவுருவத்தில் இரண்டு முகங்கள், ஏழு சுடர்கள், மூன்று பாதங்கள், ஏழுகைகள் காணப்படுகின்றன. கருவூர்த்தேவர் 'திருவிசைப்பாவில்,

திருமகன் முருகன் தேவியேல் உமையாள்
    திருமகள் மருமகன் தாயாம்
மருமகன் மதனன் மாமனேல் இமவான்
    மலையுடை யரையர்தம் பாவை
தருமலி வளனுஞ் சிவபுரன் தோழன்
    தனபதி சாட்டியக் குடியார்
இருமுகங் கழல்மூன் றேழுகைத் தலமேழ்
    இருக்கையி லிருந்தஈ சனுக்கே

என்று அழல்வடிவான இறைவனைப் பாடியிருப்பது இக் கோயில் அக்கினி பகவான் திருவுருவத்தைக் காணும்போது நினைவுக்கு வருகிறது.

தென் கிழக்கு மூலையில் **நால்வர், பாணசுரன்** திருவுருவங்கள் வடக்கு நோக்கி யிருக்கின்றன. உட்பிரகாரம் தென் திருமாளிகைப் பத்தியில் **அறுபத்து மூவர்** எழுந்தருளி யிருக்கின்றனர். **ஜமதக்கினி பூசித்த லிங்கமும்** அங்கிருக்கின்றது.

இப்பிரகாரத்தின் தென் மேற்கில் **அகோரலிங்கமும், பூதேசுவரரும்** தனித்தனிக் கோயில்களில் எழுந்தருளியுள்ளனர். அக்கினீசுவரர் கர்ப்பக்கிரகத்தின் தென் சுவரின் வெளிப்புறத்தில் **அகஸ்தியர், நடராஜர், கணபதி, தட்சணா மூர்த்தி** இவர்களின் அழகிய திருவுருவங்கள் அமைந்திருக்கின்றன; மேல்புறம் **இலிங்கோற்பவரும்**, வடபுறம் **அஷ்ட புஜதுர்க்கை, பிரமன், கௌரிலீலாவிநோதர்** இவர்களின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. கௌரிலீலை என்ற பார்வதி பரமசிவ உருவங்கள் மிக்க அற்புதச் சிற்பவேலைப் பாட்டுடன் திகழ்கின்றன. வர்த்தமானீசுவரர் கர்ப்பக்கிரக வடபுறச் சுவரின் பக்கம் **சதுர்புஜதுர்க்காம்பிகை** எழுந்தருளி யிருக்கிறாள். உள் பிரகாரம் மேற்குத் திருமாளிகைப் பத்தியில் தென் கோடியில் **வாதாபிகணபதி** காட்சியளிக்கிறார். அதற்கும் வடபால் **அப்பர் சுவாமிகள்** மூலவர் - உற்சவர் களும், **அப்பூதியடிகளும்** எழுந்தருளியிருக்கின்றனர்.

இன்னும் அதே பத்தியில் வரிசையாக, ததீசி முனிவர் பூசித்தலிங்கம், பராசரர் பூசித்தலிங்கம், பிருகுமுனிவர் பூசித்தலிங்கம், சுப்பிரமணியர், சுப்பிரமணியர் பூசித்த லிங்கம், புலஸ்தியர் பூசித்தலிங்கம், ஜாபாலி பூசித்தலிங்

கம், மகாலட்சுமி இவர்களுடைய சந்நிதிகள் இருக்கின்றன. எல்லாம் கிழக்குப் பார்த்தவை.

உள் பிரகாரத்து வடக்குத் திருமாளிகைப் பத்தியின் மேல் கடைசியில் **சனீசுவரரும் நளனும்** கோயில் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்குக் கீழ்புறம் **அன்னபூரணியும், சரசுவதியும்** எழுந்தருளியிருக்கின்றனர். அருகில் **நவக்கிரகங்கள்** காணப்படுகின்றன. மற்ற கோயில்களில் உள்ள நவக்கிரகங்கள் பல திசைகளை நோக்கியிருக்கும். ஆனால் இக்கோயிலில் **ட** போல் இரண்டு வரிசைகளில் நிற்கின்றன. தென் வடலாக—சூரியன், சந்திரன், அங்காரகன், புதன் இந் நால்வர்கள் கிழக்கு நோக்கியும், மேற்கிருந்து கிழக்காக—வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது, இவர்கள் தென்முகம் நோக்கியும் நிற்கின்றனர். மிகவும் பழங்கால விக்கிரகங்களாகத் தோன்றுகின்றன.

அதே திருமாளிகைப் பத்தியில் **காசிவிசுவநாதர், திரிமுகாசுரன், காலசம்மாரமூர்த்தி** இவர்களின் உருவங்கள் தெற்கு நோக்கியுள்ளன, திரிமுகாசுரனுக்கு மனிதன், பறவை, பன்றி என்ற மூன்று முகங்கள் இருக்கின்றன. திரிமுகாசுரன், பன்றி முகத்தால் நீரும், பறவை முகத்தால் மலரும் கொண்டு வந்து, மனித முகத்தால் இறைவனை வழிபட்டான். மற்ற நேரங்களில் அடியார்களைத் துன்புறுத்தினன். கந்தமாதன முனிவர் இங்கே தவம் செய்து கொண்டிருப்பவரைக் கொல்லப்போனன். இறைவன் அவனைக் கொன்ருர். சிவபெருமானை அவன் வழிபட்ட புண்ணியத்தின் பயனுக அவன் புன்னைமரம் ஆனன். பறவை, பன்றி, மனிதன் இவை முறையே மனம், வாக்கு, காயம் என்ற மூன்றையும், அப்படித் திரிகரணசுத்தியோடு

இறைவனை வணங்கவேண்டும் என்பதையும் குறிக்கும் என்று அறிஞர் கருதுகின்றனர்.

**புன்னை மரமே** இத்தலத்தின் விருட்சம். அது வடக்கு உள் பிரகாரத்தில் இருக்கிறது. அதற்கு எதிரில் **பவிஷ்யேசுவரர்** சந்நிதி மேற்கு நோக்கியிருக்கிறது. அதே பிரகாரத்தில் **சண்டேசுவரர், வாமதேவர் பூசித்தலிங்கம்** இந்த சந்நிதிகளும் இருக்கின்றன. உள் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் **நடராஜர், சிவகாமசுந்தரி** சந்நிதியும், **திருமுறைக்கோயிலும்** உள்ளன. இதற்கு அருகில் மேற்கு நோக்கி **சூரியபகவானும், பைரவரும்** எழுந்தருளியுள்ளார்கள்.

உட்பிரகாரத்தை வலம் வந்த பின் உள் கோபுரவாயில் வழியாக வெளிப் பிரகாரத்திற்கு வருகிறோம். அக்கோபுரத்தின் கீழுள்ள குடைவறையில் **அதிகாரநந்தியும்,** அவர் தேவியான **ஜ்வாலாகேசியும்** காட்சியளிக்கின்றனர்.

வெளிப் பிரகாரத்தில் நந்தி, பலிபீடம், கொடிமரம் இவைகளின் வடபுறம் **அம்பிகை** சந்நிதி இருக்கிறது. கருந்தாழ்குழலி, கருந்தார்க்குழலி, சூளிகாம்பாள் என்பவை தேவியின் திருநாமங்கள். அம்பாள் சந்நிதிக்குத் தெற்கே பதினாறுகால் வசந்த மண்டபம் இருக்கிறது. அதில் திருவிழாக் காலங்களில் உற்சவ மூர்த்திகளை எழுந்தருளச் செய்கிறார்கள்.

வெளிப் பிரகாரத்தின் தென் கிழக்கு மூலையிலுள்ள மடைப் பள்ளிக்கு மேற்கே **சிந்தாமணீசுவரர்** சந்நிதி கிழக்கு நோக்கி யிருக்கிறது. இக்கோயில் **சிந்தாமணி** என்னும் பொது மாது கட்டியதாகக் கூறப்படுகிறது. அதே பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் **விஷ்ணு பூசித்தலிங்கம், நிர்த்தனகணபதி** இவர்களின் கோயில்கள் இருக்கின்றன.

வடகிழக்கு மூலையில் யாகசாலையிருக்கிறது. அதன் கீழ்ப்புற மதில் சுவரில் அப்பர் பெருமான் சிவலிங்கத்தில் இரண்டறக் கலக்கும் காட்சியும், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர், முருகநாயனர் திருவுருவங்களும், அக்கினிபகவான், ஆதிசேடன் இவர்களின் உருவங்களையும் காணலாம். அப்பர் பெருமானைச் சிவபெருமான் ஒரு சிங்க ரூபமாக வந்து விழுங்குவது போன்ற உருவம் கிழக்கு மதில் சுவர்க்கல்லில் முன்னே செதுக்கப்பட்டிருந்தது. அப்பர் சுவாமிகள் அருளிய கடைசி திருத்தாண்டகச் செய்யுள் ஒன்றில் 'சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்' என்பதை அதற்கு ஆதாரமாகச் சொல்லப்பட்டது. வாகீசப் பெருந்தகையார் 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்', 'போரேறே உன்னடிக்கே போதுகின்றேன்', 'புரிசடையாய் உன்னடிக்கே போதுகின்றேன்' என்று கூறியது போல் 'சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன்' என்று கூறினரேயன்றி சிங்கமாக வந்து விழுங்கவேண்டுமென்று விண்ணப்பித்ததாகப் பொருள் கொள்வதற்குக் கொஞ்சமும் இடமில்லை. இந்த தவருன கொள்கைக்கு எவ்வித ஆதாரமுமில்லை. வரலாற்றுக் கருவூலமான சேக்கிழார் அருளிய பெரிய புராணத்தில் "**நண்ணரியசிவானந்த ஞானவடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசு அமர்ந்திருந்தார்**" என்று கூறியிருக்கிறார். ஆகவே சிங்க உருவம் அகற்றப்பட்டு, இப்போது மதிற்சுவரில் அதே இடத்தில் அப்பர் சுவாமிகள் சிவலிங்கத்துடன் இரண்டறக் கலக்கும் காட்சி உருவமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

மேலும், சித்திரைச் சதயத்தில் திருவிழாவில் கோணப்பிரானைச் சிங்கம்போல் அலங்கரித்து விளக்குகளை யெல்

லாம் அணைத்துவிட்டு இருள் மயமாக்கி அப்பர் சுவாமிகளை இறைவனிடம் சேர்க்கும் வழக்கமும் இத்தலத்திலிருந்தது. இப்போது அப்படிச் செய்வதை மாற்றி அப்பர்சுவாமி களை விளக்குகள் ஒளிவிட்டு நன்ருகப் பிரகாசிக்க சிவ லிங்க மூர்த்தியுடன் ஜோதியாய்க் கலக்கும்படி விழா நடத்தப்படுகிறது. இதுவே சரியான ஆதரபூர்வமான முறை.

கீழ்ப்பிரகாரத்தில் **சண்டிகேசுவரி, பாரத்துவாஜர் பூசித்த இலிங்கம்** இந்த இரண்டு சந்நிதிகளும் இருக்கின்றன. அம்பிகை கோயிலை யொட்டி கிழக்கே பள்ளியறை இருக் கிறது.

கோயில், அகழ் இவைகளுக்கும் வெளியே பார்க்க வேண்டியது **சித்தர் கோயில்,** இது தென்புறம் மேல்புறம் அகழ்கூடும் மூலையில் அகழின் கரையில் அமைந்திருக் கிறது. கோயிலில் இலிங்க மூர்த்தியும், எதிரில் நந்தியும் இருக்கின்றன. கர்ப்பக் கிரகத்தின் உட்புறச் சுவரில் இலிங்கத்தின் பின்னல் **உமாபாகர்** சுதை உருவில் காணப் படுகிருர். பதினென் சித்தர்களும் இங்கு சிவபெருமானை வழிப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

## 5. தீர்த்தம்-தலவிருட்சம்


கோயிலைச் சுற்றி அழகாக இருக்கும் திருக்குளத்தை **அக்கினிதீர்த்தம்** என்றும், **பாணதீர்த்தம்** என்றும் சொல்லு கின்றனர். அக்கினிபகவான் நான்கு மூலையுள்ளதாகத் தீர்த்தம் தோண்டி அதன் நடுவே இருந்து தவம் கிடந்த தால் அக்கினிதீர்த்தம் என்ற பெயர் ஏற்பட்டதென்பர்.

பாணாசுரன் தன் தாய்க்காக இத்தலத்திலுள்ள சுயம்புலிங்கத்தை எடுத்துப் போக அசைத்துப் பார்த்ததாகவும், அது முடியாமற் போனபடியால் நாற்புறமும் தோண்டிய போது உண்டான தீர்த்தமே பாணதீர்த்தம் என்று வழங்குவதாகவும் கூறப்படுகிறது. இவ்விருவகைப்பட்ட செய்திகளும் வடமொழித்தல மான்மியத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

"தீர்த்தமே திகழும் பொய்கைத் திருப்புகலூர்", என்று அப்பர் சுவாமிகளும், "பொய்கை சூழ்ந்த புகலூர்" "பொங்குதண் புனல்சூழ்ந்து போதணி பொழிற் புகலூர்" என்று சம்பந்தப் பெருந்தகையாரும், "பொய்கை சூழ்ந்த பூம்புகலூர்", "பூவிற்பொலி பொய்கைசூழ் புகலூர்" என்று சேக்கிழாரடிகளும் கூறியிருப்பது கோயிலைச்சுற்றியுள்ள தீர்த்தத்திற்கே சிறப்பாகக் கொள்ளலாம் போலும். கல்வெட்டுக்களிலும் இதற்கு ஆதரவு இருக்கிறது.

இத்தலத்தின் விருட்சம் **புன்னைமரம்**. அது கோயிலின் வடக்கு உள்பிரகாரத்தில் இருக்கிறது. இத்தலத்துத் தேவாரப் பதிகங்களில் "புன்னைப் பொழிற்புகலூர்", "புன்னை மலர்த்தலை வண்டுறங்கும் புகலூர்" என்று காணக்கிடக்கின்றது. "புன்னாக மணங் கமழும் பூம்புகலூர்" என்று பெரியபுராணம் கூறுகின்றது. திரிமுகாசுரனே புன்னைமரம் ஆனான் என்ற செய்தி முன்னரே கூறப்பட்டது. புன்னாகவனம் என்பது இத்தலத்திற்கு ஒரு பெயராய் அமைந்திருப்பதும் இங்கு குறிக்கத்தக்கது.

## திருக்குளம் சூழ்ந்த திருப்புகலூர்க்கோயில் தரைப்படம்




### பட விளக்கம்

1. அக்கினீசுவரர்
2. வர்த்தமானீசுவரர்
3. மனோன்மணி
4. முருக நாயனார்
5. சந்திரசேகரர்
6. அக்கினி பகவான்
7. நால்வர்
8. பாணாசுரன்
9. ஜமதக்கினி பூசித்தலிங்கம்
10. அறுபத்துமூவர்
11. அகோரலிங்கம்
12. பூதேசுவரர்
13. தட்சணாமூர்த்தி
14. வாதாபிகணபதி
15. அப்பர் சுவாமிகள்
16. ததீசி பூசித்த லிங்கம்
17. பராசரர் பூசித்த லிங்கம்
18. பிருகு பூசித்த லிங்கம்
19. சுப்பிரமணியர்
20. சுப்பிரமணியர் பூசித்த லிங்கம்
21. நீலகண்ட சிவாசாரியர் பூசித்த லிங்கம்.
22. புலஸ்தியர் பூசித்த லிங்கம்
23. ஜாபாலி பூசித்த லிங்கம்
24. வாதராயர் பூசித்த லிங்கம்
25. மகாலட்சுமி
26. சனீசுவரர், நளன்
27. அன்னபூரணி, சரசுவதி
28. நவக்கிரகம்
29. காசிவிசுவநாதர்
30. திரிமுகாசுரன்.
31. காலசம்மாரமூர்த்தி
32. புன்னைமரம்
33. பவிஷ்யேசுவரர்
34. வாமதேவர் பூசித்தலிங்கம்
35. சண்டேசுவரர்
36. நடராஜர், திருமுறைக் கோயில்
37. பைரவர்
38. சூரியபகவான்
39. கருந்தார்க்குழலியம்மை
40. பள்ளியறை
41. நந்தி, பலிபீடம், கொடிமரம்
42. வசந்தமண்டபம்
43. மடைப்பள்ளி
44. சிந்தாமணீசுவரர்
45. அக்கினி தீர்த்த மண்டபம்
46. விஷ்ணு பூசித்த லிங்கம்
47. நிர்த்தன கணபதி
48. சண்டிகேசுவரி
49. யாக சாலை
50. அப்பர் ஐக்கியக்காட்சி
51. பாரத்துவாஜர் பூசித்த லிங்கம்
52. முருகநாயனார் நந்தவனம்
53. சூளிகாம்பாள் பசுமடம்
54. திருநாவுக்கரசர் மண்டபம்
55. திறந்வெளி அரங்கு
56. சுந்தரர் மண்டபம்
57. திலகவதியார் சித்த வைத்தியசாலை
58. ஞானவிநாயகர் கோயில்
59. வழிபடுவோர் தங்குமிடம்
60. சித்தர்கோயில்

# 6. தலப்பெருமை

திருப்புகலூர்த் திருத்தலம் பலவகையிலும் பெருமை படைத்தது. கோயிலைச் சுற்றி அழகிய அகழ் சூழ்ந்திருப்பது ஒரு தனிச் சிறப்புடையது. கோயிலுக்குள்ளே இரண்டு மூலத்தானங்கள் இருப்பதும், இவ்விரண்டும் தனித்தலங்களாக எண்ணப்பட்டுத் தனித்தனி தேவாரப் பதிகங்கள் ஏற்பட்டிருப்பதும் இதன் மகிமையை விளக்குகின்றது. பதினெண் சித்தர்களும் இங்கு இறைவனை வழிபட்டதாகச் சொல்லப்படுவதும் மேலும் இதன் மகத்துவத்தை உணர்த்துகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக அப்பர் பெருமான் தம் வாழ்நாட்களின் கடைசி காலத்தில் இங்கு உழவாரத் திருப்பணி செய்து வந்தார் என்பதும், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான முருக நாயனார் இங்கு அவதரித்து இறைவனுக்குப் பூத்தொண்டு புரிந்து வந்தார் என்பதும் இத்தலத்தின் மேம்பாட்டை விளக்கி நிற்கின்றன. அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்ற மூவரும் இங்கு தங்கி தேவாரம் பாடியுள்ளனர். சென்ற காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களுக்கும் முறையே உரிமைப்பாடுடைய பூத, பௌடிய, வர்த்தமானலிங்கங்கள் காலவரிசையிலும் கோயில்கள் கொண்டிருப்பதும் குறிக்கத்தக்கது.

"பொன்னிலங்கு மணிமாளிகை மேல் மதி தோயும் புகலூர்," "பாரின் மலிந்து நிறைந்த செல்வம் பயில் புகலூர்" என்று சம்பந்தரும் சேக்கிழாரும் போற்றிப் புகழ்ந்திருப்பது இத்தலத்தின் பெருமையை இனிது விளக்குகின்றது. அப்பமூர்த்திகள் ஈண்டு பலகாலம் தங்கிப் பல பதிகங்கள் பாடி, செயற்கரிய அற்புதங்கள் நிகழ்த்தி சிவபெரு

மான் திருவடிப் பேறெய்தியதும், முருகநாயனார் இப்பதியில் அவதரித்து எம்பெருமானுக்குப் பூத்தொண்டு புரிந்ததும், அவர் மடத்தில் அப்பர், சம்பந்தர், சிறுத்தொண்டர், திருநீலநக்கர் முதலியோர் வந்து உடனுறைந்ததும், பொன் வேண்டும் விருப்புடைய சுந்தரர்க்காகச் செங்கற்களை இறைவன் பொன்கற்களாக அருள் செய்ததும் ஆன நிகழ்ச்சிகள் இத்தலத்திற்கு மிக்க சிறப்புச் செய்வனவாகும்.

**திருநாவுக்கரசு சுவாமிகள்:** திருஞான சம்பந்தர் முருக நாயனார் மடத்தில் தங்கியிருந்த பொழுது அப்பர் திருவாரூரில் திருவாதிரை விழாக் கண்டு மகிழ்ந்து அங்கிருந்து திருப்புகலூருக்கு வந்தார். புகலியர்கோன் அடியார் குழாத்துடன் சென்று அவரை எதிர்கொண்டழைத்து வந்து "ஆரூரில் கண்ட சிறப்பை வகுத்துரைப்பீராக" என்று சொன்னார். வாகீசரும் "முத்துவிதானம் மணிப் பொற்கவரி" என்று தொடங்கும் திருவாரூர்த் திருவாதிரைப் பதிகத்தை ஓதியருளினார். அது கேட்ட காழிப்பிரானும் திருவாரூர் சென்று வணங்கி மீண்டும் திருப்புகலூருக்கு வந்தார். திருநீலநக்கரும், சிறுத்தொண்டரும் திருப்புகலூர்வர யாவரும் முருக நாயனார் திருமடத்தில் தங்கி, திருப்பதிகச் செந்தமிழின் திறத்தையும், அடியார் பெருமையையும் பாராட்டித் தம்முள் அளவளாவி மகிழ்ந்தனர். அப்பர் பெருமான் அங்கிருந்து நீங்கிப் பல பதிகளைத் தரிசித்து விட்டுக் கடைசியாகத் திருப்புகலூர்க்கே வந்து சேர்ந்தார். அப்பொழுது, நின்ற திருத்தாண்டகம், நீடு திருத்தாண்டகம், திருப்பதிகள் கூறுந் திருத்தாண்டகம், திருநேரிசை, ஆருயிர் விருத்தம், தசபுராணம், பாவநாசப் பதிகம் முதலியவற்றைத் திருவாய்மலர்ந்தருளினர். தாண்

டக வேந்தரின் உழவாரத் திருத்தொண்டை உலகுக்கு உணர்த்தும் பொருட்டு அவர் பணி செய்யும் இடமெங்கும் பொன்னும் மணியும் நிறைந்து விளங்கும் படி இறைவன் திருவுளங் கொண்டார். ஆளுடைய அரசர் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் நிலையிலிருந்து, அவற்றையும் பருக்கைக் கற்களையும் ஒரு தன்மையனவாகவே கருதி இருவகைக் கற்களையும் வாரிப் பொய்கையில் எறிந்தார். இதைச் சேக்கிழார்,

செம்பொன்னும் நவமணியும் சேண்விளங்க ஆங்கெவையும்
உம்பர்பிரான் திருமுன்றில் உருள்பருக்கை யுடனொக்க
எம்பெருமான் வாகீசர் உழவாரத் தினிலேந்தி
வம்பலர்மென் பூங்கமல வாவியினிற் புகஎறிந்தார்

என்று வெகுநயம் படக் கூறியுள்ளார். பின்னர் தெய்வ மகளிர் அவர்முன் தோன்றி ஆடிப்பாடி மையல் விளைக்க முயன்றனர். அரம்பையர் வருகையை,

புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபா டிலாநிலைமை துணிந்திருந்த
நல்லோர்முன் திருப்புகலூர்நாயகனார் திருவருளால்
வில்லோடு நுதல்மடவார் விசும்பூடு வந்திழிந்தார்

என்ற சேக்கிழார் வாக்கால்தான் கூறமுடியும். இறைவன் திருவடி யொன்றை மட்டுமே எண்ணியவாறு தாம் செய்கின்ற பணியிலே தலைநின்றார். இதையும் குன்றை முனிவர் திருவாக்காலேயே கண்டு இன்புறலாம்.

இத்தன்மை அரம்பையர்கள் எவ்விதமும் செயல்புரிய
அத்தனார் திருவடிக்கீழ் நினைவகலா அன்புருகும்
மெய்த்தன்மை உணர்வுடைய விழுத்தவத்து மேலோர்தம்
சித்தநிலை திரியாது செய்பணியின் தலைநின்றார்.

தம்மிடம் அரமகளிர்க்குச் செயலில்லை என்பதை "பொய்ம்மாயப் பெருங்கடலில்" என்று தொடங்கும் திருத்தாண்டகம் பாடிக் குறிப்பித்தார். அவ்வளவில் அரம்பையர் அவரைத் தொழுது அகன்றனர். வாக்கின் மன்னவர் இன்னும் சிலகாலம் இங்கேயிருந்து பல திரு விருத்தங்கள் பாடியருளினர். ஒரு சித்திரைத் திங்கள் சதய நன்னாளிலே, "எண்ணுகேன் என் சொல்லி எண்ணு கேனே" என்ற தொடக்கத்துத் திருத்தாண்டகம் முத லாகப் பத்துப் பாடல்களிலும் "உன்னடிக்கே போதுகின் றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்று சொல்லி எய்துதற்கரிய சிவானந்த ஞானவடிவாகி இறைவன் திரு வடிக்கீழ் இரண்டறக் கலந்தனர். இதை,

**மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்**
**புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் எனப்புகன்று**
**நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி**
**அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅரசமர்ந்திருந்தார்**

எனச் சேக்கிழார் பெருமான் பாடியருளியிருக்கிறார். அவர் பாடியுள்ள திருத்தொண்டர்புராணத்தில் அப்பரடி களுக்கு மாத்திரம் அவர் முத்திபெற்ற நாளைக் கூறியிருக் கிறார். 'பெருமகிழ்ச்சி தானிறைந்த சித்திரையிற் சதய மாந்திருநாளில்' என்பது அவர் திருவாக்கு. வேறு எந்த நாயனருக்கும் திருநட்சத்திரம் அவர் கூறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**முருகநாயனர்:** இந்த நாயனர் திருப்புகலூரில் அவ தரித்த அந்தணப் பெரியார்; சிவபெருமான் "சேவடிக்கீழ் ஊனமின்றி நிறை அன்பால் உருகுமனத்தார்"; பொழுது புலருமுன் எழுந்து, புனித நீராடி, பல மலர்கள் கொய்து,

அவற்றைக் கோவை, தாமம், மாலை, கண்ணி, பிணையல், தொடையல் முதலிய பலவகையாகக் கட்டி நாள்தோறும் எம்பெருமானுக்குச் சாத்தும் திருத்தொண்டை மேற்கொண்டிருந்தார். இவர் திருமடத்தில் அப்பர், சம்பந்தர், சிறுத்தொண்டர், திருநீலநக்கர் முதலியோர் எழுந்தருளியிருந்து உடனுறைவின் பயன் பெற்றனர். இவர் திருநல்லூர்ப் பெருமணத்தில் சம்பந்தருடன் சோதியிற் கலந்தனர். முருகநாயனர் வர்த்தமானீசுவரரை ஆன்மா மூர்த்தியாகக் கொண்டு பூப்பணிவிடையும் பூசையும் புரிந்து வழிபட்டுப் பேறு பெற்றனர். இவர் திருவுருவம் வர்த்தமானீசுவரர் சந்நிதியில் இருக்கிறது. ஆளுடைய பிள்ளையார் அருளிய வர்த்தமானீச்சரத் திருப்பதிகத்தில், "தொண்டர் தண்கயம் மூழ்கித் துணையலும் சாந்தமும் புகையும் கொண்டு கொண்டு அடிபரவிக் குறிப்பறி **முருகன்** செய்கோலம்" என்றும், "மூசுவண்டறை கொன்றை **முருகன்** முப்போதுஞ் செய்முடிமேல் வாசமாமலருடையார் வர்த்தமானீச்சரத்தாரே" என்றும் இந்நாயனர் திருப்பள்ளித்தாமத் தொண்டைச் சிறப்பித்துக்கூறியிருக்கின்றார்.

**சுந்தரமூர்த்திசுவாமிகள் :** திருவாரூரில் பங்குனி உத்தரத் திருநாள் வந்தது. அவ்விழாவில் செலவிற்காகப் பரவையார்க்குப் பொன் கொடுக்க வேண்டியிருந்தமையின் அதற்காகச் சுந்தரர் திருப்புகலூர் வந்தார். வந்து இறைவனைத் தொழுதபின் கோயிலில் திருப்பணிக்காக வைத்திருந்த செங்கற்களைக் கொண்டு வரச்செய்து அவற்றைத் தலையணையாக வைத்துத் துயில் கொண்டார். விழித்தெழுந்தபோது செங்கற்கள் பொன்கற்களாகியிருந்ததைக் கண்டார். "வெற்றிவிடையார் அருளாலே வேமண்கல்லே விரிசுடர்ச் செம்பொன்திண் கல்லாயின"

என்று இந்நிகழ்ச்சியைச் சேக்கிழார் போற்றுகின்ருர். சுந்தரர் இறைவன் திருவருளை வியந்து "தம்மையே புகழ்ந்து இச்சைபேசினும்" என்று தொடங்கும் பாசுர முதலாக ஒரு திருப்பதிகம் பாடியருளினர்.

## 7. திருவிழாக்கள்

**சித்திரை மாதச்** சதயத்தைப் பத்தாம் நாளாகக் கொண்ட அப்பர் சுவாமிகள் திருவிழா வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. அவர் வரலாறு முழுவதும் அவ் விழா வில் கீழ்க் காணுமாறு கொண்டாடப் பெறுகின்றது :—

**முதல் நாள் :** திருவதிகை வீரட்டானேசுவரக் "கூற் ருயினவாறு" என்னும் திருப்பதிகம் ஓதி அப்பர் தமக்குற்ற சூலைநோயை நீக்கிக் கொண்ட வரலாறு.

**இரண்டாம் நாள் :** அரசன் ஏவலால் அப்பர் திருநீற் றறையுள் இடப்பட அங்கு "மாசில் வீணையும்" என்னும் பதிகம் பாடித் துன்புருது இனிது வீற்றிருந்த வரலாறு.

**மூன்ரும் நாள் :** விஷங்கலந்த சோறு கொடுக்கப்பட் டதை யுண்டும், தம்மைக் கொல்ல வந்த யானையை "சுண்ணவெண்" என்ற பதிகம் பாடித் தடுத்தும் அப்பர் தீங்குருதிருந்த வரலாறு.

**நான்காம் நாள் :** கல்லில் பிணைத்துக் கடலில் போட "சொற்றுணை வேதியன்" என்ற பதிகமோதி அக்கல்லே தெப்பமாகக் கொண்டு திருப்பாதிரிப்புலியூரில் கரை யேறிய வரலாறு. தெப்பத்தில் அப்பர் சுவாமிகளை எழுந் தருளச் செய்து அகழ் சுற்றிக் கொண்டு வரப்படுகிறது. தெப்ப விழா பல ஆண்டுகளாக நின்றுபோயிருந்து இவ் வாண்டு நடைபெற்றது.

**ஐந்தாம் நாள் :** திருப்பெண்ணுகடத்தில் "பொன்ஞர் திருவடிக்கு" என்ற திருப்பதிகம் பாடி, தமது திருத் தோட்களில் சூலக் குறியும் இடபக் குறியும் பெற்றுக் கொண்ட வரலாறு.

**ஆரும் நாள் :** திருச்சத்திமுற்றத்தில் "கோவாய் முடுகி யடுதிறற் கூற்றங் குமைப்பதன் முன் பூவாரடிச் சுவடென் மேற் பொறித்துவை" என்று வேண்டியபடி திருநல்லூரில் சிவபெருமானது திருவடி தீட்சைபெற்ற வரலாறு.

**ஏழாம் நாள் :** (காலை) - திங்களூரில் விஷம் தீண்டி இறந்த அப்பூதியடிகள் குமாரரை "ஒன்று கொலாம்" என்ற பதிகம்பாடி உயிர்ப்பித்த வரலாறு. (இரவு) - திருப்பழனம் தரிசித்து, 'சொன்மாலை பயில்கின்ற' என்ற பதிகத்தில் அப்பூதியடிகளைச் சிறப்பித்த வரலாறு.

**எட்டாம் நாள் :** (காலை) - திருவீழிமிழலையில் பஞ்சம் தீரப் படிக்காசுப் பெற்ற வரலாறு. (இரவு) - திருமறைக் காட்டில் 'பண்ணினேர் மொழியாள்' என்னும் பதிகம்பாடி மறைக்கதவம் திறப்பித்ததும், திருவாய்மூரில் விருடபாரூடராய்க் காட்சி பெற்றதுமான வரலாறுகள்.

**ஒன்பதாம் நாள் :** (காலை) - திருப்பழையாறை வடதளியில் மறைக்கப்பட்டிருந்த சிவலிங்கத்தை 'தலையெலாம்' என்ற பதிகம் பாடித் துதித்த வரலாறு.

(இரவு) - அப்பர் கைலையில் ஒரு குளத்தில் மூழ்கித் திருவையாற்றில் ஒரு பொய்கையில் எழுந்து கைலாயக் காட்சி பெற்ற வரலாறு. சுவாமி இடபவாகனரூடராய் எழுந்தருளல்.

**பத்தாம் நாள் :** (காலை) திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும் வழியில் சிவபெருமான் அந்தணராய்த் தோன்றிக் கொடுத்தருளிய கட்டமுதுண்ட வரலாறு.

(மாலை)—(i) உழவாரப் பணிசெய்யும் இடமெங்கும் பொன்னும் நவமணியுமாயிருக்க அவைகளைப் பருக்கைக் கற்களோடு பொய்கையில் எறிந்த வரலாறு.

(ii) அரம்பையர்கள் அவர்முன் ஆடல் பாடல் செய்ய, "பொய்ம்மாயப் பெருங்கடலில்" என்ற பதிகம் பாடி அவர்கள் மனநிலை சோரச் செய்த வரலாறு.

(இரவு) அப்பர்சுவாமிகளை புஷ்பவிமானத்தில் எழுந்தருளச் செய்து, வீதிவலம் வந்து, "எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனே" என்ற பதிகம்பாடி, பிரகாரம் சுற்றிவந்து உள்ளே மூலத்தானத்திலுள்ள சிவலிங்கத்துடன் ஜோதியாய் இரண்டறக் கலத்தல். இது சதயம் இரவு 4 மணிக்குமேல் 5 மணிக்குள் நடைபெறும்.

**வைகாசி:** மாதத்தில் பருவத்தைப் பத்தாம் நாளாகக் கொண்டு பஞ்சமூர்த்திகளுக்குப் பிரமோற்சவம் நடைபெறுகின்றது. புகலூர்நாதர் சந்திரசேகரராய்த் தோன்றி அக்கினி பகவானுக்குக் காட்சி கொடுத்த வரலாற்றை முன்னிட்டு சந்திரசேகர சுவாமிக்கு இவ்வுற்சவத்தில் ஐந்தாம் நாள் வசந்தோற்சவமும், ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழாவும், பத்தாம் நாள் பக்த காட்சி உற்சவமும் சிறப்பாக நடைபெறுகின்றன.

மற்ற மாதங்களிலும் சிவாலயங்களில் நடைபெற வேண்டிய விழாக்களும் கீழ்க்காணுமாறு குறைவற நிகழ்கின்றன :—

**ஆடி:** பதினெட்டாம் பெருக்கு, ஆடிப்பூரம் இரண்டுக்கும் அம்பாள் முடிகொண்டாறுக்குச் சென்று தீர்த்தம் கொடுத்தல்.

**ஆவணி** : விநாயகசதுர்த்தி விழா நடைபெறும். ஆவணி மூலத்தன்று சுவாமி ஆற்று எழுந்தருளி பிட்டுக்கு மண்சுமந்த ஐதிகம் நடத்தல்,

**புரட்டாசி**: நவராத்திரியில் அம்பாள் கொலுவிருத்தல்.

**ஐப்பசி** : கந்த சஷ்டி ஆறு நாட்களிலும் சூரசம்மாரம் உள்பட நடைபெறும்.

**கார்த்திகை** : சோம வாரந்தோறும் விழா நடைபெறும். கார்த்திகைத் தீப விழாவும் சிறப்பாக நடைபெறும்.

**மார்கழி** : திருவாதிரையில் நடராஜப் பெருமான் விழாக் கொண்டருளுவர்.

**தை** : தைப் பூசத்தன்று காலையில் 5-மணிக்குச் சுவாமி புறப்பட்டு அண்ணு மண்டபம், குருவாடி, கூத்த பட்டர்தோப்பு, போலகம், சரண்யபுரம், புறக்குடி முதலிய ஊர்கள் வழியாக அரிசிலாற்றங் கரைக்குச் சென்று உத்தரவாகினி தீர்த்த கட்டத்தில் இடபவாகனுரூடராய்த் தீர்த்தம் கொடுத்து இரவு திரும்பி திருப்புகலூருக்கு எழுந்தளல்.

**மாசி** : மகாசிவராத்திரியில் நாலுகால பூசையும் நடைபெறும்.

இவையன்றி நடராஜப் பெருமானுக்கு ஆண்டில் ஆறு அபிடேகங்களும் நடைபெறுகின்றன. மாதப் பிரதோஷம் இரண்டு, மாதச் சதுர்த்தி இவை காரைக்குடி தனவணிகர்கள் நடத்துகிறுர்கள், நாள்தோறும் ஆறு கால பூசை செவ்வனே செய்யப்படுகின்றன. திருவிழாக்

கள், நித்திய பூசை முதலியவற்றிற்கெல்லாம் கோயிற் சொத்து வருமானத்திலிருந்தே செலவு செய்யப்பட்டு வருகின்றது.

## 8. புராண வரலாறு

திருப்புகலூருக்குத் தமிழ் மொழியில் தலபுராணம் ஒன்றுமில்லை. தஞ்சாவூர் அரண்மனை கலைமகள் நூல் நிலையத்தில் ஏட்டுப் பிரதியாக வடமொழியில் **சரண்ய புரமாஹாத்ம்யம்** என்ற நூல் ஒன்றிருக்கின்றது. அது ஆக்னேய மகாபுராணத்தில், ஸ்தான வைபவ காண்டத்தில், உத்தர பாகத்தில் 180 முதல் 188 முடிய ஒன்பது அத்தியாயங்களில் பிரமதேவர் நாரத முனிவருக்குச் சொல்லியதாகக் கூறப்பட்டிருக்கிறது. சுருக்கம் கீழே காண்க.

**180 முதல் அத்தியாயம்** : அக்கினி பகவான் தான் எதையும் புசிக்கிறவன் என்ற நிந்தைதீர, புகலூரை அடைந்து நாற்புறங்களிலும் தீர்த்தம் தோண்டி நடுவே இருந்து தவம் செய்ய இறைவன் காட்சி தந்தருளினன். அக்கினி பகவான் தோண்டியதால் அக்கினி தீர்த்தம் என்றும், அவனால் வணங்கப்பட்டமையின் சிவபெருமானுக்கு அக்கினீசுவரர் என்ற திருநாமம் ஏற்பட்டதென்றும், இறைவன் புன்னை மரத்தடியில் எழுந்தருளியிருந்தபடியால் அவருக்குப் புன்னைகநாதர் என்ற திருப்பெயரும் உண்டாயிற்று என்றும் கூறுவர்.

**181 இரண்டாம் அத்தியாயம்** : அக்கினி பகவான் தவம் செய்யும் போது சொன்ன தோத்திரத்தின் விவரம்.

இறைவனுடைய எல்லா குணங்களையும் கூறப்பட்டிருக் கிறது.

**182 மூன்ருவது அத்தியாயம் :** வாதாபி, வில்வலன் என்ற இரண்டு அசுரர்கள் எல்லோரையும் கொடுமைப் படுத்தினர்கள். தேவர்கள் திருப்புகலூரில் வந்து தங்கி ஞர்கள். அகஸ்தியர் அவ்விரு அசுரர்களையும் ஒழித்தார். தேவர்களுக்குப் புகலிடமாக இருந்ததால் சரண்யபுரம் என்ற பெயர் ஏற்பட்டது.

**183 நான்காம் அத்தியாயம் :** சரண்ய புரத்தில் இரக் தன் என்ற அசுரன் இருந்தான். அவன் எல்லோரையும் துன்புறுத்தினன். ஆனல் சிவபூசை வழுவாது செய்துவந் தான். கடைசியில் கேசி என்ற மற்ருெரு அசுரனுல் கொல்லப்பட்டான். இரக்தன் என்பவன் வழிபட்டபடி யால் இரக்தாரண்யம் என்ற பெயர் வழங்கலாயிற்று.

**184 ஐந்தாம் அத்தியாயம் :** பாணுசுரனின் தாயான கும்பிலை என்பவள் நாள்தோறும் ஆயிரம் இலிங்கங்களைப் பூசிப்பதென்ற விரத மேற்கொண்டவள். மகனைப் பார்த்து, சுயம்பு லிங்கங்களைத் தேடிக் கொண்டு வரும்படி சொன் ஞள். தாய் சொல்லைத் தலைமேற்கொண்டு சுயம்பு லிங்கங் களைக் கொண்டு வந்து தாயார் பூசை புரிந்த பின் பழைய இடத்திற் கொண்டு போய்ச் சேர்த்து வருவானுன். ஒரு சமயம் சரண்யபுரமடைந்து இலிங்கத்தைத் தன் ஆயிரம் கைகளாலும் அசைத்துப் பார்த்தும் முடியவில்லை. நான்கு பக்கங்களிலும் தோண்டினுன் அப்படியும் கூடவில்லை. முயற்சியில் தோல்வியுற்ற பாணுசுரன் தன் தலையை வெட்டிப் பலியிட எத்தனித்தான். இறைவன் தோன்றி அதைத் தடுத்து, அவன் வேண்டு கோளுக்கிரங்கி, அவ

னுடையதாயின் பூசையை ஏற்றுக் கொள்வதற்கு அறி குறியாக சிறிது வடபுறம் சாய்ந்தார்.

**185 ஆருவது அத்தியாயம்:** வியாசர் - பவிஷ்யேசுவரர் என்ற இலிங்கத்தையும், ஜமதக்கினி - வர்த்தமானேசுவரர் என்ற இலிங்கத்தையும், காசியபர் - பூதேசுவரர் என்ற இலிங்கத்தையும், பாரத்துவாஜர் ஈசான திக்கில் ஒரு இலிங்கத்தையும் ஸ்தாபித்தார்கள். பிரவரர் என்ற இராஜரிஷி விஷ்ணு விக்கிரக நாசம் செய்ததால் நரகமடைந்தார். அவருடைய சந்ததியில் வந்த வீரசேனன் என்பவன் புன்னுக நாதனை வந்துவழி பட்டதால் அப் பிரவரர் சுவர்க்க மடைந்தார்,

**186 ஏழாம் அத்தியாயம்:** யதவிரதன் என்ற பிராமணனுக்குத் தர்ம தர்மிணீ என்ற பெண் இருந்தாள். அவள் கணவன் இறக்க இளமையிலேயே விதவையாகி விட்டாள். அவளுடைய தாய் தந்தையரும் இறந்துவிட்டனர். தனியாக இருந்த அவள் வீட்டில் திருடர்கள் புகுந்து அவளுடைய பொருள்களை யெல்லாம் கவர்ந்து சென்றனர். திக்கற்ற நிலையில் திருப்புகலூர் வந்து அங்கே சிவபதம் அடைந்தாள்.

**187 எட்டாம் அத்தியாயம்:** ஐந்தெழுத்தின் உண்மையையும், திருநீற்றின் பெருமையையும், உருத்திராட்சத்தின் மகிமையையும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

**188 ஒன்பதாவது அத்தியாயம்:** திருத்தேர், திருக்கல்யாணம் முதலிய திருவிழாக்களை நடத்தும் முறையினையும், அவைகளின் தத்துவத்தையும், அவைகளால் ஏற்படும் பயனையும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.



திருநாவுக்கரசர் எழுந்தருளல்



திருமுறை மாநாட்டுத் தொடக்கவிழா

## 9. நெற்குன்றவாணர்-சிந்தாமணி

தொண்டைநாடு சோழ மன்னர் ஆட்சியிலிருந்த காலமும் உண்டு. அக்காலத்தே ஜயங்கொண்ட சோழ மண்டலத்தில் புலியூர்க் கோட்டத்தில் நெற்குன்றம் என்ற ஊரில் பெருநிலக்கிழார் ஒருவர் இருந்தார். அவர் சிவபக்தியிற் சிறந்தவர்; தமிழ்ப் புலமை நிறைந்தவர். பஞ் சத்தின் கொடுமையால் அரசனுக்கு அவர் கட்டவேண்டிய வரியைச் செலுத்த முடியவில்லை, அந்நிலையில் அவருக்கு மிக்க ஈடுபாடுள்ள சிவப்பதியான திருப்புகலூரையடைந் தார். திறை செலுத்தாத காரணத்தால் அவரைச் சிறைப் படுத்துமாறு அரச ஆணை பிறந்தது. நெற்குன்றம் சென்ற அரசனின் ஏவலர் அவர் அங்கு காணப்படாமையால் தேடிச் சென்று திருப்புகலூரில் கண்டனர், நெற்குன்றங் கிழாரிடம் அரச உத்தரவை அறிவித்தனர். திருப்புகலூர் நாதரை வணங்கிவிட்டு அவர்களுடன் வந்து விடுவதாக ஏவலரிடம் வாக்களித்தார்; அவர்களும் அதற்கு இணங்கி அவரைப் பின்தொடர்ந்து வந்தார்கள். நெற்குன்ற வாணர் பொய்கையில் நீராடி அதன் தென்கரையிலுள்ள ஞானவிநாயகர் ஆலயம் அடைந்தார்; கணபதியை வணங் கினர். ஒருநாளும் இல்லாதவாறு அவர் உள்ளத்தில் ஒரு பாடல் தோன்றியது; பக்தி பரவசத்தால் வாய்விட்டுப் பாடினர். அது,

உரைசெய் மறைக்கும் தலைதெரி
யாவொரு கொம்பையென்றே
பரசுமவர்க்குப் பெருநிழலாக்கும்
பழன மெல்லாம்

திரைசெய் கடற்றுறைச்
சங்கமுலாவும் திருப்புகலூர்
அரசினிடத்து மகிழ் வஞ்சி
ஈன்றவோர் அத்தி நின்றே

என்பது. அவ்வமயம், சிவபக்தியும் செல்வமும் நிறைந்த சிந்தாமணி என்ற பெயருடைய அவ்வூர்க் கணிகை மாது அங்கு வர அப்பாட்டு அந்த அம்மையார் காதில் விழுந் தது. இச் செய்யுளைப் போன்று அத்தலத்துச் சிவபெரு மானையும் பாடினால் நன்றாக இருக்குமே என்று எண்ணிய அப் பெண்மணி வாய்விட்டு, "இச்செய்யுளை ஒரு அந்தா திக்குக் காப்புச் செய்யுளாக்கலாமே" என்று சொன்னார். "ஆம், செயயலாம்; அந்தாதிக்குக் காப்பாக்கினால் அரசி றைக்குப் பொருளாகுமா?" என்று நெற்குன்ற வாணர் தம்மையும் அறியாது தம் நிலைமையைக் கூறிவிட்டு மனக் கலக்கத்துடன் நின்றார். அவர் சொல்லியதன் பொருள் இன்னதென்று தெரியாமல் அவ்வம்மையார் திகைத்தார். அவ்வளவில் அங்கு காத்திருந்த அரசனின் ஏவலாளர் வரிப்பணம் கொடாமைக்கு அவரைச் சிறைப்படுத்திக் கொண்டுபோக இருப்பதைத் தெரிவித்தனர். உடனே சிந்தாமணியம்மையார் அவர் செலுத்தவேண்டிய முழுத் தொகையையும் தானே கொடுத்து அவரை மீட்டார். நெற் குன்றவாணரும் தாம் முதலில் ஞானவிநாயகரின் பேரில் துதியாகப் பாடியதைக் காப்புச் செய்யுளாக வைத்து, **திருப்புகலூரந்தாதி** என்ற அரிய நூலை இயற்றினார். கோயி லிலுள்ள கல்வெட்டொன்றில் அவரைப் பற்றிய குறிப்புப் பின் வருமாறு காணப்படுகிறது:—"நம்பியார் குளத்தின் தென்கரையிலே நித்தம் பன்னிரண்டு பிராமணர் உண்ப தாக ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்

டத்துப் பேரூர்நாட்டு நெற்குன்றத்து **நெற்குன்றங்கிழார்** அரயன் கருவுணுயகரான களப்பாளராஜர் செய்வித்த சாலே". நம்பியார் குளம் என்பது அகழ்தான் என்றும், தென்கரையில் ஞானவிநாயகர் கோயிலுக்கருகில் ஒரு அறச்சாலைக்கட்டிடம் இருந்து பாழடைந்துபோய் விட்ட தாகவும் அவ்வூரிலுள்ள வயதுமுதிர்ந்தோர் கூறுகின்றனர்.

சிந்தாமணி என்னும் கணிகைமாதைப் பற்றி இன்னு மொரு கதையும் வழங்குகிறது. அப்பெண்மணி சிறந்த சிவபக்தியுடையவர்; செல்வம் நிறைந்தவர்; நாள்தோறும் திருப்புகலூர் நாதனை வழிபட்டு வருபவர்; ஊருக்குச்சற் றுத் தொலைவில் பெரிய மாடமாளிகை ஒன்று அமைத்து வாழ்ந்து வந்தார், அக்காலத்து அரசன் வந்தபோது தூரத்திலிருந்து உயரமாகத்தோன்றிய மாளிகையை இறை வன் கோயில் என்று எண்ணிக்கும்பிட்டான். அருகிருந் தோர் அது ஒரு கணிகைமாதின் இல்லம் என்று அறிவித் தனர். உடனே மன்னன் அதை இடித்து விடுமாறு ஆணையிட்டான். அதைக் கேள்விப்பட்ட சிந்தாமணியம் மையார் அரசனிடம் சென்று தானே வீட்டை இடித்து விடுவதாகவும், அப்படி இடித்தெடுக்கப்படும் கற்கள் முத லியவைகளைத் திருக்கோயில் திருப்பணிக்காகப் பயன் படுத்திக் கொள்வதாகவும் கூறினார். வேந்தனும் இசைந் தான். சிந்தாமணியார் தம்மாளிகையை இடித்துக் கோயி லுக்குள் ஒரு ஆலயம் கட்டி இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தாள். அதுவே இப்போது **சிந்தாமணீசர்** சந்நிதி யென்று வழங்குகின்றது. மேலும் அவ்வம்மையாரே ஒரு மண்டபமும் கட்டி, நாற்புறமும் சூழ்ந்த அகழின் ஒரு புறத்தைத் தூர்த்துக் கோயிலுக்குள் செல்ல வழியும் அமைத்ததாகச் சொல்லப்படுகிறது. அப் பெண்மணியின்

வீடு இருந்த இடம். இப்போதும் **சிந்தாமணித் திடல்** என்று வழங்குகிறது. தேப்பெருமாமங்கலம் என்ற ஊரில் இருக்கிறது, திருப்புகலூரிலிருந்து ஒரு கல் தொலைவிருக்கும். 'திருப்புகலூரந்தாதி' என்ற அரிய நூலைத் தோற்றுவிப்பதற்கும், ஒரு ஆலயம் எடுப்பதற்கும் காரணமாக இருந்த இந்த வனிதையர்திலகத்தை என்றும் மக்கள் மறந்துவிட முடியாது.

## 10. பதியைப் பற்றிய நூல்கள்

**தேவாரம்: திருஞானசம்பந்தர்,** திருப்புகலூருக்கு இரண்டு பதிகங்களும் (22 பாடல்கள்), திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்துக்கு ஒரு பதிகமும் (11 பாடல்கள்) பாடியருளியுள்ளார். 'குறிகலந்த இசை' என்று தொடங்கும் பதிகத்தில் திருப்புகலூரின் இயற்கைக் காட்சியை அழகு பெற அமைத்துக் காட்டுகிறார். 'பொய்யிலாத மனத்தார் பிரியாது பொருந்தும் புகலூர்' என்றும், 'விழவிணைசை முந்நீரயர் வெய்த முழங்கும் புகலூர்' என்றும், 'கொய்துபத்தர் மலரும் புனலுங் கொடு தூவித்துதி செய்து மெய்தவத்தின் முயல்வார் உயர்வானக மெய்தும் புகலூர்' என்றும் கூறுகிறார். 'வெங்கள் விம்மு' என்று தொடங்கும் பதிகத்தில் 'பூமியெல்லாம் புகழ்செல்வம் மல்கும் புகலூர்' என்றும், 'எங்கள் பெம்மான் அடிபரவ நாளும் இடர் கழியுமே' என்றும் சொல்கிறார். 'வாழ்ந்த நாளும் இனி வாழும் நாளும் இவை அறிதிரேல், வீழ்ந்த நாள் எம்பெருமானை ஏத்தா விதிஇல்லிர்காள்' என்று தொடங்கும் வர்த்தமானீச்சரப் பதிகத்தில் இயற்கை எழிலை நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறார்.

இப்பதிகத்தின் மூன்றாவது, ஐந்தாவது பாசுரங்களில் முருகநாயனாரின் பூத்தொண்டைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

**திருநாவுக்கரசுசுவாமிகள்**, நாற்பத்து நான்கு பாசுரங்களுள்ள ஐந்து பதிகங்களை ஓதியுள்ளனர். ஒரு பதிகத்தில் நான்கு பாடல்களே கிடைத்துள்ளன. மற்ற நான்கு பதிகங்களிலும் பத்துப் பத்துச் செய்யுள்கள் இருக்கின்றன. 'செய்யர் வெண்ணூலர்' என்று தொடங்கும் திருப்பதிகத்தில் இறைவன் திருக்கோலத்தையும், அவனுடைய அருட்செயல்களையும் கூறுகின்றனர். ஒரு பாடலில் **கருந்தாழ்குழலி** என்று அம்பிகையைக் குறித்திருக்கிறார். அந்தப் பெயரே இத்தலத்தின் இறைவியின் பெயராக வழங்குகிறது. "மெய்யர், மெய்ந்நின்றவர்க் கல்லாதவர்க்கென்றும் பொய்யர் புகலூர்ப் புரிசடையாரே" என்றும், "திருந்தா மனமுடையார் திறத்தென்றும் பொருந்தார் புகலூர்ப் புரிசடையாரே" என்றும் அவர் கூறியுள்ளவை சிறந்த அறிவுரைகள். "பகைத்திட்டார் புறங்கள் மூன்றும்" என்று தொடங்கும் பதிகத்தில், ஐம்புலன்களால் தாம் படும் துன்பத்தையும், பொய்யுடலை மெய்யென்றெண்ணி நெறியலா நெறியிற் சென்றதையும் கூறுகிறார். "ஐவரை யகத்தே வைத்தீர் அவர்களே வலியர் சாலச் செய்வதொன்றறிய மாட்டேன் திருப்புகலூரனாரே" என்று மனமுருக உரைக்கின்றார். "தன்னைச் சரணென்று தாளடைந்தேன்" என்று தொடங்கும் பதிகத்தில் நான்கு பாடல்களே கிடைத்திருக்கின்றன. இறைவன் திருவடிதான் உயிர்களுக்குப் புகலிடம் என்பதைக் கூறுகிறார். "தொல்லை நீர்ப்புகலூர்க் **கோணப்பிரானைக்** குறுகக் குறுகா கொடுவினையே" என்று இறைவன் திருநாமத்தைக் குறிக்கிறார், "துன்னக் கோவண" என்று

தொடங்கும் பதிகத்தில் அகத்துறைப் பொருளுள்ள பாடல்கள் உள்ளன. "கண்ணினுல் கழல் காண்பிடம் ஏதெனில் புண்ணியன் புகலூருமென் நெஞ்சுமே" என்றும், "தொண்டராகித் தொழுது மதிப்பவர் புண்டரீகத் துளார் புகலூரரே" என்றும் இறைவன் நினைப்பவர் மனம் கோயிலாய்க் கொள்ளும் தன்மையைக் கூறுகிருர். அப்பரடிகள் வாழ்நாட்களில் கடைசியாக இப்பதியில் பாடியருளிய திருத்தாண்டகம் "எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனே" என்று தொடங்குவது. பத்துப் பாசுரங்களும் கல்மனதையும் கரைய வைக்கும் இயல் புடையவை. "மருளாதார் தம் மனத்தில் வாட்டம் தீர்ப் பாய் மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய்" என்றும், "மருவினி யார் மனத்துளாய்" என்றும் கூறுகிருர். உயிர்களுக்கு இறைவன் கழலடியே புகலிடம் என்பதை நன்ருக விளக்குகிருர். "உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புக லூர் மேவிய புண்ணியனே" என்று ஒவ்வொரு பாடலி லும் மெய்யுணர்வுடன் அருளியுள்ளார். இவையேயன்றி, 'முத்துவிதானம்', 'பொய்ம்மாயப் பெருங்கடலில்' என்று தொடங்கும் இருதிருவாரூர்ப் பதிகங்களும், நின்ற திருத் தாண்டகம், நீடு திருத்தாண்டகம், திருப்பதிகள் திருத் தாண்டகம், திருநேரிசை, ஆருயிர் விருத்தம், தசபுராணம், பாவநாசப் பதிகம் முதலியவைகளும் அப்பர் இத்தலத்தி லேயே பாடியதாகச் சேக்கிழார் கூறுகின்றனர்.

**சுந்தரமூர்த்தி சுவாமிகள்:** சுந்தரர் ஒரு பதிகம் (11 பாடல்கள்) பாடியுள்ளார். அவர் திருப்புகலூருக்குப் பொன் வேண்டி வந்து இறைவன் திருவருளால் பொன்னை யும் பெற்ருர். "தம்மையே புகழ்ந்திச்சை" என்று தொடங்கும் பதிகத்தில் புலவர்களுக்கு அறிவுரை பகர்

கின்றார். "யார் யாரையோ சென்று இல்லாததையெல்லாம் அவர்கள் மேல் ஏற்றிப் பாடுகிறீர்களே அதனால் பயன் கிடைக்காது. ஆதலின், புகலூர்ப் பாடுமின் புலவீர்காள்" என்று அழகாகப் பாடுகிறார். "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினும் கொடுப்பாரிலை" என்று முல்லைக்குத் தேர்கொடுத்த பறம்புமலைப்பாரி வள்ளலின் புகழை எடுத்தோதுகின்றார். மனிதர்களைப் பாடிப் பொருள் பெறாது போவதைக் காட்டிலும் இறைவனைப் பாடினால் இம்மையில் சோறும் கூறையும் கிடைக்கும்; அம்மையில் சிவலோகம் ஆள்வதற்கையமில்லை என்பதைத் திட்டவட்டமாக எடுத்துக் காட்டுகிறார். பதினொரு பாடல்களும் படித்தின்புறும் பான்மையவை.

**பதினோராந் திருமுறை: பரணதேவ நாயனார், சிவபெருமான் திருவந்தாதியில்** இத்தலத்தைப் பற்றிப் பின்வரும் இரண்டு பாடல்களில் கூறியுள்ளார்:—

என்றும் மலர் தூவி யீசன் திருநாமம்
என்றும் அலர்தூற்றியே யிருந்தும்—என்றும்
*  *  *  *
**புகலூரா புண்ணியனே என்.**

புகலூர் உடையாய் பொறிய ரவம் பூணி
**புகலூர்ப் புனற்சடையெம் பொன்னே—புகலூராய்**
வெண்காடா வேலை விடமுண்டாய் வெள்ளேற்றாய்
வெண்காடா என்பேனோ நான்.

**பட்டணத்துப் பிள்ளையார்** பாடிய **திருஏகம்பமுடையார் திருவந்தாதியில்** கீழ்வரும் பாடலைக் கூறுகிறார்:—

நினைவார்க் கருளும் பிரான்திருச்
சோற்றுத் துறை நியமம்
புனைவார் சடையோன் புகலூர்
புறம்பயம் பூவணம் நீர்
புனைவார் பொழில்திரு வெண்காடு
பாச்சில் அதிகை என்று
நினைவார் தருநெஞ்சி னீர்கச்சி
ஏகம்பம் நண்ணுமினே.

நம்பியாண்டார் நம்பி யருளிய திருத்தொண்டர் திருவந்தாதியில் கீழ்க்காணும் இரு பாடல்களில் புகலூரைப் பற்றிச் சொல்கிறார்:—

பதிகந் திகழ்தரு பஞ்சாக்
கரம்பயில் நாவினன்சீர்
மதியஞ் சடையாற் கலர்தொட்
டணிபவன் யான்மகிழ்ந்து
துதிஅங் கழற்சண்பை நாதற்குத்
தோழன்வன் தொண்டன் அம்பொன
அதிகம் பெறும்புகலூர் முருகன்
எனும் அந்தணனே.

பல்லவை செங்கதி ரோனைப்
பறித்தவன் பாதம்புகழ்
சொல்லவன் தென்புக லூரரன்
பால்துய்ய செம்பொன் கொள்ள
வல்லவன் நாட்டியத் தான்குடி
மாணிக்க வண்ணனுக்கு
நல்லன்வ தனபதி நாவலூ
ராகின்ற நன்னகரே.

**பெரிய புராணம்:** முருகநாயனுர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், ஏயர்கோன் கலிக்காமர் இவர்களுடைய வரலாறுகளில் பல பாடல்களில் சேக்கிழார் சுவாமிகள் திருப்புகலூரைப் பற்றி விதந்தோதியிருக்கின்ருர்,

**திருநாவுக்கரசர்** பல தலங்களையும் வணங்கிக் கடைசியாகத் திருப்புகலூர் வந்தடைந்ததை,

தேம்பொழிலுஞ் செந்தமிழ்நாட்
டினிலெங்குஞ் சென்றிறைஞ்சிப்
பாம்பணிவார் தமைப்பணிவார்
பொன்னிநா டதுவணைந்து
வரம்புனல்சூழ் வளநகர்கள்
பின்னும்போய் வணங்கியே
பூம்புகலூர் வந்தணைந்தார்
பொய்ப்பாசம் போக்குவார்

என்று சேக்கிழார் கூறுகிருர். அப்பர்பெருமான் நாள்தோறும் கோயிலில் உழவாரத்திருத்தொண்டு செய்து பல பாமாலைகள் பாடியருளியதையும் எடுத்துரைக்கிருர்:—

பொய்கைசூழ் புகலூர்ப்
புனிதர்மலர்த் தாள்வணங்கி
மையுமனப் பரிவினொடு
நாடோறும் திருமுன்றில்
கைகலந்த திருத்தொண்டு
செய்துபெருங் காதலுடன்
வைகுநா ளெண்ணிறந்த வண்டமிழ்மா
லைகள் மொழிவார்.

திருஞானசம்பந்தர் திருத்தொண்டர்களுடன் திருப்புகலூர் வந்தார். முருகநாயனுர் அவரை எதிர்கொண்டழைத்தார். ஆளுடைய பிள்ளையார் முதலில் மறைமுதல்வர் கோயிலை வணங்கிப் பதிகம் பாடிய பின் முருக நாயனுர் மடத்தை அடைந்தார். அதைச் சேக்கிழார்,

புக்கெதிர் தாழ்ந்து விழுந்தெழுந்து
பூம்புகலூர் மன்னு புண்ணியரை
நெக்குருகுஞ் சிந்தை அன்புபொங்க
நிறைமலர்க் கண்ணீர் அருவிசெய்ய
மிக்கதமிழ்த் தொடைமாலை சாத்தி
மேவிய ஏழிசை பாடிப்போந்து
திக்குநிறை சீர்முருகர் முன்பு
செல்ல அவர்மடஞ் சென்றுபுக்கார்

என்று மிக அழகாகக் கூறுகின்றார்.

முருக நாயனர் புராணத்தில் சேக்கிழார் முதற்பாடலிலேயே திருப்புகலூர் வளத்தைக் கவினுறப் புனைந்து காட்டுகிறார், திருநீற்றின் பெருமையைப் பின்வருஞ் செய்யுளில் சிறப்பித்திருக்கின்றார்:—

நாமமூதூர் மற்றதனுள் நல்லோர்
மனம்போல் அவரணிந்த
சேமம்நிலவு திருநீற்றின் சிறந்த
வெண்மைத் திருந்தொளியால்
யாமஇருளும் வெளியாக்கும் இரவே அல்ல
விரை மலர்மேல்
காமர் மதுவுண்சிறை வண்டும்
களங்கமின்றி விளங்குமால்.

சுந்தரர் பொன் வேண்டிப் புகலூர் வந்ததை ஏயர் கோன் கலிக்காமர் புராணத்தில் பின் வருமாறு உரைக் கப்பட்டிருக்கிறது :—

செறிபுன் சடையார் திருவாரூர்
திருப்பங்குனி யுத்தரத் திருநாள்
குறுக வரலும் பரவையார்
கொடைக்கு விழாவில் குறைவறுக்க
நிறையும் பொன்கொண் டணைவதற்கு
நினைந்து நம்பிதிருப் புகலூர்
இறைவர் பாதம் பணியஎழுந்
தருளிச் சென்றங் கெய்தினர்.

**திருப்புகலூரந்தாதி:** நெற்குன்றவாணர் இவ்வந்தாதி பாடிய வரலாறு முன்னர்க் கூறப்பட்டது, இந் நூலில் காப்புச் செய்யுள் உள்பட நூற்றொரு செய்யுட் கள் இருக்கின்றன, அந்தாதி ஒவ்வொரு அடியின் முதலி லும் முதலெழுத்துத் தவிர மற்ற எழுத்துக்கள் சில ஒரே மாதிரி வரும் பாடல்களையுடைய திரிபு அந்தாதியாகும். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இதைப் பன்முறை பயின்று மகிழ்வார்கள் என்றால் இதன் பெரு மையைக் கூறவும் வேண்டுமோ! நெற்குன்றங்கிழார் செவ் விய பாவலராய்த் திகழ்ந்ததுமன்றிச் சிறந்த வள்ளலாக வும் விளங்கினர். அவர் வீட்டில் இல்லாதபோது காள மேகப்புலவர் அங்கே சென்றார். அவருடைய பணிப் பெண் ஒருத்தி புலவருக்குப் பரிசு கொடுத்தனுப்பினாள். பின்னர் அது தெரிந்த நெற்குன்றவாணர் மனமகிழ்ந்து தாமும் அப் புலவர்க்கோரடிமை யென்று ஒரு செய்யுள்பாடிய தாகக் கூறப்படுகிறது. அப்பாட்டு வருமாறு :

கற்கும் கவிவல்ல அந்தணர்கோனபி காளிக்குயாம்
விற்கும் பரிசன மாகிவிட் டோம்வட வேங்கடமும்
பொற்குன்ற மும்புகழ்க் கங்காகதியும் பொதியமும்போல்
நெற்குன்ற மும்கம் மரபுமெந் நாளும் நிலைநிற்கவே.

இன்னும் இந்த பெருநிலக்கிழாரின் பெருமையை,

கிளப்பார் கிளப்ப வடிமடக் காகக் கெழுமிய சொல்
வளப்பா மதுரத் துடன்பூக் கமலமென் ருய்ந்தெடுத்த
களப்பாள நெற்குன்ற வாண ணந் தாதிக் கலித்துறையே
வளப்பார் புகழை வளர்ப்பிக்கு மாற்றொண்டை மண்டலமே

என்ற செய்யுளில் போற்றிப் புகழ்ந்து கூறப்பட்டிருக்கிறது. இவ்வந்தாதி முழுவதும் இந்நூலில் அச்சிடப் பெற்றுள்ளது, இந்த நூலின் அருமையை எடுத்துக் காட்டுவதற்காக காப்புச் செய்யுளின் விளக்கம் கீழே தரப் படுகிறது.

"உரைசெய் மறைக்குந்தலைதெரி
யாவொரு கொம்பையென்றே
பரசுமவர்க்குப் பெருநிழ
லாக்கும் பழனமெல்லாம்
திரைசெய் கடற்றுறைச்
சங்க முலாவுந் திருப்புகலூர்
அரசி னிடத்து மகிழ்வஞ்சி
ஈன்றவொ ரத்திநின்றே"

என்பது ஞானவிநாயகர் திருமுன் நெற்குன்றவாணர் பாடிய வணக்கப் பாடல். "உரைசெய்...........பரசு மவர்க்கு" "பழனமெல்லாம் ...அத்திநின்று", "பெரு நிழலாக்கும்" என்று முடிக்கவேண்டும். ஓதப்பெறு கின்ற வேதங்களுக்கும் முடிவு அறியாத ஒற்றைக்

கொம்பையுடையவனே என்று துதிசெய்பவர்க்கு, வயல்களில் அலைவீசும் கடல்துறையிலுள்ள சங்குகள் உலவுகின்ற திருப்புகலூரிலுள்ள அரசாகிய சிவபெருமானது இடப்பாகத்தில் இருந்து மகிழ்கின்ற வஞ்சிக் கொடி போன்ற உமாதேவியார் பெற்றெடுத்த ஒப்பற்ற விநாயகப் பெருமான், பெரிய அருளைச் செய்வார் என்பது பாட்டின் பொருள். அரசு, அத்தியென்பவை மரங்களின் பெயர்கள்; வஞ்சியென்பது கொடி; கொடி, மரத்தைச் சுற்றியிருப்பது போல் இறைவன் இடப்பாகத்தில் தேவியார் இருப்பதைக் குறிப்பது. ஒரு கொம்பு (கிளை) உள்ள விநாயகர் (அத்தி - மரம்) பேரருள் (பெரு நிழல்) கொடுப்பது. இன்னோரன்ன பிற கண்டு இன்புறற்பாலன.

**உமாபதி சிவாசாரியர்** அருளிய **திருப்பதிக்கோவையில்**, 'கருக்குடி வாஞ்சியம்' என்னும் பாடலில் "தென்**புகலூ**ரிருக்கும் வர்த்தமானேச்சரம்" என்று கூறியிருக்கிறார். மேலும் அவரே, **திருப்பதிகக்கோவையில்**, 'கயிலாயம்' என்று தொடங்கும் செய்யுளில் "**புகலூர்** வயலாரும் கழிப்பாலை ஒற்றியூர் திருவாவடுதுறையெட்டாம்" என்று எட்டுப் பதிகங்களுடைய தலங்களில் ஒன்றாகக் கணக்கிட்டிருக்கிறார். திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் தனித் தலமாதலின் அதற்குள்ள ஒரு பதிகத்தை இதில் சேர்க்கவில்லை. இவருடைய **திருத்தொண்டர் புராண சாரத்தில்** "**பூம்புகலூர்** அரன்பாதம் பொருந்தினரே" என்று குறித்திருக்கிறார்.


**சரண்யபுர மாஹாத்ம்யம்**: இப்பெயருடைய வடமொழி நூல் ஏட்டுப் பிரதியாக தஞ்சாவூர் அரண்மனைக் கலைமகள் நூல் நிலையத்தில் இருக்கிறது. அதனைத் தமிழில் போலகம் - சிரோமணி திரு. K. நாராயண சாஸ்திரிகள்

மொழி பெயர்த்திருக்கிறார்கள். அது கையெழுத்துப் பிரதியாக இருக்கிறது; அச்சிடப் பெறவில்லை. ஒன்பது அத்தியாயங்கள் உடையது. இந் நூலின் சுருக்கம் **புராண வரலாறு** என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## 11. கல் வெட்டுக்கள்

இத்திருக்கோயிலில் பல தமிழ்க் கல்வெட்டுக்கள் உள்ளன. 67 கல்வெட்டுக்களை அரசாங்கக் கல்வெட்டுத் துறை அலுவலர் படியெடுத்து A. R. Nos. 42 to 108-1928 என்று பதிவு செய்திருக்கிறார்கள். இவைகளின் விரிவான தொகுப்பு இந்நூலின் கடைசியில் அச்சிடப் பெற்றிருக்கிறது. இவற்றுள் திருமுறை கண்ட சோழனை முதல் இராஜராஜன் (கி. பி. 985-1012) காலத்தவை 14-ம், அவனுடைய மகன் முதல் இராஜேந்திரன் (கி. பி. 1012-1045) காலத்தவை 3-ம், முதல் குலோத்துங்க சோழன் (கி. பி. 1072-1117) காலத்தவை 12-ம், மூன்றாங் குலோத்துங்க சோழன் (கி. பி. 1178-1218) காலத்தவை 10-ம், பிறவும் உள்ளன. இந்த 67 கல்வெட்டுக்களையல்லாமல் அகழுக்கு வெளியிலுள்ள சித்தர் கோயிலின் முன்மேடைச் சுவர்களிலும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

முதல் இராஜராஜன் காலத்துக்கு (கி. பி. 985-1012) முந்திய கல்வெட்டுக்கள் கோயிலில் காணப்படாமையால் பெரும்பாலும் இக்கோயில் செங்கல் திருப்பணியாக இருந்து அவ்வரசன் காலத்துக்கு முன்பு கருங்கல் கட்டிடமாக ஏற்பட்டிருத்தல் கூடும். இக்கோயில் சாசனங்களுள் முதல் இராஜராஜன், முதல் இராஜேந்திரன் இவர்கு



**திலகவதியார் சித்தவைத்தியசாலை**



ஸ்ரீ சூளிகாம்பாள் பசுமடம்

ளுடைய கல்வெட்டுக்கள் இரண்டாம் பிரகாரத்துக் கல்வெட்டுக்களுள் காணப்படாமையால் அப்பிரகாரம் இவர்கள் காலத்துக்குப் பின்பு ஏற்பட்டிருத்தல் கூடும்.

இத்திருக்கோயில் அர்த்தமண்டபத் தூணை எடுப்பித்தவன் ஸ்ரீ இறையூருடையான் அரையன் கங்கை கொண்டானை சோழவிச்சாதரப் பல்லவரையன் என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. முதல் பிரகாரத் தெற்குத் திருவாயிலுக்கு இராஜராஜன் திருவாசல் என்ற பெயர் வழங்கியதை அவ்வாயிலின் மீதுள்ள ஒரு கல்வெட்டு தெரிவிக்கின்றது. கர்ப்பக் கிரகத்தைச் சுற்றியுள்ள நீராழிப் பத்தி மண்டபத்தைச் செய்தவன் பெயர் ஆர்க்காடு கிழான் சேதிராயன் என்பதை அப்பத்தியின் தூணிலுள்ள ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. இக்கோயிலில் நரலோகவீரன் திருமண்டபம் என்று ஒரு மண்டபம் இருந்ததை ஒரு கல்வெட்டு அறிவிக்கின்றது. அது இப்பொழுது கோயிலுக்கு வெளியிலுள்ள நூற்றுக்கால் மண்டபமான திருநாவுக்கரசர் மண்டபமாக இருத்தல் கூடும். கோயில் திருமதில் திருப்பணி "வேளாக் குறிச்சி மகாதேவ பண்டாரத்தின் சிஷ்யனை அருணைசலத் தம்பிரானுல்" சாலிவாகன சகாப்தம் 1581 (கி. பி. 1659)-ல் முடித்த செய்தியை ஒரு கல்வெட்டால் அறிகிரேம். இத்திருக்கோயில் நான்கு புறத்திலும் திருக்குளம் சூழ்ந்திருப்பதை இன்று நாம் பார்க்கிரேம். இவ்வாறே பழைய காலத்திலும் இருந்ததென்பதை மூன்ரும் குலோத்துங்கன் காலத்திய (கி. பி. 1178-1218) இரண்டு கல்வெட்டுக்கள் கூறுகின்றன. "திருப்பொய்கைக் கரை சூழ்ந்த", என்ற குறிப்பு இவைகளில் காணப்படுகின்றது. இக்கோயிலுக்கு இராஜாக்கள் தம்பிரான் திருவீதி அமைக்கப்பட்டதை மேற்கூறிய கல்வெட்

டுக்கள் தெரிவிக்கின்றன. இவ்வூரைச் சுற்றியுள்ள எயினங்குடி (ஏனங்குடி) எயினனூர் (ஏனநல்லூர்) தோட்டக்குடி, வயலூர், கயத்தூர், நன்னிலம், சிறுபுலியூர், காரைக்கால், திருமருகல், அம்பர், தேப்பெருமாமங்கலம், தேவூர் முதலிய பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

பனையூர் நாட்டுப் பிரமதேயம் என்று திருபுகலூர் கூறப்படுகிறது. இப்பனையூர் நாட்டை உள்ளடக்கிய வளநாடு, முதல் இராஜராஜன் காலத்தில் க்ஷத்திரிய சிகாமணி வளநாடு, மும்முடிச் சோழ வளநாடு என்றும், முதல் குலோத்துங்கன் காலத்திலும் பின்பும் குலோத்துங்க சோழ வளநாடு என்றும் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

திருக்கோயில் மூலத்தானத்திலுள்ள சிவலிங்க மூர்த்திக்குக் கோணப் பெருமான் என்ற பெயர் உண்மையைப் பல கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. மூலத்தான சுயம்புலிங்கத் திருமேனி சிறிது வடபுறமாகச் சாய்ந்திருப்பதை இன்றும் நாம் காணலாம். திருநாவுக்கரசர் திருவிருத்தத்தில் "தொல்லை நீர்ப்புகலூர்க் கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடுவினையே" என்று அருளியிருக்கிறார். கோயிலிலுள்ள விநாயகருக்கு வாதாபி கணபதி என்ற பெயரும் கல்வெட்டிற் காணப்படுகின்றது. கலியாணசுந்தர தேவர், சிவபுரத்துத் தேவர், காமேசுவருமுடைய மாதேவர், சூரியதேவர், திருநாவுக்கரசு தேவர் முதலிய மூர்த்தங்களை எழுந்தருளுவித்து, அவைகட்குத் திருமஞ்சனம் திருவமுது முதலிய நிபந்தங்கள் ஏற்படுத்திய செய்தியைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம். இத்திருக்கோயில் திருப்பள்ளிக்கட்டில் நம்பிராட்டியாருக்கு இராஜாதிராஜ சோழன் காலத்தில் ஒரு கல்வெட்டின்

மூலம் நிபந்தம் ஏற்பட்டிருந்தமையால் அவ்வரசன் காலம் வரையில் அம்பிகைக்குத் தனிக்கோயில் (திருக்காமக் கோட்டம்) ஏற்படவில்லையென்று ஊகிக்கலாம்.

திருப்புகலூரில் திருநாவுக்கரசர் நெடுநாள் தங்கி, பல பதிகங்கள் பாடி, திருவடி முத்தியெய்திய செய்தியை நாம் நன்கு அறிவோம். அவர் திருக்கோயில் ஒன்று இப்போது பிரகாரத்தில் உள்ளது. இம்மூர்த்திக்கு முதல் இராஜ ராஜ சோழன் காலத்திலேயே (கி. பி. 985-1012) நித்திய பூசைக்கு நிபந்தம் ஏற்பட்ட செய்தியை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. ஒரு கல்வெட்டில் "குளிச்செழுந்த நாயனார்" என்ற குறிப்பு காணப்படுகிறது. இந்நாயனார் திருநாவுக்கரசராகவே இருக்கவேண்டுமென்று தோன்று கிறது. கைலையில் ஒரு தடாகத்தில் மூழ்கித் திருவையாற் றில் ஒரு திருக்குளத்தில் இந்நாயனார் எழுந்த ஒரு அற்பு தத்தை இவ்வாறு இக் கல்வெட்டுக் கூறுகிறது.

இத்திருத்தலத்தில் அவதரித்த முருகநாயனார் அப்ப ரடிகள் காலத்திலேயே இருந்து பூத்தொண்டு செய்து முத்திபெற்ற வரலாற்றை முன்னரே கண்டோம். இவர் பேரால் 'நம்பி முருகன் திருமடம் ' என்ற ஒருமடம் இருந்ததாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. இன்னும் திரு நீலகண்ட யாழ்ப்பாணரையும், திருநீலநக்கரையும் ' தரும புரத்து நாயனார்', 'யாழ்மூரிநாயனார்,, 'நக்கநாயனார்' என்ற குறிப்புக்களால் கல்வெட்டுக்களில் அறியலாம்.

இத்தலத்தில் மாதச் சதயம் சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகிறது. பெரிய புராணத்துள் 63 நாயன்மார் வர லாறுகள் காணப்பட்ட போதிலும் திருநாவுக்கரசர் சித்தி ரைச் சதயத்தைத் தவிர வேறு எந்த நாயன்மாருக்கும்

திருநட்சத்திரம் குறிக்கப்படவில்லை. அப்பர் திருநட்சத்திரம் அவர் முத்திபெற்ற தலத்தில் மாதந்தோறும் கொண்டாடப் படுவது மிகவும் போற்றத்தக்கதே. முதல் இராஜ ராஜ சோழனும், அவன் பிராட்டி பஞ்சவன் மாதேவியும் பிறந்த நாள் சதயம் ஆனபடியால் அவ்வம்மையார் ஒரு நிபந்தம் ஏற்படுத்தியிருந்ததையும், அத் திருநாளில் அஷ்ட மங்கலம் பிடிக்கும் விவரத்தையும் ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. அப்பர்சுவாமிகட்குச் சித்திரைத் சதயத்தையொட்டிப் பத்து நாட்கள் விழாவும், வைகாசி மாதத்தில் பத்து நாட்கள் திருவிழாவும் நடந்து வருகின்றன. இவ்விரண்டு திருவிழாக்களும் இம்மாதங்களில் நடைபெற்றதை ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது.

கீரங்குடி என்ற கிராமக் கணக்கரான மூவாயிரவன் அழகிய மணவாளன் என்பவர் ஊர்ச்சபைக்காக ஊழியம் செய்து கொண்டிருந்தார். அவர் மிகுந்த மதிப்புடையவராக இருந்தபடியால் அவருடைய ஞாபகார்த்தமாக சித்திரைத் திருநாளில் ஐந்தாம் நாள் திருவிழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டதை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

மாதந்தோறும் அமாவாசை தினத்தன்று ஸ்நபனம் வைத்துத் தீர்த்தம் கொடுத்துத் திருவிழா நடப்பதற்கும், கோயிலில் நூலேற்றுக்கு (கொடியேற்றத்துக்கு)ம் நிபந்தங்கள் ஏற்படுத்தியதும், நாள்தோறும் கோதண்டராமன் சந்தி, வீரபாண்டியன் சந்தியென்ற கட்டளைகளை அரச வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்படுத்தியதும் கல்வெட்டுக்களிலிருந்து அறிகிறோம். நாள்தோறும் திருப்பள்ளித் தாமம் (மாலை) தொடுப்பதற்காக நந்தனவனங்கள் வைத்த செய்தியைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. நந்தனவனத்து ஒன்றின் பெயர் "பொன்வேய்ந்த சோழன்"

என்று குறிக்கப்படுகிறது. செங்கழுநீர்த் தாமம் ஆக்கு வதற்கு ஒரு குளம் வெட்ட ஏற்பாடு செய்யப்பட்டதை யும், நாள்தோறும் ஆற்றிலிருந்து காவிரிநீர் திருமஞ்சனத் துக்குக் கொண்டுவர நிபந்தம் ஏற்பட்டிருந்ததையும் கல் வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இத்தலத்தின் தென்பால் ஓடும் முடிகொண்டான் ஆற்றின் முழுப்பெயர் "முடி கொண்ட சோழப் பேராறு" என்பதைக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

இக்கோயில் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்வார் நிலை தேவாரத்துப் பெரிய உடையார்க்குத் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்வாரில் ஒருவருக்கும், அவர் வர்க்கத் தாருக்கும் காணியாகக் கொடுத்த நிபந்த விவரத்தை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

இக்கோயிலில் திருநாவுக்கரைய தேவர்க்கு நிவேதனம் செய்யப்படும் பிரசாதத்தை சிவயோகிகளும் அபூர்விகளுமே பெறவேண்டுமென்றும் இவர்களுக்கென்றே குளக்கரை யில் மடம் ஏற்பட்டிருந்ததென்றும் கல்வெட்டில் சொல் லப்பட்டிருக்கிறது, வேதம் வல்ல பிராமணர்களுக்கும் இவ்வித ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அக்காலத்தில் நல்லொழுக்கமுடைய யோகி ஒருவர் அரசரின் நன்மையை நாடி நாள்தோறும் திருப்புகலூ ருடையாரைத் தொழுதிருக்க திருமட விளாகத்துக்கு வட கிழக்கே சேரமான்தோழன் கேட்டுக் கொள்ள ஒரு குகை எடுக்கப்பட்டிருந்ததும், கோயிலுக்குத் திருவாபரணங்கள் கொடுத்ததும், திருவிளக்குகளுக்காக நிபந்தங்கள் ஏற் படுத்தியதும் சில கல்வெட்டுக்கள் மூலம் தெரிவிக்கப்படு கின்றன. அகழிலிருந்து வடக்கே போகும் வடிகால் கரை யில் ஒரு ஆலமரத்தின் கீழ் பாழ் அடைந்த மண்டபம் இப்

போது காணப்படுவது மேலே சொன்ன குகையிருந்த இட மாக இருக்கலாம் என்று கூறுகின்றனர்.

இக்கல்வெட்டுக்களில் வேறு பல செய்திகளும் காணப்படுன்றன. அவற்றுள் உதாரணமாக சிலவற்றைக் கீழே காணலாம். அக் காலத்தில் வலங்கை, இடங்கை என்ற ஜாதிப்பிரிவு இருந்தது. திருமுறைகள் மக்களால் மிகுதியும் கையாளப்படுவதைக் கல்வெட்டுக்களில் காணப் படும் 'இம்மையே தருவான்', 'பொய்யாத சேவடி,' 'ஒளி வளர் விளக்கு' என்ற சொற்றொடர்களால் அறிகிறோம். இவ்வூரிலுள்ள சுவாமியின் பெயரை மக்களுக் 'கோணல் மாதேவன்,' 'கோணல் வடுகன்' என்று வைக்கும் வழக்க மிருந்திருக்கிறது. கோயில் தச்சனின் உரிமைகளைப் பற்றிக் கூறியிருக்கிறது, கோயிலுக்குச் சொந்தமான கிராமங்கள் குறிப்பட்டிருக்கின்றன. முடிகொண்டான் வடகரையில் மனதுக்கினியான் என்பான் செய்வித்த ஆதுலர் சாலைக்கு நிலம் விடப்பட்டிருக்கிறது. திருப்புக லூரந்தாதி பாடிய நெற்குன்ற வாணரைப் பற்றிக் கூறப் பட்டிருக்கிறது.

## 12. சிற்ப ஓவியங்கள்

திருக்கோயிலின் இராஜகோபுரம் ஐந்து நிலைகளுள்ளது; அழகிய பல சுதைச் சிற்பங்கள் நிறைந்தது; பல வண் ணங்கள் தீட்டப்பெற்று மிளிர்கின்றது. உள்ளே சென் றதும் இடது புறத்தில் வசந்த மண்டபம் இருக்கிறது. அதன்மேல் பாணாசுரன் இலிங்கத்தைப் பெயர்க்க முயற் சிப்பதையும், அக்கினிபகவானுக்கு சந்திரசேகரர் காட்சி

கொடுப்பதையும் சுதைச் சிற்பமாக அமைத்திருப்பது மிக்க வனப்புடன் காணப்படுகிறது. அதற்கெதிரிலுள்ள பள்ளியறைமேல் சிவசக்தி நடனம் திகழ்கின்றது; இருமருங்கும் நந்திகேசுவரர் மத்தளம் கொட்டுவதும், தும்புருவர் வீணை வாசிப்பதும் கண்கவர் வனப்புடையதாய் விளங்குகின்றது. உள்கோபுர வாயிற் சுவரில் அப்பர் பெருமான் உழவாரத் திருத்தொண்டும், அரம்பையர்கள் தோற்றமும் அழகிய வண்ண ஓவியமாக எழுதப்பட்டிருக்கிறது.

இன்னும் கர்ப்பக்கிரகத்தைச் சுற்றியுள்ள சுவர்களில் உள்ள அகஸ்தியர், நடராஜர், கணபதி, தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், துர்க்கை, கௌரிலீலை முதலிய திருவுருவங்கள் அற்புதச் சிற்ப வேலைப்பாடமைந்தவை.

கோயிலுக்கு வெளியிலுள்ள நூற்றுக்கால் மண்டபம் திருநாவுக்கரசர் மண்டபம் எனப்படும். முகப்பில் பார்வதி பரமசிவம், முருகன், கணபதி, நால்வர் இவர்களின் திருவுருவங்கள் காட்சியளிக்கின்றன. மண்டபத்துள்ளே அப்பர் பெருமான் திருவுருவம் அமைந்திருக்கிறது. மற்றும் பல ஓவியங்களும் அங்கே கவின் பெறும் வகையில் தீட்டப்பெற்றிருக்கின்றன.

முருகநாயனார் நந்தவனத்து வாயிலின்மேல் அந்நாயனார் உருவம் பூக்குடலை, தொரட்டியுடன் தோன்றுவது அவர் பூத்தொண்டை நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றது.


சூளிகாம்பாள் பசுமடத்தின் முகப்பில் வேணுகோபாலன், பசு கன்றுகளுடன் உருவாக்கியிருப்பது மனதிற்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது.

திலகவதியார் சித்தவைத்தியசாலை வாயிலுக்குமேல் திலகவதியார், சடைமுடியுடன் விளங்கும் அப்பர் பெருமானுக்குத் திருநீறு அளிக்கும் காட்சி நம்மை அவர் சமண சமயத்திலிருந்த பல்லவ மன்னவர் காலத்துக்குக் கொண்டு போய் விடுகிறது.


சித்தர் கோயில் கர்ப்பக்கிரக விமானம் மிகவும் பெரியது; அதில் சித்தர் உருவம் ஒன்று அணி செய்கிறது. கர்ப்பக் கிரகத்தின் உள் பின்புறச் சுவரில் உமாபாகர் சுதை யுருவம் அலங்கரிக்கிறது.

## 13. திருப்பணிகள்

திருக்கோயிலின் பல பாகங்களை சோழ மன்னர்கள், அவர்கள் குடும்பத்தினர், மற்ற அரசாங்க அலுவலர்கள், செல்வர்கள், வேளாக்குறிச்சி மடத்தினர், சிந்தாமணி யென்னும் கணிகை மாது முதலியவர்களால் கட்டப்பட்டதைக் கல்வெட்டுக்களாலும் கர்ண பரம்பரைச் செய்திகளாலும் அறிந்தோம். இப்போது தருமகர்த்தர்களாக இருக்கும் திரு. M. D. தியாகராஜபிள்ளை எம். எல். ஏ., திரு. R. இராதாகிருஷ்ண நாயுடு இவர்கள் காலத்தில் பல திருப்பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பொதுவாக, கோபுரங்கள், விமானங்கள், மதில்கள், பிரகாரங்கள் இவைகள் நன்கு பழுது பார்க்கப்பட்டு, பல வண்ண ஓவியச் சிற்பங்களால் அழகு செய்யப்பட்டிருக்கின்றன. புதுக்கட்டிடங்கள் அமைக்கப்பெற்றிருப்பதைச் சிறப்பாகச் சொல்லவேண்டும்.



திருநாவுக்கரசர் மண்டபம்



திருமுறை மாநாடு

**திருநாவுக்கரசர் மண்டபம்:** இம்மண்டபம் கோயிலுக்கு வெளியே தென்கிழக்கு மூலையிலுள்ள நூற்றுக் கால் மண்டபம். முகப்பில் பார்வதி, பரமசிவம், முருகன், கணபதி, நால்வர் இவர்களின் உருவங்கள் அழகு செய்கின்றன. உள்ளே அப்பர் பெருமானின் திருவுருவம் இருக்கின்றது. இம்மண்டபத்துள் பெரிய கூட்டங்கள் கூடுவதற்குத் தகுதியான முறையில் செப்பனிடப்பட்டிருக்கிறது. திருவிழாக் காலங்களில் சமய மாநாடுகளும், தேவார பாராயணமும் நடைபெறுகின்றன.

**முருகநாயனர் நந்தவனம்:** இது இறைவனுக்குப் பூத் தொண்டு புரிந்த முருகநாயனரின் நினைவுக்குறியாக என்றும் நிலைத்திருப்பது. வாயில் முகப்பில் அந்நாயனர் திருவுருவத்தைக் காணலாம். நந்தவனம் மூன்றரை ஏக்கர் பரப்புள்ளது. பலவிதமான செடி, கொடி, மரங்கள் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நந்தவனம், மதில், வாயில் இவைகளைச் சீர்படுத்த ரூ. 1500 செலவாகியிருக்கிறது.

**தூளிகாம்பாள் பசுமடம்:** கோசாலைக் கட்டுவதற்கு ரூ. 6690 செலவாகியுள்ளது. இங்கு பசுக்கள் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. நாள்தோறும் இறைவனுக்கு அபிஷேகம் ஆகும் பாலை, காலை மாலை இரண்டு வேளைகளிலும் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. காரைக்குடி திரு. பெரி. ஆ. அள. அரு. தேனப்பசெட்டியார் என்பவரும் பசுமடம் ஏற்படுத்தியிருக்கிறார். அங்கிருந்தும் நாள்தோறும் இறைவன் அபிஷேகத்திற்குப் பால் வருகிறது.

**திலகவதியார் சித்தவைத்தியசாலை** : இது தேவஸ்தானத்தின் சார்பில் நடைபெற்று வருகிறது. கட்டிடத்திற்கு ரூ. 4460-ம், மருந்துகள், தளவாட சாமான்கள் முதலியவற்றிற்கு ரூ. 5000-மும் செலவாகியிருக்கின்றது. மருந்துகள் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. இதற்கு ஒரு சித்த வைத்தியர் நியமிக்கப்பட்டுப் பணிசெய்து வருகிறார். இதையன்றி மருந்துகளைச் சிறந்த முறையில் செய்து குறைந்த விலையில் கொடுப்பதற்காக இந்த தேவஸ்தானத்தின் ஆதரவில் ஒரு சித்தவைத்திய ஆராய்ச்சி மன்றம் தஞ்சாவூரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. உயிர்ப் பிணி மருத்துவன் இறைவன்; அவன் பிறவி நோயைத் தீர்ப்பவன். மக்கள் உடலை நன்றாக ஓம்பினால்தான் உயிரை வளர்க்க முடியும். 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்பார் திருமூலர். உடம்பினுள்ளே தான் உத்தமனைக் காண முடியும். ஆதலின் உடலை நன்கு பேண, நோய் வராமல் காக்க உடற்பிணி மருத்துவன் வேண்டும். அதை எண்ணியே இந்த தேவஸ்தானத்தார் சித்த வைத்தியசாலையை ஏற்படுத்தினர். திருநீறு அளித்து அப்பருடைய சூலை நோயைத் தீர்த்த திலகவதியாரின் பெயரால் அமைந்திருப்பது மிகவும் பொருத்தமானது. திருப்புகலூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டொன்றில் முடிகொண்டான் ஆற்று வடகரையில் **மனதுக்கினியான்** என்பவன் செய்வித்த **ஆதுலர்சாலைக்கு** நிலம் விடப்பட்ட செய்தி கூறப்படுகிறது. அந்த சாலையில் பிணியாளர்களும் திக்கற்றவர்களும் காப்பாற்றப்பட்டு வந்தார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு மருத்துவசாலை இருந்த அதே ஊரில் இப்போது ஒன்று ஏற்பட்டிருப்பது இறைவன் திருவருட் செயல்தான் என்று மகிழ வேண்டும்.

**மகாத்மாகாந்தி பிரயாணிகள் இல்லம்:** திருப்புகலூர்க் கோயிலை வழிபட வெளியூரிலிருந்து வருபவர்களுக்குத் தங்குவதற்காக மகாத்மா காந்தியின் பெயரால் கட்டப் பட்டது. அகழின் தென்மேற்கு மூலையில் ரூ. 11515 செலவில் கட்டப்பட்டிருக்கிறது. ஒரே வேளையில் இரண்டு குடும்பங்கள் தாராளமாகத் தங்கலாம். எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கிருந்து கோயில், கோபுரம், அகழ் முதலியவற்றின் இனிய காட் சியைக் காணலாம்.

**திருஞானசம்பந்தர் நூல்நிலையம்:** இந்த கட்டிடத்திற்கு ரூ. 4500 செலவாகியிருக்கிறது. சமய, சரித்திர, இலக்கிய நூல்கள் பல இருக்கின்றன. சித்தவைத்திய நூல்களும் இருக்கின்றன. இந்த நூல் நிலையம் திருஞானசம்பந்தர் பேரால் திகழ்கின்றது.

**சித்தர்கோயில்:** பிரயாணிகள் இல்லத்துப் பின்புறம் இருக்கிறது. பாழடைந்து கிடந்தது. கர்ப்பக்கிரக விமா னம் மிகவும் பெரியது. பதினெண் சித்தர்களும் இங்கு வந்து வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது, விமானம் நன்கு இப்போது புதுபிக்கப்பட்டு வண்ண சிற்ப ஓவியங் களுடன் அழகிய காட்சி அளிக்கிறது.

**தீர்த்த மண்டபம்:** நன்னிலத்திலிருந்து திருப்புகலூர் வரும் கற்சாலையில் முடிகொண்டான் ஆற்றின் வடகரை யில் திருப்புகலூருக்குத் திரும்பும் கிளைச் சாலையோரமாக அமைக்கப்பட்டிருக்கிறது. விழாக்காலங்களில் தீர்த்தம் கொடுப்பதற்கு இங்கு சுவாமி எழுந்தருளுவார். அதற்குப் பக்கத்தில் அப்பூதியடிகள் பேரால் தண்ணீர்ப் பந்தரும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இவைகளை யன்றி உணவுச்சாலை, வண்டி நிற்கு மிடம், மழைக் காலங்களில் கூட்டம் கூடுவதற்குப் பயன் படும் வகையிலே ரூ. 20,000 செலவில் கட்டிடங்கள் கட்டப்பெற்றிருக்கின்றன. உணவுச்சாலைக்கு **சுந்தரர் மண் டபம்** என்று பெயர். "இம்மையே தரும் **சோறும்** கூறை யும்" என்று இத்தலத்தில் சுந்தரர் பாடியதற்கு மிக்க பொருத்தமாக அமைந்துள்ளது. திருக்கோயிலிலும், மற்ற கட்டிடங்களிலும் மின்சார விளக்குகள் பிரகாசிக் கின்றன. குடிதண்ணீர்க் குழாயும் மக்களுக்குப் பயன் படுமாறு தேவஸ்தானத்தார் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

கட்டிடத் திருப்பணிகளோடு மாத்திரம் நின்று விடா மல் இத்தேவஸ்தானத்தில் சமயத் திருப்பணியும் குறைவற நடக்கின்றது, விழாக் காலங்களில் சமய மாநாடுகளில் அறிஞர்களின் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. பல ஊர்களிலிருந்தும் ஓதுவாமூர்த்திகள் வந்து தேவாரப் பாராயணப் பயிற்சியும் நடைபெறுகின்றது. சென்ற ஆண்டில் 'திருநாவுக்கரசர் வரலாறு' என்ற நூலை வெளி யிட்டனர். இப்போது ஸ்ரீமத் சம்பந்தசரணாலயத் தம் பிரான் (கோவை சிவக்கவி மணி. C. K. சுப்பிரமணிய முதலியார்) அவர்கள் இயற்றியுள்ள 'வாகீசர் அல்லது மெய்யுணர்தல்' என்ற அரிய ஆராய்ச்சி நூலையும் வெளி யிடுகின்றனர். அடியேன் எழுதிய 'திருப்புகலூர்த் தல வரலாறு' என்ற நூலை முன்னம் இருமுறைப் பதிப்பித்த தோடு இப்போது விரிவான முறையில் எழுதப்பட்டு பல அழகிய படங்களுடன் வெளியிடுகின்றனர்.

இத்தலத்தில் மேல் மடவிளாகத்தில் திருநாவுக்கரசர் மடம் ஒன்று பாழடைந்த நிலைமையில் இருக்கிறது. அதற்கு நிலமும் இருக்கிறது. பெரிய புராணத்தில் முருக

நாயனூர் திருமடத்தில் அப்பர், சம்பந்தர், சிறுத்தொண்டர், திருநீலநக்கர் இவர்கள் வந்து தங்கினதாகக் கூறப்படுகின்றது. கோயிலிலுள்ள கல்வெட்டொன்றில் **நம்பி முருகன் திருமடம்** என்ற குறிப்பு வருகின்றது. ஆதலின் அப்பர் சுவாமிகள், முருகநாயனூர் இவர்கள் பேரால் திருமடங்கள் அமைக்க ஏற்பாடாகிக் கொண்டு வருகின்றது.

## 14. ஆலய நிர்வாகம்

இந்த ஆலய நிர்வாகம் இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையாளர் மேற்பார்வையிலிருக்கிறது. இப்போது அவரால் நியமிக்கப்பட்ட இரண்டு தருமகர்த்தர்கள் இருக்கின்றனர். தேவஸ்தான அலுவல்களையெல்லாம் பார்ப்பதற்கு ஒரு பொருளாளர் இருக்கின்றார்.


இக்கோயிலுக்குச் சொந்தமாகச் சுமார் 1045 ஏக்கர் நன்செய் நிலங்களும், 391 ஏக்கர் புன்செய் நிலங்களும், சில வீடுகளும் இருக்கின்றன. இவைகளிலிருந்து ஆண்டின் மொத்த வருமானம் ரூ, 1,23,000; ஆண்டின் மொத்த செலவு சுமார் ரூ. 1,05,044. கோயிலிலுள்ள திருவாபரணங்கள், வெள்ளி வாகனங்கள் இவைகளின் மதிப்பு சுமார் ரூ, 38926.

110004


### திருஇராமனதீச்சரம்

திருஇராமனதீச்சரம் சோழ நாட்டில் பாடல் பெற்ற தலங்களில் ஒன்று. இப்பதி திருப்புகலூரிலிருந்து திருச்செங்காட்டங்குடிக்குப் போகும் வழியில் சுமார் ஒரு கல்

தொலைவில் திருக்கண்ணபுரத்துக்கருகில் உள்ளது. அழகிய சிறுகோயில்; அண்மையில் நன்ருகத் திருப்பணி செய்யப்பெற்றது. இராஜகோபுரம் இப்போது இல்லை. கர்ப்பக்கிரக விமானம் பெரிதாகக் காட்சியளிக்கிறது. மூலத்தான மூர்த்தி பெரிய மகாலிங்கமாக இருக்கிறது. இராமபிரான் இத்தலத்தில் வழிபட்டதாகச் சொல்லப் படுகிறது. சுவாமியின் திருநாமம் இராமநாதேசுவரர்; அம்பாள் திருப்பெயர் கருவார்குழலியம்மை; தீர்த்தம்- இராமதீர்த்தம். இத்தலத்தைப் பற்றி சம்பந்தர் பாடியருளிய பதினெரு பாடல்கள் கொண்ட பதிகம் ஒன்றுண்டு. அது இந்நூலில் அச்சிடப்பெற்றிருக்கிறது. நித்தியபூசை நைமித்திகங்கள் திருப்புகலூர் தேவஸ்தானத்திலிருந்து குறைவற நடந்து வருகின்றன. இக்கோயிலும் திருப்புகலூர்க் கோயில் தருமகர்த்தர்கள் மேற்பார்வையில் இருந்து வருகிறது. திருப்புகலூரை வழிபடச் செல்பவர்கள் இத்தலத்தையும், அருகிலுள்ள திருநீலநக்கர் அவதரித்த திருச்சாத்தமங்கை, பாம்பு கடித்து இறந்த வணிகனை சம்பந்தர் பதிகம் பாடி உயிர்ப்பித்த திருமருகல், இறைவனுக்குப் பிள்ளைக்கறியமுதளித்த சிறுத்தொண்டரின் திருச்செங்காட்டங்குடி, சிறந்த வைணவத் தலமான திருக்கண்ணபுரம் முதலிய பாடல்பெற்றபதிகளையும் தெரிசித்து வரவேண்டும்.



சித்தர் கோயில்



திரு இராமனதிச்சரம்

உ

சிவமயம்

# திருப்புகலூர்த் தேவாரப் பதிகங்கள்

## திருஞானசம்பந்த சுவாமிகள்

### பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

குறிகலந்தஇசை பாடலினான்நசை யாலிவ்வுலகெல்லாம்
நெறிகலந்ததொரு நீர்மையனாயெரு தேறிப்பலிபேணி
முறிகலந்ததொரு தோலரைமேலுடை யானிடம்மொய்ம்மலரின்
பொறிகலந்தபொழில் சூழ்ந்தயலேபுய லாரும்புகலூரே. 1

காதிலங்குகுழை யன்இழைசேர்திரு மார்பன்ஒருபாகம்
மாதிலங்குதிரு மேனியினான்கரு மானின்உரியாடை
மீதிலங்கஅணிந் தானிமையோர்தொழ மேவும்இடஞ்சோலைப்
போதிலங்குநசை யால்வரிவண்டிசை பாடும்புகலூரே. 2

பண்ணிலாவும்மறை பாடலினானிறை சேரும்வளையங்கைப்
பெண்ணிலாவவுடை யான்பெரியார்கழ லென்றுந்தொழுதேத்த
உண்ணிலாவியவர் சிந்தையுள்நீங்கா வொருவனிடமென்பர்
மண்ணிலாவும்அடி யார்குடிமைத்தொழில் மல்கும்புகலூரே. 3

நீரின்மல்குசடை யன்விடையன்அடை யார்தம்அரண்மூன்றுஞ்
சீரின்மல்குமலை யேசிலையாகமு னிந்தானுலகுய்யக்
காரின்மல்குகடல் நஞ்சமதுண்ட கடவுள்ளிடமென்பர்
ஊரின்மல்கிவளர் செம்மையினாலுயர் வெய்தும்புகலூரே. 4

செய்யமேனிவெளி யபொடிப்பூசுவர் சேரும்அடியார்மேல்
பையநின்றவி னைபாற்றுவர்போற்றிசைத் தென்றும்பணிவாரை
மெய்யநின்றபெரு மானுறையும்மிட மென்பரருள்பேணிப்
பொய்யிலாதமனத் தார்பிரியாதுபொ ருந்தும்புகலூரே. 5

கழலினோசைசிலம் பின்னொலியோசை கலிக்கப்பயில்கானில்
குழலினோசைகுறட் பாரிடம்போற்றக் குனித்தாரிடமென்பர்
விழவினோசையடி யார்மிடைவுற்று விரும்பிப்பொலிந்தெங்கும்
முழவினோசைமுந் நீரயர்வெய்த முழங்கும்புகலூரே. 6

வெள்ளமார்ந்துமிளிர் செஞ்சடைதன்மேல் விளங்கும்மதிசூடி
உள்ளமார்ந்தஅடி யார்தொழுதேத்த வுகக்கும்அருள்தந்தெம்
கள்ளமார்ந்துகழி யப்பழிதீர்த்த கடவுள்ளிடமென்பர்
புள்ளையார்ந்தவய லின்விளைவால்வளம் மல்கும்புகலூரே. 7

தென்னிலங்கையரை யன்வரைபற்றி யெடுத்தான்முடிதிண்தோள்
தன்னிலங்குவிர லால்நெரிவித்திசை கேட்டன்றருள்செய்த
மின்னிலங்குசடை யான்மடமாதொடு மேவும்இடமென்பர்
பொன்னிலங்குமணி மாளிகைமேல்மதி தோயும்புகலூரே. 8

நாகம்வைத்தமுடி யானடிகைதொழு தேத்தும்அடியார்கள்
ஆகம்வைத்தபெரு மான்பிரமனொடு மாலுந்தொழுதேத்த
ஏகம்வைத்தஎரி யாய்மிகவோங்கிய எம்மானிடம்போலும்
போகம்வைத்தபொழி லின்நிழலான்மது வாரும்புகலூரே. 9

செய்தவத்தர்மிகு தேரர்கள்சாக்கியர் செப்பிற்பொருளல்லாக்
கைதவத்தர்மொழி யைத்தவிர்வார்கள் கடவுள்ளிடம்போலும்
கொய்துபத்தர்மல ரும்புனலுங்கொடு தூவித்துதிசெய்து
மெய்தவத்தின்முயல் வாருயர்வானக மெய்தும்புகலூரே. 10

புற்றில்வாழும்அர வம்அரையார்த்தவன் மேவும்புகலூரைக்
கற்றுநல்லவர் காழியுள்ஞானசம் பந்தன்தமிழ்மாலை
பற்றியென்றும்இசை பாடியமாந்தர் பரமன்அடிசேர்ந்து
குற்றமின்றிக்குறை பாடொழியாப்புக ழோங்கிப்பொலிவாரே. 11

திருச்சிற்றம்பலம்.

## பண் - பியந்தைக் காந்தாரம்

*திருச்சிற்றம்பலம்*

பட்டம் பால்நிற மதியம் படர்சடைச் சுடர்விடு பாணி
நட்டம் நள்ளிருள் ஆடும் நாதனார் நவின்றுறை கோயில்
புட்டன் பேடையொ டாடும் பூம்புக லூர்த்தொண்டர் போற்றி
வட்டஞ் சூழ்ந்தடி பரவும் வர்த்தமா னீச்சரத் தாரே. 1

முயல்வ ளாவிய திங்கள் வாண்முகத் தரிவையில் தெரிவை
இயல்வ ளாவிய துடைய இன்னமிர் தெந்தையெம் பெருமான்
கயல்வ ளாவிய கழனிக் கருநிறக் குவளைகள் மலரும்
வயல்வ ளாவிய புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே. 2

தொண்டர் தண்கயம் மூழ்கித் துணையலுஞ் சாந்தமும் புகையும்
கொண்டு கொண்டடி பரவிக் குறிப்பறி முருகன்செய் கோலம்
கண்டு கண்டுகண் குளிரக் களிபரந் தொளிமல்கு கள்ளார்
வண்டு பண்செயும் புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே. 3

பண்ண வண்ணத்த ராகிப் பாடலொ டாடல றாத
விண்ண வண்ணத்த ராய விரிபுக லூரரொ ராகம்
பெண்ண வண்ணத்த ராகும் பெற்றியொ டாணிணை பிணைந்த
வண்ண வண்ணத்தெம் பெருமான் வர்த்தமா னீச்சரத் தாரே. 4

ஈசன் ஏறமர் கடவுள் இன்னமு தெந்தையெம் பெருமான்
பூசு மாசில்வெண் ணீற்றர் பொலிவுடைப் பூம்புக லூரில்
மூசு வண்டறை கொன்றை முருகன்முப் போதுஞ்செய்முடிமேல்
வாச மாமல ருடையார் வர்த்தமா னீச்சரத் தாரே. 5

தளிரி ளங்கொடி வளரத் தண்கயம் இரியவண் டேறிக்
கிளரி ளம்முழை நுழையக் கிழிதரு பொழிற்புக லூரில்
உளரி ளஞ்சுனை மலரும் ஒளிதரு சடைமுடி யதன்மேல்
வளரி ளம்பிறை யுடையார் வர்த்தமா னீச்சரத் தாரே. 6

தென்சொல் விஞ்சமர்வடசொல் திசைமொழியெழில்நரம்பெடுந்
துஞ்சு நெஞ்சிருள் நீங்கத் தொழுதெழு தொல்புக லூரில் [துத்
அஞ்ச னம்பிதிர்ந் தனைய அலைகடல் கடையஅன் றெழுந்த
வஞ்ச நஞ்சணி கண்டர் வர்த்தமா னீச்சரத் தாரே. 7

சாம வேதமோர் கீதம்ஓதிஅத் தசமுகன் பரவும்
நாம தேயம துடையார் நன்குணர்ந் தடிகளென் றேத்தக்
காம தேவனை வேவக் கனலெரி கொளுவிய கண்ணார்
வாம தேவர்தண் புகலூர் வர்த்தமா னீச்சரத் தாரே. 8

சீர ணங்குற நின்ற செருவுறு திசைமுக னோடு
நார ணன்கருத் தழிய நகைசெய்த சடைமுடி நம்பர்
ஆர ணங்குறும் உமையை அஞ்சுவித் தருளுதல் பொருட்டால்
வார ணத்துரி போர்த்தார் வர்த்தமா னீச்சரத் தாரே. 9

கையி லுண்டுழல் வாருங் கமழ்துவ ராடையி னுல்தம்
மெய்யைப் போர்த்துழல் வாரும் உரைப்பன மெய்யென
[விரும்பேல்
செய்யில் வாளைக ளோடு செங்கயல் குதிகொளும் புகலூர்
மைகொள் கண்டத்தெம் பெருமான் வர்த்தமா னீச்சரத்தாரே. 10

பொங்கு தண்புனல் சூழ்ந்து போதணி பொழிற்புக லூரில்
மங்குல் மாமதி தவழும் வர்த்தமா னீச்சரத் தாரைத்
தங்கு சீர்திகழ் ஞான சம்பந்தன் தண்டமிழ் பத்தும்
எங்கும் ஏத்தவல் லார்கள் எய்துவர் இமையவ ருலகே. 11

திருச்சிற்றம்பலம்

பண் – செவ்வழி

திருச்சிற்றம்பலம்

வெங்கள்விம்மு குழலிளைய ராடவ்வெறி விரவுநீர்ப்
பொங்குசெங்கட் கருங்கயல்கள் பாயும்புக லூர்தனுள்
திங்கள்சூடித் திரிபுரம்ஓ ரம்பால்எரி யூட்டிய
எங்கள்பெம்மான் அடிபரவ நாளும்இடர் கழியுமே. 1

வாழ்ந்தநாளும் இனிவாழு நாளும்இவை யறிதிரேல்
வீழ்ந்தநாளெம் பெருமானை யேத்தாவிதி யில்லீர்காள்
போழ்ந்ததிங்கட் புரிசடையி னான்றன் புகலூரையே
சூழ்ந்தவுள்ளம் உடையீர்கள் உங்கள்துயர் தீருமே. 2

மடையின்நெய்தல் கருங்குவளை செய்யமலர்த் தாமரை
புடைகொள்செந்நெல் விளைகழனி மல்கும்புக லூர்தனுள்
தொடைகொள்கொன்றை புனைந்தானோர் பாகம்மதி சூடியை
அடையவல்லார் அமருலகம் ஆளப்பெறு வார்களே. 3

பூவும்நீரும் பலியுஞ் சுமந்து புகலூரையே
நாவினாலே நவின்றேத்த லோவார்செவித் துளைகளால்
யாவுங்கேளார் அவன்பெருமை யல்லால்அடி யார்கள்தாம்
ஓவுநாளும் உணர்வொழிந்த நாளென் றுள்ளங்கொள்ளவே. 4

அன்னங்கன்னிப் பெடைபுல்கி யொல்கியணி நடையவாய்ப்
பொன்னங்காஞ்சி மலர்ச்சின்ன மாலும்புக லூர்தனுள்
முன்னம்மூன்று மதிலெரித்த மூர்த்திதிறங் கருதுங்கால்
இன்னரென்னப் பெரிதரியர் ஏத்தச்சிறி தெளியரே. 5

குலவராகக் குலம்இலரு மாகக்குணம் புகழுங்கால்
உலகில்நல்ல கதிபெறுவ ரேனும்மலர் ஊறுதேன்
புலவமெல்லாம் வெறிகமழும் அந்தண் புகலூர்தனுள்
நிலவமல்கு சடையடிகள் பாதம் நினைவார்களே. 6

ஆணும்பெண்ணும் மெனநிற்ப ரேனும்அர வாரமாப்
பூணுமேனும் புகலூர்தனக் கோர்பொரு ளாயினான்
ஊணும்ஊரார் இடுபிச்சை யேற்றுண்டுடை கோவணம்
பேணுமேனும் பிரானென்ப ரால்எம்பெரு மானையே. 7

உய்யவேண்டில் எழுபோத நெஞ்சேயுயர் இலங்கைக்கோன்
கைகளொல்கக் கருவரை யெடுத்தானை யோர்விரலினால்
செய்கைதோன்றச் சிதைத்தருள வல்லசிவன் மேயபூம்
பொய்கைசூழ்ந்த புகலூர் புகழப் பொருளாகுமே. 8

நேமியானும் முகநான் குடையந்நெறி யண்ணலும்
ஆமிதென்று தகைந்தேத்தப் போயாரழ லாயினான்
சாமிதாதை சரணாகு மென்றுதலை சாய்மினோ
பூமியெல்லாம் புகழ்செல்வம் மல்கும் புகலூரையே. 9

வேர்த்தமெய்யர் உருவத் துடைவிட் டுழல்வார்களும்
போர்த்தகூறைப் போதிநீழ லாரும் புகலூர்தனுள்
தீர்த்தமெல்லாஞ் சடைக்கரந்த தேவன்திறங் கருதுங்கால்
ஓர்த்துமெய்யென் றுணராது பாதந்தொழு தும்மினே. 10

புந்தியார்ந்த பெரியோர்கள் ஏத்தும் புகலூர்தனுள்
வெந்தசாம்பற் பொடிப்பூச வல்லவிடை யூர்தியை
அந்தமில்லா அனலாட லானையணி ஞானசம்
பந்தன்சொன்ன தமிழ்பாடி யாடக்கெடும் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு சுவாமிகள்

### பண்–இந்தளம்

திருச்சிற்றம்பலம்

செய்யர் வெண்ணூலர் கருமான் மறிதுள்ளும்
கையர் கனைகழல் கட்டிய காலினர்
மெய்யர் மெய்ந்நின் றவர்க்கல்லா தவர்க்கென்றும்
பொய்யர் புகலூர்ப் புரிசடை யாரே. 1

மேகந லூர்தியர் மின்போன் மிளிர்சடைப்
பாக மதிநுத லாளையொர் பாகத்தர்
நாக வளையினர் நாக வுடையினர்
போகர் புகலூர்ப் புரிசடை யாரே. 2

பெருந்தாழ் சடைமுடி மேற்பிறை சூடிக்
கருந்தாழ் குழலியுந் தாமுங் கலந்து
திருந்தா மனமுடை யார்திறத் தென்றும்
பொருந்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 3

அக்கா ரணிவடம் ஆகத்தர் நாகத்தர்
நக்கா ரிளமதிக் கண்ணியர் நாடொறும்
உக்கார் தலைபிடித் துண்பலிக் கூர்தொறும்
புக்கார் புகலூர்ப் புரிசடை யாரே. 4

ஆர்த்தா ருயிரடு மந்தகன் றன்னுடல்
பேர்த்தார் பிறைநுதற் பெண்ணினல் லாளுட்கக்
கூர்த்தார் மருப்பிற் கொலைக்களிற் றீருரி
போர்த்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 5

உதைத்தார் மறலி உருளவோர் காலால்
சிதைத்தார் திகழ்தக்கன் செய்தநல் வேள்வி
பதைத்தார் சிரங்கரங் கொண்டுவெய் யோன்கண்
புதைத்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 6

தூமன் சுறவந் துதைந்த கொடியுடைக்
காமன் கணைவலங் காய்ந்தமுக் கண்ணினர்
சேம நெறியினர் சீரை யுடையவர்
பூமன் புகலூர்ப் புரிசடை யாரே. 7

கரிந்தார் தலையர் கடிமதின் மூன்றுந்
தெரிந்தார் கணைகள் செழுந்தழ லுண்ண
விரிந்தார் சடைமேல் விரிபுனற் கங்கை
புரிந்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 8

ஈண்டா ரழலி லிருவருங் கைதொழ
நீண்டார் நெடுந்தடு மாற்ற நிலையஞ்ச
மாண்டார்த மென்பு மலர்க்கொன்றை மாலையும்
பூண்டார் புகலூர்ப் புரிசடை யாரே. 9

கறுத்தார் மணிகண்டங் கால்விர லூன்றி
இறுத்தா ரிலங்கையர் கோன்முடி பத்தும்
அறுத்தார் புலனைந்து மாயிழை பாகம்
பொறுத்தார் புகலூர்ப் புரிசடை யாரே. 10

திருச்சிற்றம்பலம்.

## திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

பகைத்திட்டார் புரங்கள் மூன்றும் பாரிநீ றாகி வீழப்
புகைத்திட்ட தேவர் கோவே பொறியிலே னுடலந் தன்னுள்
அகைத்திட்டங் கதனை நாளும் ஐவர்கொண் டாட்ட வாடித்
திகைத்திட்டேன் செய்வ தென்னே திருப்புக லூர னீரே. 1

மையரி மதர்த்த வொண்கண் மாதரார் வலையிற் பட்டுக்
கையெரி சூல மேந்துங் கடவுளை நினைய மாட்டேன்
ஐநெரிந் தகமி டற்றே யடைக்கும்போ தாவி யார்தாம்
செய்வதொன் றறிய மாட்டேன் திருப்புக லூர னீரே. 2

முப்பது முப்பத் தாறு முப்பது மிடுகு ரம்பை
அப்பர்போ லைவர் வந்து அதுதரு கிதுவி டென்று
ஒப்பவே நலிய லுற்றா லுய்யுமா றறிய மாட்டேன்
செப்பமே திகழு மேனித் திருப்புக லூர னீரே. 3

பொறியிலா அழுக்கை யோம்பிப் பொய்யினை மெய்யென் றெண்ணி
நெறியலா நெறிகள் சென்றேன் நீதனே நீதி யேதும்
அறிவிலே னமரர் கோவே அமுதினை மனனில் வைக்குஞ்
செறிவிலேன் செய்வ தென்னே திருப்புக லூர னீரே. 4

அளியினார் குழலி னார்க ளவர்களுக் கன்ப தாகிக்
களியினார் பாட லோவாக் கடவூர்வீ ரட்ட மென்னுந்
தளியினார் பாத நாளும் நினைவிலாத் தகவில் நெஞ்சந்
தெளிவிலேன் செய்வ தென்னே திருப்புக லூர னீரே. 5

இலவினார் மாதர் பாலே இசைந்துநா னிருந்து பின்னும்
நிலவுநாள் பலவென் றெண்ணி நீதனேன் ஆதியுன்னை
உலவினா னுள்க மாட்டே னுன்னடி பரவு ஞானஞ்
செலவிலேன் செய்வ தென்னே திருப்புக லூர னீரே. 6

காத்திலே னிரண்டும் மூன்றுங் கல்வியே யில்லை யென்பால்
வாய்த்திலே னடிமை தன்னுள் வாய்மையால் தூயே னல்லேன்
பார்த்தனுக் கருள்கள் செய்த பரமனே பரவு வார்கள்
தீர்த்தமே திகழும் பொய்கைத் திருப்புக லூர னீரே. 7

நீருமாய்த் தீயு மாகி நிலனுமாய் விசும்பு மாகி
ஏருடைக் கதிர்க ளாகி யிமையவ ரிறைஞ்ச நின்று
ஆய்வதற் கரிய ராகி யங்கங்கே யாடு கின்ற
தேவர்க்குந் தேவ ராவார் திருப்புக லூர னாரே. 8

மெய்யுளே விளக்கை யேற்றி வேண்டள வுயரத் தூண்டி
உய்வதோ ருபாயம் பற்றி உகக்கின்றே னுகவா வண்ணம்
ஐவரை யகத்தே வைத்தீ ரவர்களே வலியர் சாலச்
செய்வதொன் றறிய மாட்டேன் திருப்புக லூரனீரே. 9

அருவரை தாங்கி னானும் அருமறை யாதி யானும்
இருவரு மறிய மாட்டா ஈசனா ரிலங்கை வேந்தன்
கருவரை யெடுத்த ஞான்று கண்வழி குருதி சோரத்
திருவிரல் சிறிது வைத்தார் திருப்புக லூர னாரே. 10

திருச்சிற்றம்பலம்.

## திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

தன்னைச் சரணென்று தானடைந் தேந்தன் அடியடையப்
புன்னைப் பொழில்புக லூரண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் தென்வினை கட்டறுத் தேழ்நரகத்
தென்னைக் கிடக்கலொட் டான்சிவ லோகத் திருத்திடுமே. 1

பொன்னை வகுத்தன்ன மேனிய னேபுணர் மென்முலையாள்
தன்னை வகுத்தன்ன பாகத்த னேதமி யேற்கிரங்காய்
புன்னை மலர்த்தலை வண்டுறங் கும்புக லூரரசே
என்னை வகுத்திலை யேலிடும் பைக்கிடம் யாதுசொல்லே. 2-3

பொன்னள வார்சடைக் கொன்றையி னுய்புக லூரரசே
மன்னுள தேவர்கள் தேடு மருந்தே வலஞ்சுழியாய்
என்னள வேயுனக் காட்பட் டிடைக்கலத் தேகிடப்பார்
உன்னள வேயெனக் கொன்றுமி ரங்காத வுத்தமனே. 4-9

ஓணப் பிரானு மொளிர்மா மலர்மிசை யுத்தமனும்
காணப் பராவியுங் காண்கின் றிலர்கர நாலைந்துடைத்
தோணப் பிரானை வலிதொலைத் தோன்தொல்லை நீர்ப்புகலூர்க்
கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடுவினையே. 10

திருச்சிற்றம்பலம்.

---

# திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

துன்னக் கோவணச் சுண்ணவெண் ணீறணி
பொன்னக் கன்ன சடைப்புக லூரரோ
மின்னக் கன்னவெண் திங்களைப் பாம்புடன்
என்னுக் கோவுடன் வைத்திட் டிருப்பதே. 1

இரைக்கும் பாம்பு மெறிதரு திங்களும்
நுரைக்குங் கங்கையும் நுண்ணிய செஞ்சடைப்
புரைப்பி லாத பொழிற்புக லூரரை
உரைக்கு மாசொல்லி யொள்வளை சோருமே. 2

ஊச லாம்அர வல்குலென் சோர்குழல்
ஏச லாம்பழி தந்தெழில் கொண்டனர்
ஓசொ லாய்மக ளேமுறை யோவென்று
பூசல் நாமிடு தும்புக லூரர்க்கே. 3

மின்னின் நேரிடை யாளுமை பங்கனைத்
தன்னை நேரொப் பிலாத தலைவனைப்
புன்னைக் கானற் பொழிற்புக லூரனை
என்னு ளாகவைத் தின்புற் றிருப்பனே. 4

விண்ணி னார்மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங்க ளோதி யெழுத்தஞ்சுங்
கண்ணி னாற்கழல் காண்பிட மேதெனில்
புண்ணி யன்புக லூருமென் னெஞ்சுமே. 5

அண்ட வாண ரமுதுண நஞ்சுண்டு
பண்டு நான்மறை யோதிய பாடலன்
தொண்ட ராகித் தொழுது மதிப்பவர்
புண்ட ரீகத்து ளார்புக லூரரே. 6

தத்து வந்தலை கண்டறி வாரிலைத்
தத்து வந்தலை கண்டவர் கண்டிலர்
தத்து வந்தலை நின்றவர்க் கல்லது
தத்து வனலன் தண்புக லூரனே. 7

பெருங்கை யாகிப் பிளிறி வருவதோர்
கருங்கை யானைக் களிற்றுரி போர்த்தவர்
வருங்கை யானை மதகளி றஞ்சினைப்
பொருங்கை யானைகண் டீர்புக லூரரே. 8

பொன்னொத் தநிறத் தானும் பொருகடல்
தன்னொத் தநிறத் தானு மறிகிலாப்
புன்னைத் தாது பொழிற்புக லூரரை
என்னத் தாவென என்னிடர் தீருமே. 9

மத்த றேய்மதி யாது மலைதனை
எத்தி னான்திரள் தோள்முடி பத்திற
ஒத்தி னான்விர லாலொருங் கேத்தலும்
பொத்தி னான்புக லூரைத் தொழுமினே. 10

திருச்சிற்றம்பலம்.

# திருத்தாண்டகம்

*திருச்சிற்றம்பலம்*

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 1

அங்கமே பூண்டாய் அனலா டினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்ச டையினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. 2

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணா ரின்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையும் என்மேற் றரவ றுத்தாய்
அவர்வேண்டுங் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 3

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி அலர்மேலான்
நீர்மேலான் ஆய்ந்துங் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணிய யனே. 4

நீரேறு செஞ்சடைமேல் நிலாவெண் திங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டநங்கற் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவைக் கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 5

விரிசடையாய் வேதியனே வேத கீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச்சூராய்
திரிபுரங்கள் எரிசெய்த தேவ தேவே
திருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தா யென்றும்
புரிசடையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 6

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேனின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 7

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான்தோல் உடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. 8


துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னனையுந் தண்மதியும் பாம்பும் நீருஞ்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்ன நடைமடவாள் பாகத் தானே
யக்காரம் பூண்டானே ஆதி யானே
பொன்னங் கழலடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 9

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. 10

திருச்சிற்றம்பலம்



அப்பர் ஐக்கியக்காட்சி



முருகநாயனர் நந்தவனம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள்

## பண்-கொல்லி

*திருச்சிற்றம்பலம்*

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ்
சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதேயெந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங்கூறையு
மேத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 1

மிடுக்கிலாதானை வீமனேவிறல்
விசயனேவில்லுக் கிவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியேயென்று
கூறினுங்கொடுப் பாரிலை
பொடிக்கொள்மேனியெம் புண்ணியன்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேலம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 2

காணியேற்பெரி துடையனேகற்று
நல்லனேசுற்ற நன்கிளை
பேணியேவிருந் தோம்புமேயென்று
பேசினுங்கொடுப் பாரிலை
பூணிபூண்டுழப் புட்சிலம்புந்தண்
புகலூர்பாடுமின் புலவீர்காள்
ஆணியாயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 3

நரைகள்போந்துமெய் தளர்ந்துமூத்துடல்
நடுங்குநிற்குமிக் கிழவனை
வரைகள்போல்திர டோளனேயென்று
வாழ்த்தினுங்கொடுப் பாரிலை
புரைவெள்ளேறுடைப் புண்ணியன்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அரையனாயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 4

வஞ்சநெஞ்சனை மாசழக்கனைப்
பாவியைவழக் கில்லியைப்
பஞ்சதுட்டனைச் சாதுவேயென்று
பாடினுங்கொடுப் பாரிலை
பொன்செய்செஞ்சடைப் புண்ணியன்புக
லூரைப்பாடுமின் புலவிர்காள்
நெஞ்சில்நோயறுத் துஞ்சுபோவதற்
கியாதுமையுற வில்லையே. 5

நலமிலாதானை நல்லனேயென்று
நரைத்தமாந்தரை யிளையனே
குலமிலாதானைக் குலவனேயென்று
கூறினுங்கொடுப் பாரிலை
புலமெலாம்வெறி கமழும்பூம்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அலமராதம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 6

நோயனைத்தடந்தோள னேயென்று
நொய்யமாந்தரை விழுமிய
தாயன்றேபுல வோர்க்கெலாமென்று
சாற்றினுங்கொடுப் பாரிலை
போயுழன்றுகண் குழியாதேயெந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
ஆயமின்றிப்போ யண்டமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 7

எள்விழுந்திடம் பார்க்குமாகிலு
மீக்குமீகில ளுகிலும்
வள்ளலேயெங்கள் மைந்தனேயென்று
வாழ்த்தினுங்கொடுப்பாரிலை
புள்ளெலாஞ்சென்று சேரும்பூம்புகலூரைப்
பாடுமின் புலவீர்காள்
அள்ளற்பட்டழுந் தாதுபோவதற்
கியாதுமையுற வில்லையே. 8

கற்றிலாதானைக் கற்றுநல்லனே
காமதேவனை யொக்குமே
முற்றிலாதானை முற்றனேயென்று
மொழியினுங் கொடுப்பாரிலை
பொத்திலாந்தைகள் பாட்டறாப்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அத்தனாயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 9

தையலாருக்கோர் காமனேசால
நலவழகுடை யையனே
கையுலாவிய வேலனேயென்று
கழறினுங்கொடுப் பாரிலை
பொய்கைவாவியின் மேதிபாய்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
ஐயனாயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 10

செறுவினிற்செழுங்கமல மோங்குதென்
புகலூர்மேவிய செல்வனை
நறவம்பூம்பொழில் நாவலூரன்வ
னப்பகையப்பன் சடையன்றன்
சிறுவன்வன்றொண்ட னூரன்பாடிய
பாடல்பத்திவை வல்லவர்
அறவனாரடி சென்றுசேர்வதற்
கியாதுமையுற வில்லையே. 11

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

# நெற்குன்றவாணர் இயற்றிய

# திருப்புகலூரந்தாதி

## காப்பு

உரைசெய் மறைக்குந் தலைதெரி யாவொரு கொம்பையென்றே
பரசு மவர்க்குப் பெருநிழ லாக்கும் பழனமெல்லாந்
திரைசெய் கடற்றுறைச் சங்க முலாவுந் திருப்புகலூர்
அரசி னிடத்து மகிழ்வஞ்சி யீன்றவோ ரத்திநின்றே.

## நூல்

பூக்கம லத்து விழிவளர் வானென்றும் போற்றியவூர்
மாக்கம லத்து மகிழ்கின்ற வூர்மது வாணிறைந்த
தேக்கம லத்து வழியே பரக்குந் திருப்புகலூர்
நோக்கம லத்துயர் சோதிநெஞ்சே நம்மை நோக்குதற்கே. 1

நோக்கம ருக்கும் விழிச்செல்வர் பாற்கவி நூறுரைத்துத்
தாக்கம ருக்கு முருகா வருளென்பர் தண்செருந்தி
பூக்கம ருக்குல வும்புக லூரைப் போற்றியுய்யார்
பாக்கம ருக்குகுத் தென்கொல் சொல்வாணர் பரிவிதுவே. 2

பரிக்கு மரிக்கு விழியான பங்கயஞ் செங்கையிலே
சிரிக்கு மரிக்கு மருவுமெப் போதுங் கிளர்விசும்பில்
அரிக்கு மரிக்கு மயனுக்கு மேற்பத மன்பர்க்கென்றே
தெரிக்கு மரிக்குலஞ் சூழ்புக லூரர்தஞ் சேவடியே. 3

சேவடி வந்திப் பவர்வினை தீர்ப்பவர் தென்னன்முன்னே
மாவடி வந்திக்கு மண்சுமந் தோர்மரு வும்புகலூர்த்
தூவடி வந்திப் புதுமிற வேற்கண் சுடர்க்குழைமேற்
றூவடி வந்திப் படியென தாவி தளர்வித்ததே. 4

வித்தக னத்துப் பனையசெம் மேனியன் வெவ்வழற்கண்
மத்தக னத்துப் பயில்புக லூரன்முன் மாதர்சொல்லார்
அத்தக னத்துப் பொடியாய் மடிந்த வனம்பசலம்
ஒத்தக னத்த தனத்திடை யேபட் டுழைக்கின்றதே. 5

உழைக்கை யிலைத்தரு வெவ்வாய் மழுப்படைக் குற்றகைய
கழைக்கை யிலைக்குன்றர் தென்புக லூரிலென் கண்ணகலாப்
பிழைக்கை யிலைக்கொடி யென்றழு தேற்குப் பெருங்களிற்றின்
புழைக்கையிலைப் பொலிவேலாற் றடிந்தெம்மைப் போமென்
[றதே. 6

போமென் றுவந்திப் புதுமாலை மேல்வரும் போதுநெஞ்சம்
வேமென்று வந்தித் திவள்கிடந்தாள் செய்யின் மென்கழுநீர்
ஆமென்று வந்திக் கருந்துந் திருப்புக லூரிறைவர்
தாமென்று வந்தித் தனிகெடுப்பார் கொன்றைத் தாரளித்தே. 7

தாரக் கடுக்கை யவர்க்கென்ற போதெம்மைத் தாயரெல்லாஞ்
சேரக் கடுக்கை திருவுள மோதெளி யாவிருவர்
பேரக் கடுக்கை யணிபுக லூரிற் பெருந்தகையே
ஆரக் கடுக்கைம் மலர்மீது கொண்ட வருட்கடலே. 8

கடற்றானை மானும் விசும்பும் வெளாமற் கறுத்ததிரு
மிடற்றானை யானை யுரித்த பிரானை வெகுண்டிலங்கை
உடற்றானை யூரும் புகலூ ரனைத்தொழு தொண்டொடிக்கை
அடற்றானை மாரன்கை யம்புபெற் றாள்பெற் றதத்தனையே. 9

அத்தக் கமல மனவைய மேற்கின்ற வையர்துய்ய
புத்தக் கமல வடிவிலுள் ளார்க்கிடம் புண்டரிக
சுத்தக் கமல வயற்புக லூருமெய்த் தொண்டர்கடஞ்
சித்தக் கமலமும் வேதங்க ணான்கன் சிரங்களுமே. 10

சிரந்தரிக் குங்கையர் தென்புகலூரரென் சிந்தையுள்ளே
கரந்தெரிக் குந்தெரி யாதபொற் பாதர் கறையரவும்
பரந்தரிக் கும்புனற் பாகீர தியும் பனிமதியும்
நிரந்தரிக் குஞ்சடை யார்நகை போல நிலாவருமே, 11

வருகாவி ரிக்கெதிர் மாமல ராடையை மாரற்கம்பு
தருகாவி ரிக்கும் புகலூ ரிறைவர் தமதுதில்லைக்
கருகாவி ரிச்சுர நீர்கடந் திரினி யம்புயத்தேன்
பருகாவி ரிப்பித்து வண்டிசை பாடும் பழனங்களே. 12

நங்களங் கம்பித் திடரொழித் தார்புக லூரர்நல்லோர்
தங்களங் கம்பித் திடநூன் மொழிபவர் தம்புயத்துங்
திங்களங் கம்பித் திகைசேர் முடியிலுஞ் சேர்கொன்றைகாள்
உங்களங் கம்பித் திகைபோற் பசப்ப துரைசெயுமே. 13

உரைத்தவப் பாவைமுற் சங்கத்தி லேறிநின் ரேருதுமைய
வரைத்தவப் பாவை மகிழ்புக லூரவிண் மண்ணழல்கால்
இரைத்தவப் பாவை யெனவுன்னை யேத்து மவரொடென்னை
நிரைத்தவப் பாவை யடியே னயர்ப்பினு நின்னருளே. 14

நின்னகத் தைப்பணிந் தேத்தா தெடுத்தவ னீண்முடிதாட்
பொன்னகத் தைக்கொண் டடர்த்தவனே புகலூரரசே
பன்னகத் தைப்படுத் தோதத்தின் மேவுவர் பல்சமயங் [களே
சொன்னகத் தைப்பழித் தைந்தெழுத் தோதுமெய்த் தொண்டர்

தொண்டக லாமதி யன்பர்க் கருள்புக லூரன்றுண்ட
விண்டக லாமதி வேணிப்பி ரான்செங்கை வீணைதந்த
பண்டக லாமதி சீதள மென்சொற் பசுந்திருவே
கொண்டக லாமதி வள்ளல்வந் தானெஞ்சிற் கொள்வதென்றே.16

கொள்வன சங்கத்த வேலோன் பலியவன் கொள்வதன்று
தெள்வன சங்கத் தறநூலை யாய்தலிற் செங்கழுநீர்ப்
புள்வன சங்கத் தறமேதி மேயும் புனற்புகலூர்க்
கள்வன சங்கத் தனிக்குழைப் பாகமின் கைதொழவே. 17

தொழுந்துதிக்கைக்குப் புகலூரெதுவென்னுஞ் சொன்னவப்போ
தெழுந்துதிக் கைக்குறித்தெங்கள் பிரானென்னுமீசனென்னும்
விழுந்துதிக் கைக்குன்ற மொன்றுரித்தோனென்னும் வெண் [ணெருப்பின்
கொழுந்துதிக் கைக்குப் பகல்போன தென்னுமென் கோமளமே.

கோமள வாமத்தர் பத்தர் நித்தஞ்செய் குறைபெறினுந்
தாமள வாமத்தர் தென்புக லூரர் தருக்களைந்தின்
றேமள வாமத்தஞ் சேகரத் தேற்பவர் சேவடிநாம்
போமள வாமத் தனிக்குமுன் னேவந்து போதேன்னுமே. 19

போதகத் தாவர் புணரியி லாவர்வெம் போர்விரும்பும்
பாதகத் தாவர் பதத்திலு மாவர் பகைப்புரத்தே
தீதகத் தாவ ரணமுகத் தானவ தென்புகலூர்
வேதகத் தாவர வென்றுகொண் டேத்திய மெய்யன்பரே. 20

அன்ப ரதத்துக் களைவந்து மாற்றிய வர்க்கலகைத்
துன்ப ரதத்துப் பவந்தீர்த் தருள்வன சொல்லரிய
இன்ப ரதத்துக் கனங்குழை பாக ரெயிற்புகலூர்
மன்ப ரதத்துணைப் பாதங்க ளான வனசங்களே. 21

வனகன கற்பகக் காவன சோலை வயற்புகலூர்
அனகன கத்தி லமர்ந்தவ னேயகி லாண்டவல்லி
தனகன கத்தில்லை யம்பலத் தாடிய சங்கரனே
நினகன கக்கொன்றை மாலையெந் நாள்வந்து நேர்படுமே. 22

படவர வப்பணி மெய்ப்புக லூரர்பொற் பாவைகொண்ட
விடவர வப்பணி நீண்முடி யாரிமை யோர்பரவு
நடவர வப்பணி பூண்டபொற் றோளினர் நன்னுதன்மேல்
அடவர வப்பணி யேவிய வேளை யறிந்திலரே. 23

அறிவரி யாரு மயனுங் கெடக்கரந் தாடுமையர்
பொறிவரி யாருமெய்ப் பூணுடை யார்புக லூரரையென்றும்
பிறிவரி யாருமை பங்கர்கங் காளர் பிறங்கலின்மேற்
செறிவரி யாருந் தழையோ சிலைசில சேவகர்க்கே. 24

சேவக ராகவத் தக்கன் றிரட்டிய தேவரைக்கொல்
பாவக ராகவ னேத்தும் பதத்த பணிவண்டுசூழ்
பூவக ராகவ னந்திக ழும்புக லூரவென்னைக்
காவக ராகவ ருத்தந் தவிரக் கடுக்கைதந்தே. 25

தந்த மருந்துயர் தீர்வன வாகச் சதுமுகன்மால்
வந்த மருந்துய தென்புக லூரர் வரையின்மதன்
மூந்த மருந்துணை யாகநின் றேற்கொரு மொய்குழல்போல்
இந்த மருந்துய வந்ததென் காத லிடும்பைகண்டே. 26

கண்டரி கைக்குப் படையளித் தோர்தண்டைக் காலுங்கையும்
பண்டரி கைக்குப் பசித்துவந் தோர்பயி லும்புகலூர்ப்
புண்டரி கைக்கு நிகரா மிவடன் பொருட்டரசே
மண்டரி கைக்குங் கரியாற் றிரவு வருவதன்றே. 27

அன்றரத் தக்க வின்மூவி லேவே லரரியதில்லை
மன்றரத் தக்க விதிவேள்வி செற்றவர் வண்புகலூர்த்
தன்றரத் தக்கவிர் மேனியர் தாந்தொழுந் தாளர்நல்கார்
மின்றரத் தக்க விடைக்கழ லாய்நிற்கும் வெண்ணிலவே. 28

நிலாவம் பராவிதழ்க் கொன்றைவைக் குஞ்சடை நின்மலனே
இலாவம் பராவியற் றென்புக லூரவென் றேத்துதற்குக்
கலாவம் பராவி கவர்கின்ற கூற்றெனக் காதையடர்ந்
துலாவம் பராவிக் கழிக்கின்ற வாவின்றெ னுள்ளத்தையே. 29

உள்ளத் திருக்குந் திருப்புக லூர ருணருமன்பர்
கள்ளத் திருக்குங் கவலையுந் தீர்ப்பவர் கற்பவெல்லை
வெள்ளத் திருக்கும் பதினு லுலகும் விழாமலுய்யக்
கொள்ளத் திருக்குங் குமமுலை சேர்புயக் குன்றத்தரே. 30

குன்றருந் துந்திரை வேலையர் கோகன கத்தர்கொன்றைப்
பொன்றருந் துங்கச் சடாடவி யார்புக லூரர்தம்மை
வென்றருந் தும்பையும் வாகையுஞ் சூடிய வில்விதென்றற்
கன்றருந் துங்கொடி மேலெய்யு மாறென்கொல் கற்பித்ததே. 31

கற்பனை யத்தனை யென்பிற விக்கினிக் கார்மதத்துப்
பொற்பனை யத்தனைப் பெற்ற வனைப்புக லூரரசை
வெற்பனை யத்தனை வேதங்க ளறிய வெண்டலையோட்
டற்பனை யத்தனை யான்மற வேனெழுத் தஞ்சுகொண்டே. 32

அஞ்சக் கரவரி யற்புக லூர ரயின்மழுவாட்
கஞ்சக் கரவ ரிகழா தணிவன கங்கைதிங்கட்
பிஞ்சக் கரவரி சூழ்கொன்றை வாசம் பெருவெருக்கு
வெஞ்சக் கரவரி கண்மலர் நான்முகன் வெண்டலையே. 33

தலைக்கண் ணியன்சடைத் தென்புக லூரன் றகையெருக்கின்
குலைக்கண் ணியந்தொடை சாத்தும் பிரான்குன்ற மீன்றவல்லி
முலைக்கண் ணியன்கங்கை நாயகன் மாலை முடிவுமெய்தா
தலைக்கண் ணியன்புற் றமுவதெவ் வாறவ் வலங்கலுக்கே. 34

அலங்கலை யிற்கயல் பாய்புக லூர ரவிர்சடைமேற்
சலங்கலை யிற்குறை திங்கள்வைத் தோர்தமைச் சாரலர்போற்
சலங்கலை யிற்கண்ணி வந்தது தேருநின் கையணையிற்
பொலங்கலை யின்றலை யிற்றுயின் மாற்றும் புரிசங்கமே. 35

சங்க மலைக்குந் திருப்பாற் கடனெருந்து தான்பயந்த
செங்கமலைக்குமுன் பிற்சென்ற தோமின்னுஞ்செம்மலும்போய்ப்
பங்க மலைக்கு வழங்குபிரான் புகலூர் பயில்வார்
துங்க மலைக்குமி தொக்குமென் னேயன்னை சொல்லியதே. 36

சொல்லிய லைச்சங்க மேவிநின் ருயைய துய்யவன்னம்
புல்லிய லைச்சங்க மேய்புக லூர பொதுவர்குழற்
கொல்லிய லைச்சங்கம் வேவா விழியம்பு கோத்திளைத்த
மெல்லியலைச் சங்க ராவிடு மோவந்த வேள்கணையே. 37

வேய்ந்த சலஞ்சல மாகாமற் பாகத்து மின்னைவைத்தோர்
காய்ந்த சலஞ்சல மாகக் குனித்தவர் கார்க்கடல்வாய்
வாய்ந்த சலஞ்சல மாரஞ் சொரியும் வயற்புகலூர்த்
தோய்ந்த சலஞ்சல நூபுரப் போதென் றுயர்கெடவே. 38

துயரந்த காம லெவருந் தொழும்புக லூரர்செந்தீக்
கையரந்த காரங் குடிகொண்ட கண்டர் கவுரிபங்கர்
பெயரந்த காலத் துதவுமெம் பால்வரும் பெற்றியைநீ
அயரந்த காவந்தச் சேவடி தானென் னரணென்பதே. 39

என்பணி யத்தர் திருப்புக லூர ரிளைத்திமையோர்
முன்பணி யத்தழ னஞ்சையுண் டோர்முது வாளெயிற்று
வன்பணி யத்தர் மழவிடை மேலிம் மறுகில்வந்தென்
மின்பணி யத்தனந் தந்துகொண் டேகினர் மேகலையே. 40

கலைக்கு முழைக்கும் பிரிவுகண் டாய்வெய்ய காமனின்ற
நிலைக்கு முழைக்கும் பழிவரும் போலு நிருத்தமெல்லா
முலைக்கு முழைக்குந் தரும்புக லூர முதுமறைகள்
அலைக்கு முழைக்குன்று மென்னெஞ்சு மேவிய வாண்டகையே.41

ஆண்டவம் பஞ்சுகொண் டாலைச் சிலைகொண் டனங்கனும்போர்
மூண்டவம் பஞ்சுக மெந்நாண் மொழிவது முத்தணிந்து
மாண்டவம் பஞ்சு தனத்தாண் மகிழும் வயற்புகலூர்த்
தாண்டவம் பஞ்சரம் பாடநின் றாடிய சங்கரற்கே. 42

சங்குகைக் குத்தரல் வேண்டு மென்றேற்குயிர் தானவரான்
மங்குகைக் குத்தர மொன்றுஞ் சொல்லார்மரு வார்புரந்தீப்
பொங்குகைக் குத்தர வெற்பெடுத் தோர்புக லூரர்பொல்லா
வெங்குகைக் குத்தர வென்பார்க் கொழிக்கும் விழிச்செல்வரே.

விழிய னலங்கணை மாரற் களித்தவன் மெய்வழுவா
மொழிய னலங்கரத் தேந்திய வீர முராரிசெல்லா
விழிய னலங்கலை சூழ்புக லூரன் மடைப்பள்ளியாங்
கழிய னலம்கவர்ந் தேகினர் தேர்வரக் காண்கிலமே. 44

காணப் பணிமன்று ளாடிய காலுமென் கன்மனமும்
பூணப் பணியறம் வேறில்லை காண்புக ரலூரசே
சேணப் பணிமுடி யாயடி யேன்பிழை செய்கையெல்லாம்
பேணப் பணியுனக் கென்னையெந் நாளும் பெருந்தகையே. 45

தகைமாலை யாகத்தை வெல்புயத் தேயணை தையனெஞ்சிற்
புகைமாலை யாகப் பசப்பைத் தணிபுக லூரரசே
பகைமாலை யாகவந் தைந்தல ராலுமிப் பாவையைவேள்
வகைமாலை யாகத் தொடுத்தா னினியென்ன வாசகமே. 46

வாசவ னந்தரத் துர்க்கின்ற சோலை வயற்புகலூர்
ஈசவ னந்தர விக்கதி ரோவெண் டிசாமுகமுங்
கூசவ னந்தர வந்தநஞ் சோவெனக் கொள்ளைநிலா
வீசவ னந்தர மாரனுந் தோன்றினன் விற்குனித்தே. 47

குனித்தரங் கத்துறை தென்புக லூரர் குலவுசென்னிப்
பனித்தரங் கத்துறை யாரரு ளாற்பட முஞ்சமைத்து [றேன்
மனித்தரங் கத்துடன் வெண்ணீறும் பெண்ணை மடலும்பெற்
இனித்தரங் கத்துங் கடற்புவி காணமன் றேற்றுவனே. 48

ஏற்றர விந்தப் புனிதைநின் றேத்த விமயவில்லான்
மாற்றர விந்தப் புரந்தீய வெய்தவர் வண்புகலூர்ச்
சேற்றர விந்தத் திருமா ளிகைசென்ற தெய்வமின்னந்
தோற்றர விந்தப் புனத்துள தோகணி சொல்லுகவே. 49

சொல்லலை யாறு சமயத்தையு மின்ப துன்பமென்னும்
அல்லலை யாறுனக் குள்ளே யறிவறி வேபழன
மல்லலை யாறு நள்ளாறு வெண்காடு மருதுகந்தோன்
ஒல்லலை யாறு சடையில்வைத் தோன்புக லூரனையே. 50

ஊராக வன்பகை யன்னையு மப்படி யுன்னையெய்த
போராக வன்படை யென்னை விடாதுகைப் போதுகொண்டு
சீராக வன்பணி தென்புகலூர திருமிடறு
காராக வன்பம ரர்க்களித் தாய்முடிக் கங்கையனே. 51

கங்கையம் போருகம் வந்தவம் பாய்வரக் கண்டணிந்தாய்
வெங்கையம் போருக வென்றகை யாயன்று வெற்பளித்தான்
கொங்கையம் போருக மோப்பக் குழைபுக லூரமதன்
செங்கையம் போருக வெந்தபின் போதச் செயம்பெற்றதே. 52

பெற்றத் துவந்திவ் வகலிடத் தேற்கும் பிரான்புகலூர்
நற்றத் துவந்திகழ் மேனியன் வெற்பினி ளுங்களஞ்சு
மற்றத் துவந்திப மன்றுகொன் றுவி-யளித்தவற்கோ
மூற்றத்து வந்திம் முரசநின் றார்த்து முழங்குவதே. 53

முழங்கா ரணம்பயி லும்புக லூரரிம் மூவுலகின்
கிழங்கா ரணங்கொரு பாலுடை யார்கிரி மீதிருக்கும்
பழங்கா ரணர்தம் பவனிகண் டார்க்குயிர்ப் பாடொழிய
வழங்கா ரணந்தரு மாரனம் பாய மதுமலரே. 54

மலராக வைங்கணை விற்கரும் பாக வடிவிலிரின்
றலராகவன் செய்யு மாண்மை யெல்லாமன்று பார்த்தகண்ணுற்
பலராக வண்டு பயில்புக லூரரும் பார்த்தருளார்
நலராக வன்பு கொண்டா யிழைசோரு நடுக்கமுற்றே, 55

நடுக்கண் டனையல்லை கொங்கைகண் டாயல்லை நண்பவென்றன்
இடுக்கண் டனையிப் படியோ தணிப்ப திமயவெற்பில்
வடுக்கண் டனையொரு பாகனைப் பூக வயற்புகலூர்க்
கடுக்கண் டனையு மலைத்தது மாரன் கடுங்கணையே. 56

கடுங்கால கால புகலூ ரிறைவவென் காதலினுட்
படுங்கால காலங்க ளாகினின் றேய்பதி ஞாலுலகு
நடுங்கால கால மெனவே வருமிற்றை நாண்மதியஞ்
சுடுங்கால கால மரணமுண் டோதொழுந் தோகையர்க்கே. 57

தோகைக் குமார வரைமார் பளித்த துயரமெல்லாம்
போகைக் குமாரன் பொருவது பார்க்கிலிர் போர்கடந்த
வாகைக் குமாரன் வணங்கரின் றீர்மள்ளர் வான்கரும்பால்
ஆகைக் குமார வயற்புக லூரி லருந்தவரே. 58

அருந்தவ ரந்தணர் நால்வருந் தேவரு மாகியன்றங்
கிருந்தவ ரந்தண் வயற்புக லூர ரிமயவெற்பிற்
றிருந்தவ ரந்தரு கூர்வே லொருவர் திருநெடுங்கண்
முருந்தவ ரந்த முறுவல்கெட் டேனென் மொழிவதுவே. 59

மொழிப்பா கருந்தியுங் கொங்கையிற் றேய்ந்து முந்நீர்ப்பிறந்த
பழிப்பா கருந்திகைப் பாறின முத்தம் பருந்தரசின்
வழிப்பா கருந்தியில் வந்தவ ரத்தர் மணிக்குழைதோய்
விழிப்பா கருந்திய நீர்ப்புக லூரன்ன மென்கொடியே. 60

கொடியா தரிக்கு மிடத்திருப் பாக குறிக்க வென்று
முடியா தரிக்கு மெனும்புக லூரவென் மொய்குழற்கு
விடியா தரிக்கு முலேமேல் வடமுயிர் மெய்யிற்சற்றுந்
துடியா தரிக்குங் கடைமணி நாவிற்குந் தோற்றமுண்டே. 61

தோற்றந்த மாவி வனசமென் கொங்கைபங் கன்சுருதி
போற்றந்த மாவின் வரும்புக லூரன் பொருப்புமின்பாற்
கூற்றந்த மாவின் வடுவகிர் போலுருக் கொண்டுலவு
மேற்றந்த மாவிகொண் டுய்வார் தமக்கிது வெற்பலவே. 62

வெற்பா சனத்தர் திருப்புக லூரர்தம் மெய்யிற்றுய்ய
பொற்பாசனத்தர் முடிக்கங்கை நாதர் புவிபடைத்த
நற்பா சனத்தர் பலிக்ககந் தோறு நடந்துபெற்ற
வற்பா சனத்த ரமுதா சனத்தர்க் கரிபவரே. 63

அரிய தரத்த மருந்திடு கங்குலென் ருனேயஞ்சித்
திரிய தரத்த மயில்பொருட் டாவரல் செய்யகையாற்
கரிய தரத்த நஞ்சேற்றுண் டபோது கலந்தமுதே
புரிய தரத்தனஞ் சேர்புக லூரர்தம் பொன்வரைக்கே. 64

வரைத்தவ ரால மராரெயின் மூன்று மடியச்செந்தீ
நிரைத்தவ ரால மராதித் திருமுனி நீருடன்வந்
திரைத்தவ ரால ம்ராவதி காத வெழும்புகலூர்
உரைத்தவ ரால மராவிட வாட லுகந்தவரே. 65

உகந்தந்த வாமத் திடத்தே யொருத்தியை வைத்தொருத்தி
சுகந்தந்த வாமுடி யாளவைத் தோன்றெல்லே யாகமத்தின்
அகந்தந்த வாரணத் தையன் பணிபுக லூரனண்ணி
முகந்தந்த வாவெனக் காற்ரு தொழிகை முறைமையன்றே. 66

அன்றிருக் கைக்கும் முதலாய பூதத் தடைவகைநல்க
நின்றிருக் கைக்குத் திருக்கைதந் தாளினு நீண்முடிமேற்
சென்றிருக் கைக்குமங் கைக்குமே லென்கொல் சிந்தையிலென்
வன்றிருக் கைக்குலேக் கும்புக லூரின் மகிழரசே. 67

அரசம லங்கு தடந்தோறு நீலமு மம்புயமும்
விரசம லங்கு புனர்புக லூரரை மெய்ப்படவே
பிரசம லங்கு மலர்க்குதி லாதிலே பெற்றதிட்டுப்
பரசம லங்குல வும்பவம் போங்தொழும் பத்தர்களே. 68

பத்தரத் தத்தி லறுகுக்கு முத்திப் பதங்கொடுக்கும்
பித்தரத் தத்தி லணங்குடை யார்பெற்ற மூருமையர்
புத்தரத் தத்தின் மலர்போல் பவர்புகலூரரொன்னுர்
சுத்தரத் தத்திற் குளித்தொளி ராகின்ற சூலத்தரே. 69

சூலத் திருப்புக்குத் தெவ்வீழ் சுடலேத் துகளணிந்த
சீலத் திருப்புக்கு வான்போற் றுவவுமை செய்யகண்டத்
தாலத் திருப்புக்குந் தென்புக லூர்பதி யானதற்கு
நீலத் திருப்புக்கு வாழ்கின்ற பாகத்து நீர்மைக்குமே. 70

மைக்கு வளேக்குத் துயிலுக்கு மால்விடை முன்றெழுத
கைக்குவ ளேக்கும் வளேத்திட வாருங் கனங்குழையீர்
அக்கு வளேக்குழை யாகத்தர் காதரெட் டானேநின்ற
திக்கு வளேக்கு மெயிற்புக, லூரர்தந் தேர்வரினே. 71

தேரிர விக்குமுற் காகள மானமுட் சேவலில்லா
ஊரிர விக்குப் பகையா யினபுக லூரிறைவர்
பேரிர விக்கு நகப்பூண் டவர்கொன்றை பெய்வளேயீர்
தாரிர விக்கும் படியெங்ங னீரித் தழலெனக்கே. 72

என்னேயன் பாலடித் தொண்டுகொண் டோன்புக லூரனில்லா
அன்னேயன் பால னருந்தமிழ்ப் பாவ னறுமுகத்தோன்
றன்னேயன் பாலணங் காளநின் ருேனடி தாழ்குலத்துப்
பின்னேயன் பாலரி தாமெளி தாமன்பர் பேதமைக்கே. 73

பேதம் பலவன் பிதாவும் பிதாமக னும்பழமை
ஓதம் பலவன்-புகலூர் மருங்கி ஞெளிசிறந்த
சூதம் பலவன் புயர்சோலே வல்லி சுடர்க்குழைமேற்
போதம் பலவன் பகைகாணின் கொங்கை புவிதனக்கே. 74

தனகன கற்பகஞ் சங்குசிங் தாமணி தாமரையே
உனகன கக்கைக ளென்றும் பிறரை யுரைத்திளைத்தே
னனகன கத்தும் புகலூ ரிடத்து மமர்ந்தவனே
நினகன கத்தும்பை யிட்டாரோ டென்றென்னை நீ வைப்பதே. 75

வைப்போ ரரிக்கு மழல்போன் மெனவந்தேன் வன்பிறப்பை
நைப்போ ரரிக்கு நகையொழித் தோரற்றை நாள்விசயன்
கைப்போ ரரிக்குக் கமுகோடி கல்புக லூரர்கருப்
பைப்போ ரரிக்குத் தசவவ தாரம் படைத்தவரே. 76

படையிலங் கைக்குரங் கைப்படை யாகப் படைத்துவெற்றி
அடையிலங் கைக்குலஞ் செற்றவ னென்றறி யாமலந்த
விடையிலங் கைக்கு மரிதேடி யபுக லூரரென்றன்
கிடையிலங் கைக்குயிர் மாருமுன் வந்து கிடைப்பவரே. 77

கிடைப்ப ரவைக்கும் பதினு லுலகிற்குங் கேசவற்கும்
படைப்ப ரவைக்குமற் றியாவைக்குந் தோற்றமவன்பாதலத்துப்
புடைப்ப ரவைக்குறித் தாடும்பி ரான்பு கலூரனன்ன
நடைப்ப ரவைக்குத் திருத்தூது சென்ற நளினத்திலே. 78

நளிநகத் தாமரைத் தாதையு மொக்கு நகுதலைகொய்
ஒளிநகத் தாமரைக் கைப்புக லூரரை யூருகின்ற
நெளிநகத் தாமரை வேள்விக்கு நீத்ததென் னிலவண்ணக்
கிளிநகத் தாமரை மாத்திரைக் கேதலை கெட்டனரே. 79

கெட்ட விருப்பு மனமே யுனக்கொன்று கேண்மடவார்
துட்ட விருப்பு மெய்யென்று கொள்ளாது சுடர்ப்பவளம்
விட்ட விருப்பு வளைபுக லூரரை மேவுநமக்
கிட்ட விருப்புச் சிவலோக மாக்குவ ரிப்பொழுதே. 80

பொழுதுகத் தும்பெரி தான திராவென்றன் பூவைகொன்றைக்
கழுதுகத் தும்பைச் சரகுங் கொடாளைய மேற்குமையன்
கழுதுகத் துஞ்சுடு காட்டகத் தாடி கபாலியென்னும்
பழுதுகத் துள்ள வற்கோ புகலூரைப்பதி யென்பரே. 81

பதியையன் ருனு மரியும் பணிபுக லூரன்பண்டை
விதியையன் ருநகு சென்னிகொய் தோன்செய்த வேணியின்மேல்
நதியையன் ருடு மமுதத்து முன்வந்து நாளுமிந்த
மதியையன் ருயினெத் தெய்வத்தை யான்ருெழ மற்றிலையே. 82

மற்றிலை யாவி தளரும் பொழுதுமுன் வந்துநிற்பார்
நற்றிலை யாடக மன்றுடை யாரன்றி நாமவரைப்
புற்றிலை யாபுக லூரிலை யாவெனப் போற்றியின்றே
சற்றிலை யாயினுந் தூவுநெஞ் சேபிணைச் சாவிலையே. 83

சாவிலை யாகவக் காமனைச் செற் றதழற்கண்ணனே
மூவிலை யாகவ வேற்படை யாய்முதல் வாகமலப்
பூவிலை யாக வண்டுகள் பூச லிடும்புகலூர்க்
கோவிலை யாகவ லாவழும் பேதைநின் கொன்றையென்றே. 84

என்றை யலங்கலை கொள்வா னென்றுசென் றேத்திநின்பொற்
கொன்றை யலங்கலை நல்கென வாருங் குறிக்கவெட்டா
ஒன்றை யலங்கலை நான்மறைப் யோர்பெற வுண்மைசொன்ன
நன்றை யலங்கலை நீர்ப்புக லூரனை நாம்பணிந்தே. 85

பணிப்பா யலையுடைப் பச்சைப் பொருப்பொரு பாகத்தனே
மணிப்பா யலைவளை தென்புக லூரவென் மையல்வந்து
தணிப்பா யலையது தானிற்க யாமந் தனிலிளைத்தேன்
துணிப்பா யலைநகை தோற்ருனை யென்னெதிர் தோற்றுவித்தே 86

தோற்றுவ ராக வரிபணி யும்புக லூரன்றுய்ய
நூற்று வராக வரனரு ளோவென்பர் நுண்ணிடையைப்
போற்றுவ ராகவ வேல்விழி பார்ப்பர்நின் பொன்னடிவீழ்ந்
தாற்றுவ ராக வணங்கே யிவைமன்ன ராதரவே. 87

ஆதர வாமனம் வெற்பிற் குயிலுட னுயினிந்த
மாதர வாமன மீளவி டாததென் வண்புகலூர்ச்
சீதர வாமன வென்னநின் ருேன்பணி சேவடியாய்
பூதர வாமன வாநகை யாநின் புகழ்நினைந்தே, 88

நினையா வருந்து நகைக்கு முயிர்க்கு நினதுகொன்றை
புனையா வருந்துயர் போவதெப் போதெனும் பூவுநெல்லுஞ்
சினையா வருந்துந் திருப்புக லூரவென் சேயிழையின்
றுணையா வருந்துதிக் குந்திரு நாம முரைத்தழுமே. 89

அழவிடைக் கேயுரல் கட்டுண்டு பின்வர வாயர்வெண்ணெய்
துழவிடைக் கேசவன் காணுத பங்கயஞ் சுற்றமெல்லாம்
விழவிடைக் கேயுயிர் கால்வைத் தலமரும் வேலைவெள்ளை
மழவிடைக் கேவருந் தென்புக லூர்தொழ வல்லவர்க்கே. 90

வல்லிக் குழைமுலை வார்த்தைகண் வெண்ணகை வால்வளைக்கை
வல்லிக் குழைமுலை காந்தளொப் பீர்மலை யான்மகிழும்
வல்லிக் குழைமுலை பாடிநின் ருடி வரும்புகலூர்
வல்லிக் குழைமுலை யாந்தாளி நாளை மலர்கின்றதே. 91

மலரப் பணையி லுழைவிழி நீருமிவ் வல்லிரவும்
புலரப் பணையி லுழையமன் மாறிடப் பூங்கைமள்ளர்
அலரப் பணையி லுழையெழுஞ் சேலொ டமர்தொலைந்த
புலரப் பணையிலுழைபுக லூரகண் பார்த்தருளே. 92

அருளோ தனம்பெறி னுள்ளவர் பின்சென் றளகமுமக்
கிருளோ தனங்குவ டோவென் பரேசில ரின்பணில
முருளோ தனந்தும் புகலூ ரரைத்தொழி னுண்மையிம்மை
பொருளோ தனந்துகி லின்பந் தருவர் புரிகிலரே. 93

புரிதவத் தைக்குறித் தந்தணர் வாழ்புக லூரரசே
கிரிதவத் தைக்கு மயிற்கை யனத்த கிளர்மறையின்
சரிதவத் தைக்கடந் தப்பாலு மாய்நின்ற சங்கரனே
அரிதவத் தைக்குநின் ருளருள் வாயென் னவசத்திலே. 94

அவசங்க ராசலங் கொண்டுநின் பேர்சொல வாழியங்கைத்
துவசங்க ராவிழத் தோற்றுவித் தோய்தொலை யாநிலவை
நவசங்க ராசி தரும்புக லூரவென் னுவைக்கொண்டு
சிவசங்க ராவென மாட்டே னெனக்குன் றிருவுளமே. 95

திருப்பதத் தத்தி கிரிக்கிரி வீழ்சிவ னுக்கிருப்புப்
பருப்பதத் தத்தி யுரிபோர்வை பாய்புலித் தோலுடுக்கை
நெருப்பதத் தத்திற் புகலூரர் நாம நிலாமுடிப்ப
திருப்பதத் தத்தி லிளமதியின் மூவெயி லெய்ததுவே. 96

எய்தவந் தப்புரங் காட்டிய வேளு மெரிநகையாற்
பெய்தவந் தப்புரப் பேறுபெற் றுன்பெற்ற தாதைசென்னி
கொய்தவந் தப்புர மாதின்பொற் றேளிணை கூடுதற்கு
மொய்தவந் தப்புர வோன்புகலூரன் முருக்கிடவே. 97

முருகவி ராமன் முடியா முடிவின் முதல்வனென்று
பெருகவி ராமன் பணிபுக லூரவென் பேதைநெஞ்சம்
பருகவி ராமன் மதன்வரும் போது பவளஞ்செவ்வி
தருகவி ராமன் பிலர்க்குரு வென்னுந் தனியடைந்தே. 98

அடைக்கல னுனுன் னடித்தா மரையிணைக் கைந்தெழுத்தாம்
படைக்கல னுவிலுண் டஞ்சே னெவர்க்கும் பணிமொழியார்
உடைக்கல னுணல முள்ளம் பலியொ டுகந்து கொள்ளு
முடைக்க லனுத புகலூர யாவர்க்கு முன்னவனே. 99

முன்னஞ் சயிலத் தருகவென் றேற்றது முல்லைப்பச்சை
அன்னஞ் சயிலத் தையாற்று மென்றேவரி யோடமரர்
வென்னஞ் சயிலத்தர் தென்புக லூரையர் மேருவென்னும்
பொன்னஞ் சயிலத் திருச்சிலை வாங்கிய பூவொன்றிலே. 100

திருச்சிற்றம்பலம்

# திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய
# திரு இராமனதீச்சரத் தேவாரம்

*திருச்சிற்றம்பலம்*

*சங்கொளிர் முன்கையர் தம்மிடையே*
*அங்கிடு பலிகொள்ளும் அவன்கோபப்*
*பொங்கர வாடலோன் புவனி யோங்க*
*எங்குமன் இராமன தீச்சரமே.* 1

*சந்தநன் மலரணி தாழ்சடையன்*
*தந்தம தத்தவன் தாதையோதான்*
*அந்தமில் பாடலோன் அழகன் நல்ல*
*எந்தவன் இராமன தீச்சரமே.* 2

*தழைமயி லேறவன் தாதையோதான்*
*மழைபொழி சடையவன் மன்னுகாதில்*
*குழையது இலங்கிய கோலமார்பின்*
*இழையவன் இராமன தீச்சரமே.* 3

*சத்திய ளாதியோர் தையல் பங்கன்*
*முத்திய தாகிய மூர்த்தியோதான்*
*அத்திய கையினில் அழகுசூலம்*
*வைத்தவன் இராமன தீச்சரமே.* 4

*தாழ்ந்தகு ழற்சடை முடியதன்மேல்*
*தோய்ந்த இளம்பிறை துளங்குசென்னிப்*
*பாய்ந்த கங்கையோடு படஅரவம்*
*ஏய்ந்தவன் இராமன தீச்சரமே.* 5

சரிகுழல் இலங்கிய தையல்காணும்
பெரியவன் காளிதன் பெரியகூத்தை
அரியவன் ஆடலோன் அங்கையேந்தும்
எரியவன் இராமன தீச்சரமே. 6

மாறிலா மாதொரு பங்கன் மேனி
நீறது ஆடலோன் நீள்சடைமேல்
ஆறது சூடுவான் அழகன்விடை
ஏறவன் இராமன தீச்சரமே. 7

தடவரை யரக்கனைத் தலைநெரித்தோன்
படஅர வாட்டிய படர்சடையன்
நடமது ஆடலான் நான்மறைக்கும்
இடமவன் இராமன தீச்சரமே. 8

தனமணி தையல்தன் பாகன்தன்னை
அனம்அணி அயன்அணி முடியுங்காணான்
பனம்அணி அரவரி பாதங்காணான்
இனமணி யிராமன தீச்சரமே. 9

தறிபோலாஞ் சமணர்சாக் கியர்சொற் கொளேல்
அறிவோரால் நாமம் அறிந்துரைமின்
மறிகையோன் தன்முடி மணியார்கங்கை
எறிபவன் இராமன தீச்சரமே. 10

தேன்மலர்க் கொன்றையோன் * *
* * * *
* * * *
* * முந்தமக் கூனமன்றே. 11

திருச்சிற்றம்பலம்.

# அரசாங்க தென் இந்திய கல்வெட்டறிக்கை

## 1927-28

## தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் கோட்டம் திருப்புகலூர்

**அக்கினிபுரீசுவரர் கோயில் அர்த்த மண்டபத்திலுள்ள தூணில்:**

42. தூணை எழுப்பியவன் அரையன் கங்கை கொண்டானாகிய சோழவிச் சாதரப் பல்லவரையன்.

**அதே கோயில் அக்கினிபுரீசுவரர் கர்ப்பக்கிரக வடசுவரில்:**

43. கோயிலுக்குச் சொந்தமான திருவாபரணங்கள், நவமணிகள் இவைகளின் நிறையைக் காட்டும் பட்டியல்.

44. பரகேசரிவர்மன் இராஜேந்திரசோழன் (10-ஆம் ஆட்சி ஆண்டு) 'திருமன்னி' என்று தொடங்குகிறது. கோயிலிலிருந்து 150 பொற்காசுகள் பெற்றுக் கொண்டதற்காக, க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பனையூர் நாட்டின் பிரமதேயமான பூலோக சதுர்வேதி மங்கலம் ஊர்ச்சபையார் கோயிலுக்குச் சொந்தமான நிலத்திற்குரிய வரியைத் தள்ளுபடி செய்தது.

45. இராஜகேசரிவர்மன் என்கிற உடையார்...... (28-ஆம் ஆட்சி ஆண்டு)—"திங்களேர்தரு" என்று முதல் இராஜாதிராஜன் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. இறைவனுக்கு அதிகாலை அபிஷேகமான பின்பு பூசைக் கானவைகளுக்காக தோட்டக்குடி ஊர் மக்கள் கோயி லுக்கு நிலம் விற்றது.

46. இராஜகேசரிவர்மன் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழன் (15-ஆம் ஆட்சி ஆண்டு)—'புகழ் மாது' என்று தொடங்குகிறது. புகலூர் **கோணப் பெருமாள்** சந்நிதியில் திருவிளக்கெரிப்பதற்காக சிறுபுலியூர்க்காரர் ஒருவர் 96 ஆடுகள் வழங்கியது.

47. இராஜ கேசரிவர்மன்...(16-ஆம் ஆட்சி ஆண்டு) —'திருமகள்போல' என்ற மெய்க்கீர்த்தியுடன் ஆரம்பிக் கிறது. இராஜராஜ தேவனின் தேவியான நக்கன் தில்லை யழகியார் என்கிற பஞ்சவன் மாதேவியார் தன்னுடைய பிறந்த நட்சத்திரமான சதயத்தில் மாதந்தோறும் கோயி லில் விழா நடத்துவதற்கும், பூசைப்பொருள்களுக்கும் ஆக வரியில்லாமல் நிலம் வழங்கியது. அதைத் தொடர்ந் துள்ள இன்னுமோர் கல்வெட்டில் அவ்வரசியார் திருவாப ரணங்கள் வழங்கியதைக் குறிக்கிறது.

48. இராஜ கேசரிவர்மன் உடையார் இராஜாதி ராஜதேவன் (32-ஆம் ஆட்சி ஆண்டு)—'திங்களேர் பெற' என்று துவங்குகிறது. கோயிலில் **சிவபுரத்துத்தேவரை** எழுந்தருளச் செய்ததற்குப் பூசைக்கு வேண்டியவற்றிற் காக வரியில்லாமல் ஒரு பெண் நிலதானம் செய்தது.

49. இராஜ கேசரிவர்மன் உடையார் இராஜாதிராஜ தேவன் (27-ஆம் ஆட்சி ஆண்டு)—'திங்களேர்தரு' என்று

தொடங்குகிறது. சதய நட்சத்திரத்தில் திருப்புகலூர்க் கோயிலிலுள்ள **நாவலிங்கேசுவரரின்** அம்பிகைக்கு விழா நடத்தும் செலவிற்காக இங்கா நாட்டு செல்லிய மங்கலத்தைச் சேர்ந்த பிச்சன் சீருடைக் கழல் என்ற அந்தணப் பெண் பொருள் வழங்கியது.

50. 'சாலையில் கப்பல்களை யழித்த' இராஜ கேசரி வர்மன் (12-ஆவது ஆட்சி ஆண்டு)—அம்பர் என்ற ஊரைச் சேர்ந்த வணிகன் ஒருவன் கோயிலில் திருவிளக் கேற்றுவதற்காக, பனையூர் நாட்டுப் பிரமதேயமான எயின னூரில் நிலம் வழங்கியது.

51. இராஜகேசரிவர்மன்......(7 - ஆம் ஆட்சி ஆண்டு)—புறங்கரம்பை நாட்டுத் திருப்பேரூர் ஊர்த்தலை வனை காடன் வைகுந்தன் என்பவனுடன், அவன் கொடுத்த தொகைக்குரிய வட்டியைக் கொண்டு மூன்று அந்தி விளக்குகள் எரிப்பதற்காகக் கோயில் தருமகர்த் தர்கள் செய்து கொண்ட ஒப்பந்தம்.

52. பரகேசரிவர்மன் இராஜேந்திர சோழதேவன் (5-ஆம் ஆட்சி ஆண்டு)—'திருமன்னி வளர' என்று தொடங்குகிறது. பூலோக சதுர்வேதி மங்கலத்துச் சபை யினர், **ஸ்ரீ காமேசுவரம் உடையார்** பூசைக்காகவும், வேத பாராயணத்திற்காகவும் கோயிலுக்குச் சொந்தமான சில நிலங்களுக்கு வரிவிலக்கு செய்தது.

53. 'திங்களேர்தரு' என்று தொடங்குகிறது. வரிக் குறைப்பைச் சொல்லுகிறது.

54. இராஜகேசரிவர்மன்......(21-ஆம் ஆட்சி ஆண்டு)—'திருமகள் போல' என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. அரசனும் அவன் தேவியான பஞ்சவன்

மாதேவியாரும் தாங்கள் பிறந்த நட்சத்திரமான சதயத்தில் கோயிலில் சிறப்புப்பூசை செய்வதற்காக வழங்கிய நிலங்களுக்கு பனையூர் நாட்டுப் பிரமதேயமான காரோடுசேரிச் சபையினர் வரி தள்ளுபடி செய்தது.

**அக்கினீசுவரர் கோயில் வட, மேல், தெற்குச் சுவர்களில் :**

55. இராஜ கேசரிவர்மன் இராஜராஜதேவன் (22-ஆம் ஆட்சி ஆண்டு)—மேலேயுள்ள கல்வெட்டைத் தொடர்ந்து இருக்கிறது. அதே மெய்க்கீர்த்தியுடையது. காரோடுசேரி மக்கள், **திருப்புகலூர் கோணப் பெருமாள்** கோயிலுக்கு நந்தவனத்திற்காக நிலம் விற்றது.

**அக்கினீசுவரர் கோயில் வடபுறச் சுவரில் :**

56. ...(7-ஆம் ஆட்சி ஆண்டு)—காடன் வைகுந்தன் (மேலே 51-ல் குறிக்கப்பட்டவன்) **புகலூர் மகாதேவருக்கு** பொன்னாலான பூ வழங்கியது.

57. பரகேசரிவர்மன் இராஜேந்திர தேவன் ([5]-ஆம் ஆட்சி ஆண்டு)—'திருமகள் மருவிய' என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. விஜயராஜேந்திர வளநாட்டுப் புலியூர் நாட்டிலுள்ள வேலூரைச் சேர்ந்த பாற்கரன் அருமொழி என்கிற அகாரநடாணிப் பல்லவரையருடன் கோயிலில் நூலேற்ற (கொடியேற்ற) விழாச் செலவுக்காக அவர் கொடுத்த 40 காசுகளுக்கு 10 காசு வட்டி கொடுப்பதாக புகலூர்ச் சபையினர் ஒப்பந்தம் செய்து கொண்டது.

58. இராஜகேசரிவர்மன் இராஜராஜதேவன் (19-ஆம் ஆட்சி ஆண்டு)—'திருமகள் போல' என்று தொடங்குகிறது. கோயிலிலிருந்து கடனைப் பெற்றுக்கொண்ட

தொகைக்கு வட்டியாக நெல் அளப்பதாகச் சிலர் ஒப்பந்தம் செய்து கொண்டது,

59 ஷெ...ஷெ—மும்மடிச் சோழ வளநாட்டின் பனையூர்நாட்டுத் தேவதானமான புகலூரிலுள்ள **கோணல்பெருமாள்** சந்நிதியில் மூன்று திருவிளக்குகள் ஏற்றுவதற்குச் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் குறிக்கிறது.

60. ஷெ...ஷெ—ஊரன் பொன்னம்பலம் என்ற பெண் உள்பட சிலர் கோயிலுக்கு இரண்டு பொற்பூக்கள் வழங்கியது.

61. ஷெ (20-ஆம் ஆட்சி ஆண்டு)—**கோணற்பெருமாள்** சந்நிதியில் அந்தித் திருவிளக்குக்காக ஊரன் பொன்னம்பலம் என்ற பெண் பொன் வழங்கியது.

62. இராஜராஜதேவன் (23-ஆம் ஆட்சி ஆண்டு)—அரசி பஞ்சவன் மாதேவியாரின் சத்துருபயங்கரந்தெரிந்த வேளத்தைச் சேர்ந்த செல்வன் ஆச்சான், **கோணப்பெருமாளுக்கு** ஒன்பது பொற்பூக்கள் வழங்கியது.

**அக்கீனிசுவரர் கோயில் வடக்கு, மேற்கு சுவர்களில் :**

63. பரகேசரிவர்மன் இராஜேந்திரதேவன் (11-ஆம் ஆட்சி ஆண்டு)—'இரட்டபாடி' என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. சிவபாதசேகரம் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்தைச் சார்ந்த தேவன் பட்டகள் பண்டாரமும் அவள் மகளும் புகலூர்க் கோயிலில் எழுந்தருளச் செய்திருந்த **சூரிய தேவருக்கும்**, அவர் இருதேவியாருக்கும் திருவாபரணங்கள் வழங்கியது.

64. இராஜகேசரிவர்மன் இராஜேந்திரதேவன் (6-ஆம் ஆட்சி ஆண்டு)—'திருமகள் மருவிய' என்று தொடக்

கம். மேற்சொன்ன பெண், கோயிலில் தான் எழுந்தருளச் செய்த **உலகுய்யக் கொண்ட சோழ சூரிய தேவருக்குப்** பூசைக்காகப் பொன் வழங்கியது.

**அதே கோயில் மேற்குச் சுவரில் :**

65. இராஜகேசரிவர்மன் இராஜ ராஜதேவன் (22-ஆம் ஆட்சி ஆண்டு)—'திருமகள் போல' என்று தொடங்குகிறது. **கோணப்பெருமாள்** சந்நிதியில் அந்தி விளக்கேற்றுவதற்கும், அர்த்தசாம பூசைக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டதைக் குறிக்கிறது.

66. பரகேசரிவர்மன்...(16-ஆம் ஆட்சி ஆண்டு)—குறும்பு நாட்டுப் பிரமதேயமான திரிபுர......த்திலுள்ள **கைலாயமுடைய மகாதேவர்க்கு** உத்தம சோழதேவியார் நிலம் விற்றது.

67. பரகேசரிவர்மன் இராஜேந்திரதேவன் (9-ஆம் ஆட்சி ஆண்டு)— 'இரட்டபாடி' என்று தொடங்குகிறது. அணுக்கியார் நாரணன் தீன சிந்தாமணியார் என்ற பெயர் காணப்படுகிறது.

**அதே கோயில் மேற்கு, தெற்கு சுவர்களில் :**

68. இராஜகேசரிவர்மன் இராஜ ராஜதேவன் (21-ஆம் ஆட்சி ஆண்டு)—'திருமகள் போல' என்று தொடங்குகிறது. இங்கு எழுந்தருளியுள்ள மூர்த்தியான **திருநாவுக்கரைய தேவருக்கு** நடுப்பகல், இரவு பூசைக்காக, ஆற்றுக்கு வடகரையிலுள்ள இராஜேந்திர சிம்ம வளநாட்டு வீர நாராயண சதுர்வேதி மங்கலத்து வீரசிகாமுகச் சேரியின் உள்கிடை குண்டூரைச் சேர்ந்த அங்கிகுமார கிரமவித்தன்

என்கிற பொற்கோயில் சண்டேசுவர ஜோகி என்பவன் பொருளும் நெல்லும் கொடுத்தது.

69. இராஜராஜ இராஜகேசரிவர்மன் இராஜராஜ தேவன் (27-ஆம் ஆட்சி ஆண்டு)—கணபதி பொன்னுழ்வி என்கிற சோலை என்ற பிராமணப் பெண்ணிடமிருந்து பெற்றபொருளுக்காக, புகலூர் சிவப்பிராமணர்கள் **கோணற் பெருமாள்** சந்நிதியில் விளக்கேற்றுவதாக ஒப்பந்தம் செய்து கொண்டது.

**அதே கோயில் தென்புறச் சுவரில் :**

70. இராஜகேசரிவர்மன்...(2 ஆம் ஆட்சி ஆண்டு)—**புகலூர் தேவருக்கு** வெள்ளிப்பாத்திரம் கொடுத்தது. இன்னொரு கல்வெட்டில் உத்தம சோழதேவனின் தேவியான பட்டன் தானதுங்கியார் வெள்ளிப்பாத்திரம் அளித்தது.

**அதே கோயிலின் தெற்கு வாயிலில் :**

71. அந்த வாயிலுக்கு 'இராசராசன் திருவாசல்' என்று பேர் குறிக்கிறது.

**அதே கோயில் தென்திருமாளிகைப் பத்திச் சுவரில் :**

72. இராஜகேசரிவர்மன் குலோத்துங்க சோழதேவன் (25-ஆம் ஆட்சி ஆண்டு)—'புகழ்மாது விளங்க' என்ற தொடக்கமுடையது. பாண்டிகுலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்திலுள்ள குறுக்காடி என்ற ஊர்த் தலைவனை திருச்சிற்றம்பலமுடையநம்பி, கோயிலில் நான்கு திருவிளக்குகள் ஏற்றுவதற்காகவும், காவிரியிலிருந்து திருமஞ்சனம் கொண்டு வருவதற்கு இரண்டு பேர்களை நியமிப்பதற்காகவும் வீடப்பட்ட நிலங்களுக்குச் சபையார் வரி விலக்கு செய்தது.

73. பாண்டியன் மாறவர்மன் குலசேகரதேவன் (19-ஆம் ஆட்சி ஆண்டு)—ஜெயமாணிக்க வளநாட்டு முளையூர் நாட்டின் பிரமதேயமான அருமொழித் தேவர் சதுர்வேதி மங்கலத்தார் சிலர் உய்யக்கொண்டார் வள நாட்டு அம்பர் நாட்டு அம்பரிலுள்ள சவரிப்பெருமான் சக்கரவர்த்தி சகாத்தன் மொண்ணை மருதன் அகளங்க நாடாள்வாருக்கு நிலவிற்பனை செய்தது.

74. பாண்டியன் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனே ரின்மை கொண்டான்—திருப்புகலூர்க் கோயிலில் கோதண்டராமன் சந்தியில் அரசன்பேரால் பூசனை செய் யும் உரிமை அவ்வூர் சிவப்பிராமணன் திருப்புகலூர் உடை யானுக்கு அளிக்கப்பட்டது,

75. பாண்டியன் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனே ரின்மைகொண்டான்—அரசன் பேரால் கோயிலில் கோதண்டராமன் சந்தியில் வழிபாட்டுச் செலவுக்காக விடப்பட்ட குலோத்துங்க சோழ வளநாட்டின் எயின னூர்ப் பகுதியில் முடிகொண்ட சோழப் பேராற்றின் தென்கரையிலிருக்கும் இராஜேந்திர சோழநல்லூர் என்ற தோட்டக்குடியிலுள்ள 45 வேலி நிலங்களின் வரி தள்ளு படி செய்ததற்கு அரச ஆணை பிறப்பிக்கப்பட்டது.

76. பாண்டியன் திரிபுவன சக்கரவர்த்தி கோனே ரின்மை கொண்டான் (4-ஆம் ஆட்சி ஆண்டு)—அரசன் பேரால் கோயிலில் ஏற்படுத்தப்பட்ட வீரபாண்டியன் சந் தியில் பூசை நைமித்திகங்கள் நிகழ சோமிதேவன் என் பான் வழங்கிய முடிகொண்டானாற்றுக்கும் அரிசிலாற்றுக் கும் இடையேயுள்ள பத்து வேலி நிலத்திற்குள்ள வரி தள்ளுபடி செய்த அரச ஆணையைக் குறிக்கிறது.

*77. சகம் 1581 (கொல்லம் 834-கி. பி. 1659)—வேளாக்குறிச்சி மகாதேவ பண்டாரத்தின் சீடர் அருணாசலத் தம்பிரான் கோயில் திருப்பணிகளை முடித்தது.*

**வடக்குப் பத்திச் சுவர்த்தூண் ஒன்றில்:**

*78. ஆர்க்காடு கிழான் சேதிராயன் அம்மண்டபத்தைக் கட்டியது.*

**உட்பிரகாரம் வடக்கு வாயிலிலுள்ள இரண்டு சிங்கத்தூண்களில்:**

*79. பரகேசரிவர்மன் இராஜேந்திர தேவன் (4-ஆம் ஆட்சி ஆண்டு)—'திருமகள் மருவிய' என்று தொடங்குகிறது. பூலோக மாணிக்க சதுர்வேதி மங்கலத்துச் சபையார் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களின் பேரிலுள்ள வரியை நீக்கியது.*

**இரண்டாவது பிரகாரம் கிழக்குச் சுவரில்:**

*80. பரகேசரிவர்மன் 'மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட' திரிபுவன சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவன் (10-ஆம் ஆட்சி ஆண்டு 52-ஆவது நாள்)—'புயல் வாய்த்து' என்று தொடங்குகிறது.* **இராஜாக்கள் தம்பிரான் திருவீதி** *என்ற தெரு அமைப்பதற்காகத் திருப்புகலூரிலும் தோட்டக்குடி என்ற இராஜேந்திர சோழ நல்லூரிலும் நிலங்கள் எடுத்துக் கொண்டது. முதலாம் குலோத்துங்க சோழதேவனின் 16-ஆவது ஆட்சி ஆண்டில் நில அளவு செய்யப் பட்டதைக் குறிக்கிறது.*

*81. இராஜகேசரிவர்மன் இராஜேந்திரதேவன் (2-ஆம் ஆட்சி ஆண்டு)—'திருமகள் மருவிய' என்று தொடங்குகிறது. சேனுமுகத்திலுள்ள துர்க்கை கோயிலில் கூடிய காரைக்கால் ஊர்ச் சபையார்,* **பொன்வேய்ந்த சோழன்** *என்ற நந்தவன நிலத்துக்குரிய வரியை நீக்கியது. இராஜ*

கேசரிவர்மன் வீரராஜேந்திர தேவனின் மூன்றுவது ஆட்சி ஆண்டில் பூத்தோட்டக்காரர்களின் ஜீவனத்துக்காக விடப் பட்ட நிலங்களுக்கு வரிக்குறைப்பு செய்தது.

82. பரகேசரி வர்மன் 'மதுரை கொண்ட' திரிபுவன சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவன் (10-ஆம் ஆட்சி ஆண்டு 123-ஆவது நாள்)—'புயல் வாய்த்து' என்று தொடங்குகிறது. கோயிலுக்குத் தச்சு வேலை செய்யும் உரிமையை மங்களதரையன் என்பவர் கேட்டுக் கொள் வதற்கிணங்க, சிலருக்குக் கொடுத்தது.

83. திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண் டான் (21-ஆம் ஆட்சி ஆண்டு 306-ஆவது நாள்)-காளிங்க ராயன் என்பார் கேட்டுக் கொண்டபடி கோயிலின் தச் சுரிமையில் பாதியை இருவர்க்கு வழங்கியது.

84. ஜடாவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி சுந்தர பாண்டிய தேவன் (10-ஆம் ஆட்சி ஆண்டு ஐப்பிசி 4-ஆவது நாள்)—வலங்கை, இடங்கை என்ற வகுப்பினருக் குள் ஒப்பந்தம் ஏற்படுத்தியது.

85. திரிபுவன சக்கரவர்த்தி இராஜராஜதேவன் (17-ஆம் ஆட்சி ஆண்டு)—இராஜேந்திரசிம்மவளநாட்டு இடையாள நாட்டின் பேரினூர் கிராமத் தலைவன் திருச் சிற்றம்பல மூவேந்த வேளான் கோயிலில் அந்தி விளக்குக் காகப் பொருள் வழங்கியது.

86. பரகேசரிவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி இராஜ ராஜதேவன் (19-ஆம் ஆட்சி ஆண்டு)—'பூமருவிய திருமா தும்' என்று தொடங்குகிறது. **குளிச்செழுந்த நாயனர்** கோயிலுக்குச் சொந்தமான நிலத்தின் வரியை தோட்டக் குடி என்கிற இராஜேந்திரசோழநல்லூர்ச் சபையார்

தள்ளுபடி செய்து அதனால் மிகுந்த தொகையைக்கொண்டு செங்கல்லினால் கோயில், மண்டபம், விக்கினேசுவரர் ஆலயம் கட்டியும், பூசை முதலியவற்றிற்கு ஏற்பாடுகளும் செய்தது.

87. பரகேசரிவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி இராஜராஜதேவன் (3-ஆம் ஆட்சி ஆண்டு 257-ஆவது நாள்)—'பூமருவிய திருமாதும்' என்று தொடங்குகிறது. நல்லொழுக்கமுடைய யோகி ஒருவர் அரசரின் நன்மையை நாடி நாள்தோறும் திருப்புகலுடையாரைத் தொழுதிருக்க திருமடவிளாகத்துக்கு வடகிழக்கே சேரமான்தோழன் என்ற துறவி கேட்டுக் கொள்ள ஒரு குகை எடுக்கப் பட்டது.

88. இராஜகேசரிவர்மன் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவன் (35-ஆம் ஆட்சி ஆண்டு)—'புகழ் மாது' என்ற மெய்க்கீர்த்தியுடன் துவங்குகிறது. **நம்பி முருகன்** திருமடத்தில் சித்திரை வைகாசி திருவிழா நாட்களில் மகேசுவரர்களுக்கு உணவளிக்க, அரசி ஏழுலகமுடையாரின் பணிப்பெண் இராஜராஜசோழன் அரம்பையார் வழங்கிய கயத்தூர் கிராம நிலத்தின் பேரில் கோயில் ஊழியர்கள் வாங்கிய பொருளுக்காக, குலோத்துங்க சோழ வளநாட்டுப் பனையூர் நாட்டிலுள்ள முடிகொண்ட சோழ சதுர்வேதி மங்கலச் சபையார் வரியைக் குறைத்தது.

89. மேற்படி மன்னன் (20-ஆம் ஆட்சி ஆண்டு)—அதே மெய்க்கீர்த்தி. முடிகொண்ட சோழச் சதுர்வேதி மங்கலம் சபையார், அச்சபையில் கணக்கு வேலை பார்த்து விட்டு இறந்த ஒருவரின் ஆன்ம சாந்திக்காக கோயிலில் சித்திரை ஐந்தாம் நாள் திருவிழா நடத்தும் ஏற்பாட்டிற்காக விடப்பட்ட நிலத்தின் பேரிலுள்ள வரியை நீக்கியது.

*90.* மேற்படி மன்னன் (46-ஆம் ஆட்சி ஆண்டு)—அதே மெய்க்கீர்த்தி. பாண்டி குலாசனி வளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்தின் இறையூர்வாசி யொருவரிடம் புகலூர் தேவர் கோயில் அதிகாரிகள் வாங்கிக் கொண்ட பொருளைக் கொண்டு கோயிலில் அமாவாசைத் திருநாளும், பூசை நைமித்திகங்களும் நடத்துவதாக ஒப்பந்தம் செய்து கொண்டது. **மதுராந்தகன் மாடை** என்ற நாணயம் குறிக்கப் படுகிறது.

*91.* மேற்படி அரசன் (29-ஆம் ஆட்சி ஆண்டு)—அதே மெய்க்கீர்த்தி. இறையூர் வேளாளன் அரையன் கழல் சிங்கம் என்ற அறிந்தவன் பல்லவன் கோயிலுக்கு நந்தவனத்திற்காக விடப்பட்ட நிலவரியை முடிகொண்ட சோழ சதுர்வேதி மங்கலச் சபையார் தள்ளுபடி செய்தது.

*92.* மேற்படி மன்னன் (30-ஆம் ஆட்சியாண்டு)—அதே மெய்க்கீர்த்தி. மேற்சொன்ன வேளாளனிடம் **புகலூர் தேவர்** கோயில் சிவப்பிராமணர்கள் பெற்றுக்கொண்ட பொருளுக்காக கோயிலில் ஒரு நந்தா விளக்கு எரிப்பதென்று ஒப்பந்தம் செய்துகொண்டது.

*93.* பரகேசரிவர்மன்—'மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்ட' திரிபுவன சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவன் (15-ஆம் ஆட்சி ஆண்டு)—'புயல் வாய்த்து' என்று தொடங்குகிறது. வாணகோவரையன் கேட்டுக்கொண்டபடி கோயிலில் தேவாரத் திருப்பதிகங்கள் பாடும் உரிமையை, திருவெண்ணெய்நல்லூர் சோழேந்திரசிம்ம பிச்சன் என்ற தேவாரம் பாடுபவர்க்கு அளிக்கப்பட்டது.

94. இராஜகேசரிவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவன் (30-ஆம் ஆட்சி ஆண்டு)— 'புகழ்மாது' என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. முடிகொண்ட சோழத் தென்கரை நாட்டு விழுப்பரையர் என்பவரிடம் பெற்றுக்கொண்ட பொருளுக்காக, கோயி லில் நந்தா விளக்கு எரிப்பதென திருப்புகலூர்ச் சபையார் ஒப்பந்தம் செய்துகொண்டது. **தீனசிந்தாமணி** என்ற முகத்தலளவை குறிக்கப்பட்டிருக்கிறது.

95. மேற்படி மன்னன் (31-ஆம் ஆட்சி ஆண்டு)— அதே மெய்க்கீர்த்தி. **புகலூர்தேவர்** கோயிலில் இரண்டு விளக்குகள் எரிப்பதற்காக விடப்பட்ட நிலங்களின் வரியை, க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பனையூர் நாட்டின் பிரமதேயமான தானதுங்க சதுர்வேதிமங்கலம் சபையார் தள்ளுபடி செய்தது.

**அதே பிரகாரத்தின் வடபுறச் சுவரில் :**

96. சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவன் (49-ஆம் ஆட்சி ஆண்டு)—**புகலூர் தேவருக்கு** நடுப்பகல் நிவேதனம் செய்து பன்னிரண்டு பிராமணர்களுக்கு தாம் நம்பியார் குளம் தென்கரையில் எடுப்பித்த சாலையில் அமு தளிக்கும் செலவுக்காக வரியில்லாமல் (இறையிலியாக) பூலோக மாணிக்க சதுர்வேதிமங்கலம் சபையாரிடம் ஜெயங்கொண்ட சோழமண்டலம் புலியூர்க்கோட்டம் பேரூர் நாட்டு நெற்குன்றம் அரையன் கருவுணாகர் என்ற களப்பாளராயர் விலைக்கு வாங்கியது. (இவரே **திருப்புக லூரந்தாதி** பாடிய நெற்குன்றவாணர்).

97. பரகேசரிவர்மன் சக்கரவர்த்தி விக்கிரம சோழ தேவன் (2-ஆம் ஆட்சி ஆண்டு)—இராஜநாராயண வள

நாடடுத் திருவழுந்தூர் நாட்டின் தேவூரிலுள்ள மனதுக்கினியான் என்ற விராடராஜன் முடிகொண்ட சோழப் பேராற்றின் வடகரையில் திருப்புகலூரில் ஆதுலர்சாலை (மருத்துவ நிலையம்) பிணியாளர், திக்கற்றவர் இவர்களின் பராமரிப்புக்காக எடுப்பித்தான். **புகலூர்தேவர்** கோயில் நரலோக வீரமண்டபத்தில் கூடிய க்ஷத்திரியநாத சதுர் வேதி மங்கலம் சபையார், ஆதுலர்சாலை நடத்துவதற்காக மனதுக்கினியான் விலைக்கு வாங்கிய நிலத்திற்கு வரிதள்ளு படி செய்தது.

*98.* திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் (10-ஆம் ஆட்சி ஆண்டு 22-ஆவது நாள்)—இராஜாக்கள் தம்பிரான் திருவீதியமைப்பதற்காக திருப்புகலூரிலும் தோட்டக்குடி என்ற இராஜேந்திர. சோழநல்லூரிலும் எடுத்த நிலங்களை அரசனுடைய 10-ஆவது ஆட்சி ஆண்டிலிருந்து தேவதானமாக்கி அரச ஆணை பிறப்பித்தது. (மேலே 80-ஆம் கல்வெட்டு காண்க).

*99.* குலோத்துங்க சோழதேவன் (48–ஆம் ஆட்சி ஆண்டு)—**திருப்புகலூர்தேவர்** கோயிலுக்குச் சொந்தமான சில நிலங்களின் பேரிலுள்ள வரியை, திருமருகல் நாட்டுப் பிரமதேயமான திருமருகல் ஊர்ச்சபையார் அவ்வூர் மாணிக்க தேவர் மண்டபத்தில் கூடி, தள்ளுபடி செய்தது.

**அதே பிரகாரத்தின் மேற்குச் சுவரில் :**

*100.* குலோத்துங்க சோழதேவன் (24-ஆம் ஆட்சி ஆண்டு)—'புகழ்மாது' என்று தொடங்குகிறது. க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுச் சேற்றூர்க் கூற்றம் வானமாதேவி சதுர்வேதி மங்கலத்திலுள்ள உதய திவாகரன் தேவனிடம் சிவப்பிராமணர் சிலர் பொருள் பெற்றுக்கொண்ட

தற்காக, கோயிலில் பத்து அந்தி விளக்குகள் எரிய விடுவதாக ஒப்பந்தம் செய்து கொண்டது.

**அதே பிரகாரத்தின் தெற்குச் சுவரில்**

*101.* குலோத்துங்க சோழதேவன் (4-ஆம் ஆட்சி ஆண்டு)—அதே மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. பூலோக சதுர்வேதி மங்கலம் சபையார் கோயில் நிலங்களுக்கு வரிக் குறைப்பு செய்தது.

*102.* இராஜகேசரி வர்மன் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவன் (20-ஆம் ஆட்சி ஆண்டு)—குலோத்துங்க சோழவள நாட்டு பனையூர் நாட்டின் தானதுங்க சதுர்வேதி மங்கலம் சபையார் அவ்வூர் **கணபதீசுவரமுடைய மகாதேவருக்கு** அதிகாலைப் பூசைக்காக விடப்பட்ட நிலத்திற்கு வரி தள்ளுபடி செய்தது,

*103.* திரிபுவன சக்கரவர்த்தி இராஜராஜ தேவன் (5-ஆம் ஆட்சி ஆண்டு)—இராஜராஜ மங்கலதரையர், இடபவாகன தேவர்-இராஜராஜ விடங்கருக்கு செங்கழுநீர் மலர்கள் அணிவதற்கு ஏற்பாடு செய்வதற்காக, இராஜேந்திர சோழவள நாட்டு ஆலநாட்டு இராஜராஜ சதுர்வேதி மங்கலம் சபையாரிடம் நிலம் வாங்கியது.

*104.* இராஜகேசரிவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவன் (9-ஆம் ஆட்சி ஆண்டு)—'பூமன்னுபதுமம்' என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. தானதுங்க சதுர்வேதி மங்கலம் சபையார் **கைலாசமுடைய மகாதேவர்** கோயில் மண்டபத்தில் கூடி, வரியில்லாமல் கோயிலுக்கு நிலம்விற்றது. 'திருவுலகளந்த பன்னீரடிக்கோல்' என்ற நீட்டலளவை குறிக்கப்படுகிறது.

*105.* மேற்படி மன்னன் (47-ஆம் ஆட்சி ஆண்டு)— 'புகழ் மாது' என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. புகலூர் தேவருக்கு மாலைக் காலப்பூசைக்காக நக்கன் சொன்னவாறறிவன் என்ற செம்பியன் வழங்கிய நிலத்திற்கு இராஜேந்திர சோழநல்லூர்ச் சபையார் வரிநீக்கம் செய்தது.

**முதற்கோபுரத்தின் வலது கைப்புறமுள்ள அறைச் சுவரில்:**

*106.* ...(சக 1673-கலி 4852 பிரஜோற்பத்தி)— **வாதாபிப் பிள்ளையார்** கோயில் பிரகாரத்தில் காணும் கல்வெட்டுப்படி, இக்கல்வெட்டுப் பட்டியலில் குறித்துள்ள கிராமங்கள் குலோத்துங்கன் காலம் முதல் கோயிலுக்குச் சொந்தமானதாக உறுதி செய்யப்பட்டது.

**வெளிப் பிரகாரம் தென் சுவரில் :**


*107,* ...**இராஜராஜமுடைய நாயனர்** கோயிலுக்கு நில தானம் செய்தது. ருத்திரசோழ நல்லூர் என்ற கிராமம் குறிக்கப்படுகிறது.

*108.* 'மதுரையும், ஈழமும், கருவூரும் கொண்டு, பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய' திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழதேவன் (28-ஆம் ஆட்சி ஆண்டு)—குலோத்துங்க சோழவளநாட்டு அரசன்சேரியிலுள்ள **இராஜராஜேசுவர முடையார்** கோயில் குறிக்கப்படுகிறது.

110004

# ஆதரவு நூல்கள்


1. அப்பர் தேவாரம்—5 பதிகங்கள்-44 பாடல்கள்
2. சம்பந்தர் தேவாரம்—3 பதிகங்கள்-33 பாடல்கள்
3. சுந்தரர் தேவாரம்—1 பதிகம்-11 பாடல்கள்
4. சேக்கிழார் பெரிய புராணம்—முருகர், திருநாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர், ஏயர்கோன்கலிக்காமர் இவர்களுடைய புராணங்கள்.
5. பதினொராந் திருமுறை—பரணதேவர், பட்டணத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி
6. உமாபதி சிவாசாரியார்—திருப்பதிக் கோவை, திருப்பதிகக் கோவை, திருத்தொண்டர் புராண சாரம்
7. நெற்குன்றவாணர்–திருப்புகலூரந்தாதி (பெரும் புலவர் காமக்கூர் சுந்தர முதலியார் பதிப்பு)
8. சரண்யபுர மாஹாத்ம்யம்—(தமிழ் மொழி பெயர்ப்பு போலகம் சிரோமணி திரு, K. நாராயண சாஸ்திரிகள்-கையெழுத்துப் பிரதி)
9. அரசாங்கத் தென்இந்திய கல்வெட்டறிக்கை—1927-28.
10. தமிழ் இலக்கிய வரலாறு—கா. சுப்பிரமணியப் பிள்ளை M.A., M.L.,
11. கலைமகள் (மன்மத ஆடி, ஆவணி இதழ்கள்—திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களின் கட்டுரைகள்).



அகழ் சூழ்ந்த திருப்புகலூர்க் கோயில்



அக்கினீசுவரர், வர்த்தமானீசுவரர்
(இரண்டு மூலஸ்தானங்கள்)